


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 2019

We Are Here..!! To Guide You..!!



# WeShine Study Circle

## வாழ்க்கையில் தகுதி
## உள்ளவனைக் காட்டிலும்
## தன்னம்பிக்கை உள்ளவனே
## வெற்றி பெறுகிறான்..!!

Main Office @

**WeShine Study Circle**

4(8B) Rangaswamy Street, (Near Adayar Bhavan)

Pudhuvai Nagar West, Chromepet, Chennai, Tamil Nadu 600044

Phone : 8939144344,8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block, 7th Main Road,
Annanagar,(Next To Metro Water Pump),
Chennai, Tamil Nadu 600040.

3rd Floor,West Wing,Gokul Arcarde,
No.2,Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

# பொருளடக்கம்


04 - 16 தமிழக நிகழ்வுகள்

17 - 64 இந்திய நிகழ்வுகள்

64 - 89 சர்வதேச நிகழ்வுகள்

89 - 92 பொருளாதார நிகழ்வுகள்

92 - 94 விருதுகள்

94 - 101 நியமனங்கள்

101 - 107 அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

107 - 120 விளையாட்டு நிகழ்வுகள்

120 - 130 முக்கிய தினங்கள்

130 - 131 பாதுகாப்பு செய்திகள்









# தமிழக நிகழ்வுகள்

1. “தமிழ்நாடு தினம்” எப்போது கொண்டாடப்படுகிறது?

**விடை :** நவம்பர் 1

**விளக்கம்**

- **தமிழ்நாடு தினம்** - முதல்முறையாக **அரசு விழாவாக கொண்டாடுகிறது தமிழக அரசு.**
    - மெட்ராஸ் மாகாணம் என்பது “மெட்ராஸ் ஸ்டேட், ஆந்திரம், கர்நாடகம், கேரளம் என 1956ம் ஆண்டு **நவம்பர் 1** இல் பிரிக்கப்பட்டது.
    - **செய்தி துளிகள் :**
        1. மெட்ராஸ் ஸ்டேட் என்பது (தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்ய) 1967 ஆம் ஆண்டு ஜீலை 18ம் தேதியன்று சட்ட பேரவையில் தீர்மானம் முன்மொழியப்பட்டு நிறைவேறியது.
        2. ஜனவரி 14, 1969 – ம் ஆண்டு தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
        3. தமிழக தமிழ் வளர்ச்சி துறை சார்பில் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

2. தமிழக அமைச்சரவை புதிதாக எத்தனை தொழில் திட்டங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது?

**விடை :** 7

**விளக்கம்**

- **புதிதாக 7 தொழில் திட்டங்களைத்** தொடங்க **தமிழக அமைச்சரவை அனுமதி** வழங்கியுள்ளதாகத் தெரிகிறது.
    - **செய்தி துளிகள் :**
        - ஏழு தொழில் நிறுவனங்களை விரிவாக்கம் செய்வதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டதாகவும், புதிதாகத் தொழில் தொடங்க

வருபவர்களை ஊக்குவிக்கும் விதமாக பல்வேறு சலுகைகளை வழங்கி முதலீடுகளை ஈர்ப்பது குறித்தும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

3. விலங்குகளுக்கான நடமாடும் மருத்துவ ஊர்தி (AMMA – Animal Medical Mobile Ambulance) சேவையின் கட்டணமில்லா எண் என்ன?

**விடை :** 1962

**விளக்கம்**

- ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்ட **விலங்குகளுக்கான நடமாடும் மருத்துவ ஊர்தி** (AMMA – Animal Medical Mobile Ambulance) சேவையானது கடந்த சில மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது.
    - தற்போது இது மீண்டும் தமிழக முதல்வரால் துவக்கி வைக்கப்பட்டிருக்கின்றது.
    - இதற்கான **கட்டணமில்லா எண் 1962** ஆகும்.
    - **செய்தி துளிகள் :**
        - இது முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் 2016ஆம் ஆண்டில் துவக்கி வைக்கப்பட்டது.
        - விலங்குகளுக்கு, அதிலும் குறிப்பாக கால்நடைகளின் இருப்பிடங்களுக்கே சென்று சிகிச்சை அளிப்பதற்கான அம்மா சேவையானது அறிமுகப்படுத்தப்பட்டது.
        - இந்தத் திட்டத்திற்கு தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தால் நிதியுதவி அளிக்கப்படுகின்றது.

4. பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக எந்த திட்டத்தை சென்னை காவல் துறை அறிமுகப்படுத்தி உள்ளது?

**விடை :** தோழி

**விளக்கம்**



We Shine Academy ™

- **பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக 'தோழி' என்ற புதிய திட்டத்தை சென்னை காவல்துறை அறிமுகப்படுத்தி** உள்ளது.
    - பாலியல் வன்கொடுமைக் குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கும் வகையில் சென்னையில் உள்ள 35 அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் தலா இரு காவலர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் 'தோழி' திட்டத்தின் மூலம் வழங்கப்பட உள்ளது.
    - நிகழ்ச்சியில் ஆணையர் விசுவநாதன், தோழி திட்டத்தில் பயிற்சி பெறும் 70 பெண் காவலர்களுக்கு நிர்பயா முத்திரையையும், இளஞ்சிவப்பு வண்ண சீருடையும் வழங்கினார்.
    - **செய்தி துளிகள் :**
        - சென்னையில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்ற தடுப்புப் பிரிவுக்கு 'அம்மா' ரோந்து வாகனங்கள் உள்ளன.
        - இந்த வாகனங்களில் வகையில் வெள்ளை, இளஞ்சிவப்பு (Pink) வண்ணங்கள் பூசப்பட்டுள்ளன. இந்த வாகனங்களில் அம்மா ரோந்து வாகனம் (Amma Patrol) எனவும் எழுதப்பட்டுள்ளது.
        - குழந்தைகளுக்கான அவசர இலவச தொலைபேசி எண் 1098, பெண்களுக்கான அவசர இலவச தொலைபேசி எண் 1091 ஆகியவையும் எழுதப்பட்டுள்ளன.

5. எந்த மாநிலத்தை சேர்ந்த மாணவர்கள் ஒரு லட்சம் விதை பந்துகளை உருவாக்கினார்?

**விடை :** சேலம்

**விளக்கம்**

- **சேலம் மாவட்டம்,** காடையாம்பட்டி, பண்ணப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில், நாட்டு நலப்பணி திட்டத்தில் பங்கேற்றுள்ள மாணவர்கள், சுற்றுச்சூழலை பாதுகாக்க, மரங்களை வளர்க்க, வேம்பு, புங்கன் என **ஒரு லட்சம் விதை பந்துகளை உருவாக்கினர்.** டேனிஷ்பேட்டை வனச்சரகர் பரசுராம மூர்த்தி தலைமையில், விதைப்பந்து வீசும் பணியை, நேற்று முன்தினம், மாணவர்கள் துவங்கினர்.
  - தின்னப்பட்டி, காஞ்சேரி, புனக்காடு, டேனிஷ்பேட்டை, உள்கோம்பை ஆகிய வனப்பகுதியில், மாணவர்கள், ஆசிரியர்கள், வனக்குழுவினர், வனத்துறை அதிகாரிகள் என 50க்கும் மேற்பட்டோர், முதல் நாளில் 70 ஆயிரம் விதைப்பந்துகளை வீசினர்.

6. எந்த ஆண்டு முதல் மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கப்படுகிறது?

**விடை :** 2012

**விளக்கம்**

- **தமிழ்நாட்டில் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டம்** நடைமுறையில் உள்ளது. இந்நிலையில், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தோல்வி அடைந்த மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி கிடையாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - **செய்தி துளிகள் :**
    - தமிழ்நாட்டில் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டம் 2012ஆம் ஆண்டு தொடங்கியது.
    - அரசு பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் இந்த திட்டமும் வருகிறது.

7. தமிழகத்தில் மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை என்ன?



We Shine Academy™

**விடை :** 37

**விளக்கம்**

- புதிதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டங்களின் எல்லைகளை வரையறுத்து, அவற்றில் அடங்கியிருக்கும் கோட்டங்கள், வட்டங்கள் விவரங்கள் அடங்கிய உத்தரவை தமிழக அரசு பிறப்பித்துள்ளது.
    - தமிழக அரசு நிர்வாக வசதிக்காக பெரிய மாவட்டங்களைப் பிரித்து புதிய மாவட்டங்களை உருவாக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.
    - **செய்தி துளிகள் :**
    - புதிய மாவட்டங்கள்
        - கள்ளக்குறிச்சி
        - தென்காசி
        - செங்கல்பட்டு
        - திருப்பத்தூர்
        - ராணிப்பேட்டை
        - புதிய மாவட்டங்களின் எல்லைகளை வரையறுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால், **தமிழகத்தில் மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை 32-லிருந்து 37 ஆக உயர்ந்துள்ளன.**

We Shine Academy™

8. குடிமராமத்து திட்டம் எந்த ஆண்டு புதுபிக்கப்பட்டது?

**விடை :** 2012

**விளக்கம்**

- **குடிமராமத்து திட்டத்தின் கீழ் நிகழாண்டில் ரூ.500 கோடியில் 1,829 ஏரிகளில் குடிமராமத்துப் பணிகள் நிறைவு** செய்யப்பட்டள்ளன என்று முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார். மேலும், குடிமராமத்து உள்ளிட்ட திட்டப்பணிகளை விரைந்து நிறைவேற்ற வேண்டுமென பொதுப்பணித்துறை அதிகாரிகளை முதல்வர் அறிவுறுத்தினார்.
    - **செய்தி துளிகள்:**

- 'குடிமராமத்து' என்பது ஒரு நடைமுறையாகும், இது நீண்ட காலத்திற்கு முன்பு நடைமுறையில் இருந்தது, அங்கு மக்கள் நீர்வளங்களை நிர்வகிப்பதில் மூலதனம் அல்லது உடல் உழைப்பின் சதவீதத்தை பங்களிக்கின்றனர், மேலும் பயனுள்ள மேலாண்மை மற்றும் பாதுகாப்பிற்கான நீண்டகால திட்டமாக மாநில அரசு 2017 இல் அதை புதுப்பித்தது.

9. சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு பெருநகர போக்குவரத்து திட்டத்துக்கான சிறந்த விருதை வழங்கிய அமைச்சகம் எது?

**விடை :** மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகார அமைச்சகம்

**விளக்கம்**

- சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு **பெருநகர போக்குவரத்து திட்டத்துக்கான சிறந்த விருதை மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகார அமைச்சகம் வழங்கியுள்ளது**.
  - **செய்தி துளிகள்**
    - சென்னையில் ஜூன் மாதம் 2015 ஆம் ஆண்டு அப்போதைய தமிழக முதல்வரான ஜெ.ஜெயலலிதா துவங்கி வைத்தார்.
    - இந்தியாவில் மெட்ரோ தொடங்கப்பட்ட ஆறாவது நகரம் சென்னையாகும்.
    - மற்ற நகரங்கள்: டெல்லி, மும்பை, பெங்களூர், கொல்கத்தா, ஜெய்ப்பூர் மற்றும் குர்கான்

10. ஊரக தொழில்துறை அமைச்சர் யார்?

**விடை :** பா. பென்ஜமீன்

**விளக்கம்**

- தமிழகத்தில் குறு, சிறு (ம) நடுத்தர தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் தொழில் வணிகத்துறை ஆணையரகத்துக்கு ஐ.எஸ்.ஓ தர சான்றிதழ்

வழங்கப்பட்டது.

- **செய்தி துளிகள்:**
    - **ஊரக தொழில்துறை அமைச்சர் - பா. பென்ஜமீன்**
    - குறு, சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை செயலர் - ராஜேந்திர குமார்

11. தமிழகத்தில், சர்வதேச திரைப்பட விழாவுக்கு தமிழக அரசின் சார்பில் ரூ.75 லட்சம் வழங்கப்பட்டது. அவ்விழா எங்கு நடைபெறவுள்ளது?

**விடை :** சென்னை

**விளக்கம்**

- சென்னையில் நடைபெறவுள்ள **சர்வதேச திரைப்பட விழாவுக்கு தமிழக அரசின் சார்பில் ரூ.75 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.** 2018-ஆம் ஆண்டு ரூ.50 லட்சம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.
    - **செய்தி துளிகள்:**
        - இந்திய திரைப்பட திறனாய்வு கழகத்தின் பொதுசெயலாளர் (ம) சென்னை சர்வதேச திரைப்பட விழா இயக்குநர் - ஏ.தங்கராஜன் தமிழ் வளர்ச்சி (ம) செய்தி துறை செயலாளர் - மகேசன் காசிநாதன்

12. மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு மறைமுக தேர்தல் நடத்தப்பட்ட ஆண்டு?

**விடை :** 2006

**விளக்கம்**

- **மாநகராட்சி மேயர் உள்ளிட்ட உள்ளாட்சித் தலைவர் பதவிகளுக்கு மறைமுகத் தேர்தல்** நடத்துவது குறித்து தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் செவ்வாய்க்கிழமை (19.11.2019) ஆலோசிக்கப்பட்டது.
    - தமிழக அமைச்சரவைக் கூட்டம் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் செவ்வாய்க்கிழமை (19.11.2019) நடைபெற்றது.

- இந்தக் கூட்டத்தில், உயர்கல்வி, தொழில், உள்ளாட்சி ஆகிய துறைகளில் முக்கிய முடிவுகளை எடுப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.
- **செய்தி துளிகள்**

| | |
|---|---|
| எந்தெந்த காலகட்டங்கள்...... | |
| மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடி மற்றும் மறைமுகத் தேர்தல்கள் நடத்தப்பட்ட ஆண்டுகள் விவரம்: | |
| 1986 முதல் 2001 வரை | நேரடி தேர்தல் முறை |
| 2006 | மறைமுகத் தேர்தல் |
| 2011 | நேரடி தேர்தல் |

13. தமிழகத்தில் மாநகராட்சி மேயர், நகராட்சி, பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவிகளுக்கு எந்த வகையில் தேர்தல் நடத்தப்படவுள்ளது?

**விடை :** மறைமுகத் தேர்தல்

**விளக்கம்**

- **தமிழகத்தில் மாநகராட்சி மேயர், நகராட்சி, பேரூராட்சித் தலைவர்கள்** உள்ளிட்ட **உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவிகளுக்கு மறைமுகத் தேர்தல்** மூலமாகத் தேர்வு செய்வதற்கான அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்துக்கு தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் ஒப்புதல் தெரிவித்துள்ளார்.
  - **செய்தி துளிகள்:**
    - மாநகராட்சி மேயர், நகராட்சி, பேரூராட்சித் தலைவர்களை நேரடியாக வாக்காளர்களே தேர்வு செய்வதற்கான சட்டம் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது.
    - சென்னை மாநகராட்சிகள் சட்டம், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் ஆகியவற்றில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த திருத்த சட்ட மசோதாவுக்கு

We Shine Academy™

ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் ஒப்புதல் அளித்துள்ளார்.

14. திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்ட மாவட்டங்கள் என்னென்ன?

**விடை :** தூத்துக்குடி, தென்காசி

**விளக்கம்**

- **தமிழகத்தின் புதிய மாவட்டமான தென்காசி மாவட்டத்தினை தொடங்கி வைத்தார் முதல்வர் பழனிச்சாமி** அவர்கள்.
    - கடந்த ஜூலை மாதம் 18-ம் தேதி சட்டப்பேரவை விதி எண் 110-ன் கீழ் தென்காசியை தலைமையிடமாக கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்திருந்தது.
    - **செய்தி துளிகள் :**
        - திருநெல்வேலி மாவட்டம் ஆங்கிலேயர்கள் காலத்தில் உருவாக்கப்பட்டது.
        - 1986-ம் ஆண்டு எம்.ஜி.ஆர் திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து தூத்துக்குடி மாவட்டம் உதயமானது.
        - தென்காசி மாவட்டத்தில் 2 வருவாய் கோட்டங்களும், 8 வட்டங்களும், 10 ஊராட்சி ஒன்றியங்களும், 224 கிராம ஊராட்சிகளும், 5 சட்டபேரவை தொகுதிகளும் உள்ளடங்கியுள்ளன.

15. மதராஸ் மாகாணத்தில் எப்போது முதல் பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்கப்பட்டது?

**விடை :** 1849

**விளக்கம்**

- **தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த 25 ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு பட்டயக் கணக்காளர் பயிற்சி** அளிக்கப்படும் என்று **தமிழக பள்ளிக்கல்வி துறை அமைச்சர்** தகவல்

- மேட்டூரை அடுத்த கொளத்தூரில் தமிழக அரசின் பள்ளிக் கல்வி துறை சார்பில் பள்ளி மாணவ, மாணவியருக்கான பட்டயக் கணக்காளர் படிப்பு குறித்த விழிப்புணர்வு பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது.
- **செய்தி துளிகள்**
    - மெட்ராஸ் மாகாணத்தில் 1849-ம் ஆண்டு முதல் பெண்கள் உயர்நிலை பள்ளி தொடங்கப்பட்டது.
    - தமிழக இடைநிலை கல்வி வாரியம் முதன்முறையாக 1910-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
    - மதராஸ் மாகாணத்தின் முதல் கல்வி அமைச்சர் திரு.சுப்புராயாலு ஆவர்.

16. தமிழக சட்டமன்ற வளாகத்தில் அண்மையில் யாருடைய உருவப்படம் திறந்து வைக்கப்பட்டது?

**விடை :** எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சியார்

**விளக்கம்**

- **சுதந்திரப் போராட்ட வீரரும் தமிழக முன்னாள் அமைச்சருமான எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சியார் நினைவு மண்டபத்தை முதல்வர் இன்று திறந்து வைக்கிறார்.**
    - கடலூர் மஞ்சக் குப்பம் மைதானத்தில் ராமசாமி படையாச்சியார் நினைவு மண்டபம் கட்டப்பட்டுள்ளது.
    - ராமசாமி படையாச்சியார் பிறந்த நாளை தமிழக அரசு, அரசு விழாவாக கொண்டாடும் என முதல்வர் அறிவித்துள்ளார்.
    - **செய்தி துளிகள்**
        - எஸ்.எஸ் ராமசாமி படையாச்சியார் "தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியினை தோற்றுவித்தார்."
        - 1954-ம் ஆண்டு காமராஜர் ஆட்சிகாலத்தில் உள்ளாட்சி துறை அமைச்சராக பதவி வகித்தார்.

We Shine Academy™

- கடந்த ஜுலை மாதம் 20-ம் தேதி தமிழக சட்டமன்ற வளாகத்தில் ராமசாமி படையாச்சியின் உருவப்படம் திறந்து வைக்கப்பட்டது

17. கள்ளக்குறிச்சி மாவட்டம் எந்த மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டது?

**விடை :** விழுப்புரம்

**விளக்கம்**

- **விழுப்புரம் மாவட்டத்தில் இருந்து புதிதாக தோற்றுவிக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் தொடக்க விழா (நவ. 26) இன்று நடைபெறுகிறது.**
  - **செய்தி துளிகள்:**
    - வேலூரை பிரித்து வேலூர், திருப்பத்தூர் (ம) ராணிபேட்டை எனவும், நெல்லையை பிரித்து நெல்லை (ம) தென்காசி எனவும் காஞ்சிபுரத்தை பிரித்து காஞ்சிபுரம் (ம) செங்கல்பட்டு ஆகிய புதிய மாவட்டங்கள் உருவாக்க அரசாணை தமிழக அரசால் ஏற்கனவே வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

18. நியாயவிலை கடைகளில் அரிசி பெறும் அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகை எவ்வளவு வழங்கப்படவுள்ளது?

**விடை :** ரூ.1000

**விளக்கம்**

- **நியாய விலைக் கடைகளில் அரிசி பெறும் அட்டைதாரர்கள்** அனைவருக்கும் **பொங்கல் பரிசுத் தொகுப்புடன்** தலா **ரூ.1,000 ரொக்கமாக வழங்கப்படும்** என்று கள்ளக்குறிச்சியில் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்தார்.

19. வேலூர் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட மாவட்டங்கள் எவை?

**விடை :** திருப்பத்தூர் (ம) ராணிபேட்டை

**விளக்கம்**

- புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருப்பத்தூர், ராணிப்பேட்டை மாவட்டங்களை தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி இன்று தொடங்கி வைக்கிறார்.
    - **வேலூர் மாவட்டம் நிர்வாக வசதிக்காக வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர்** ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டு, மூன்று **மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது.**
    - **செய்தி துளிகள்:**
        - வேலூர் மாவட்டத்தில் கே.வி. குப்பத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டமும், வேலூர், காட்பாடி அணைக்கட்டு ஆகிய மூன்று வட்டங்களை உள்ளடக்கி, வேலூர் வருவாய்க் கோட்டமாகவும், மற்றொரு கோட்டமாக குடியாத்தம் கோட்டமும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. திருப்பத்தூர் மாவட்டத்தில், உள்ள திருப்பத்தூர் கோட்டத்தில் திருப்பத்தூர், நாட்டறம்பள்ளி ஆகிய வட்டங்கள் இடம் பெறுகின்றன. புதிதாக வாணியம்பாடி வருவாய்க் கோட்டம் உருவாகிறது.
        - தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி கலந்துகொண்டு, தமிழகத்தின் 35-ஆவது மாவட்டமாக திருப்பத்தூர் மாவட்டத்தையும், 36-ஆவது மாவட்டமாக ராணிப்பேட்டை மாவட்டத்தையும் தொடக்கி வைக்கிறார்.

20. எந்த விதியின் கீழ் சட்டபேரவையில் வெளியிட்ட அறிவிப்பில், தமிழறிஞர்களுக்கு புதிய விருதுகளையும் நிதியுதவிகளையும் தமிழக அரசு வழங்கியது?

**விடை** : விதி எண் - 11

**விளக்கம்**

- **ஏழு அறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு தலா ரூ.5 லட்சம்**

**வீதம் ரூ.35 லட்சம் வழங்க தமிழ் வளர்ச்சித்துறை அரசாணை வெளியிட்டுள்ளது.**

- தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி கடந்த ஜூலை 20 ஆம் தேதி சட்டபேரவையில் விதி எண் - 11 இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், தமிழறிஞர்களுக்கு புதிய விருதுகளையும் நிதியுதவிகளையும் வழங்கியது. இதுவரை 149 அறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி, அவர்களை மரபுரிமையர்களுக்கு பரிசுத்தொகை வழங்கியுள்ளது.
- **செய்தி துளிகள்:**
    - அதனை தொடர்ந்து, உளுந்தூர்பேட்டை சண்முகம், கவிஞர் நா.காமராசன், முனைவர் இரா. இளவரசு, தமிழறிஞர் அடிகளாசிரியர், புலவர் இறைக்குருவனார், பண்டித ம.கோபாலகிருட்டிணன், பாபநாசம் குறள்பித்தன் ஆகியோரது படைப்புகள் அர்பணிக்கப்பட்டுள்ளனர்.

21. தமிழ்நாட்டின் உணவு பாதுகாப்பற்றது என அறிக்கை வெளியிட்ட நிறுவனம் எது?

**விடை :** FSSAI

**விளக்கம்**

- தமிழ்நாட்டில் உள்ள உணவு மிகவும் பாதுகாப்பற்றது என்று FSSAI அறிக்கை கூறுகின்றது.
    - **தமிழ்நாட்டில் 45% உணவு மாதிரிகள் தேவையான தரங்களைப் பூர்த்தி செய்யவில்லை.**
    - தமிழ்நாட்டில் 12.7% உணவு மாதிரிகள் கலப்படம் செய்யப்பட்டுள்ளன மற்றும் நுகர்வுக்குப் பாதுகாப்பற்றவை என இந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.

# இந்திய நிகழ்வுகள்

1. இந்தியாவில் சட்டமன்றத்துடன் கூடிய யூனியன் பிரதேசங்கள் எத்தனை?

**விடை :** 3

**விளக்கம்**

- **ஜம்மு – காஷ்மீர், லடாக் யூனியன் பிரதேசங்களின் துணை நிலை ஆளுநர்கள் பதவியேற்றனர்.**
    - ஜம்மு – காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் முதல் துணை நிலை ஆளுநராக கிரீஷ் சந்திர முர்மு–வும், லடாக் யூனியன் பிரதேசத்தின் முதல் துணைநிலை ஆளுநராக ராதாகிருஷ்ண மாத்துரும் பதவியேற்று கொண்டனர்.
    - ஜம்மு காஷ்மீரில் ஐஏஎஸ், ஊழல் கண்காணிப்பு பிரிவு உள்ளிட்ட அனைத்து அகில இந்திய பணிகளும் துணை நிலை ஆளுநரின் கட்டுப்பாட்டில் இருக்கும்.
    - காவல் துறை, சட்டம் - ஒழுங்கு ஆகியவை மத்திய அரசின் பிரதிநிதியாக துணை நிலை ஆளுநர்கள் கட்டுப்பாட்டில் இருக்கும்.
    - **செய்தி துளிகள் :**
        1. ஒருங்கிணைந்த ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தின் கடைசி முதல்வராக மெஹபூபா மு∴தி பதவி வகித்தார்.
        2. இதேபோல் ஒருங்கிணைந்த ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தின் கடைசி ஆளுநராக சத்யபால் மாலிக் பதவி வகித்தார்.

2. தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை :** தத்தாத்ரேய பட்சல்கிகர்

**விளக்கம்**

- **தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகராக தத்தாத்ரேய பட்சல்கிகர்** நியமிக்கப்பட்டுள்ளார்.

○ மும்பை காவல் துறை ஆணையராக 2016ம் ஆண்டில் பொறுப்பேற்றார்.

○ 1982 ஆம் ஆண்டு மகாராஷ்டிரா பிரிவு ஐபிஎஸ் அதிகாரியான இவர் 26 ஆண்டுகளாக "ஐபி" உளவுத்துறையில் பணியாற்றியவர்.

○ **செய்தி துளிகள் :**

1. தற்போதைய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆவர்.
2. மகாராஷ்டிர காவல்களுக்கான பணி நேரத்தை 8 மணி நேரமாக பட்சல்கிகர் மாற்றி அமல்படுத்தினார்.
3. பாதுகாப்பு துறை அமைச்சர் : மாண்புமிகு ராஜ்நாத் சிங் ஆவர்.

3. ஆயுதப்படை (ஜம்மு – காஷ்மீர்) சிறப்பு அதிகாரங்கள் சட்டம் எந்த ஆண்டு கொண்டுவரப்பட்டது?

**விடை :** 1990

**விளக்கம்**

- புதிதாக உதயமாகியுள்ள **ஜம்மு – காஷ்மீர், லடாக் யூனியன் பிரதேசங்களிலுள்ள** குறிப்பிட்ட பகுதியை **ஆயுதப்படை சிறப்பு அதிகாரங்கள் சட்டம்** (ஏஎ்ஃப்எஸ்பிஏ) அமல்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.
  - ○ ஜம்மு – காஷ்மீர், லடாக் யூனியன் பிரதேசங்கள் கடந்த (31.10.19) வியாழக்கிழமை முதல் செயல்பாட்டுக்கு வந்தன.
  - ○ **செய்தி துளிகள் :**
    - ▪ கடந்த **1990** – ஆம் ஆண்டு இயற்றப்பட்ட ஆயுதப்படை (ஜம்மு – காஷ்மீர்) சிறப்பு அதிகாரங்கள் சட்டத்தை நிர்வகிக்கும் அதிகாரம், ஜம்மு – காஷ்மீர், லடாக் விவகாரங்கள் துறைக்கு மாற்றப்படுகிறது.

4. நாட்டிலேயே முதல்முறையாக, எந்த பேரவைத் தேர்தலில் முதியோர், மாற்றுத்திறனாளிகள் தபால் மூலம் வாக்களிக்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது?

**விடை :** ஜார்க்கண்ட்

**விளக்கம்**

- ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவைக்கு வரும் 30 – ஆம் தேதி முதல் டிசம்பர் 20 ஆம் தேதி வரை 5 கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணையம் வெள்ளிக்கிழமை அறிவித்தது. வாக்கு எண்ணிக்கை டிசம்பர் 23 ஆம் தேதி நடைபெறவுள்ளது.
    - **நாட்டிலேயே முதல் முறையாக ஜார்க்கண்ட்** பேரவைத் தேர்தலில் **முதியோர், மாற்றுத் திறனாளிகள் தபால் மூலம் வாக்களிக்கும் வசதி** அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
    - **செய்தி துளிகள் :**
        - தேர்தல் ஆணைய தகவலின்படி, அந்த மாநிலத்தில் 80 வயதுக்கும் அதிகமாக 2.19 லட்சம் பேரும், 2.16 லட்சம் மாற்றுத்திறனாளிகளும் உள்ளனர்.
        - தற்போதைய அமைப்பில், இராணுவ & துணை ராணுவ வீரர்கள் மற்றும் வெளிநாடுகளில் பணிபுரியும் அரசு ஊழியர்கள், தேர்தல் பணியில் பணியமர்த்தப்பட்ட ஊழியர்கள் மட்டுமே அஞ்சல் வாக்குச்சீட்டைப் பெற உரிமை உடையவர்கள் ஆவர்.

5. சமீபத்தில், தொழிலாளர்கள் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் ஸ்ரீ சந்தோஷ்குமார் கங்வார் தொடங்கிய 3 செயலிகள் எவை?

**விடை :** யுஏஎன் பதிவு, மின் - ஆய்வு மற்றம் டிஜி லாக் (UAN REGISTRATION, E – INSPECTION AND DIGI LOCKE)

**விளக்கம்**

- **தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் ஸ்ரீ சந்தோஷ்குமார் கங்வார்** 3 செயலிகளைத் தொடங்கினார். யுஏஎன் பதிவு, மின்-ஆய்வு மற்றும் டிஜி லாக் (UAN REGISTRATION, E-INSPECTION AND DIGI LOCKE), ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) தனது 67 வது அறக்கட்டளை தினத்தில் டெல்லியில் உருவாக்கியது.
    - இந்த செயலிகள் எளிதான வணிகத்தை மேம்படுத்துவதோடு EPFO வில் பணியாற்றுவதில் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிக்கும்.
    - **செய்தி துளிகள் :**
        - இதன்மூலம் எந்தவொரு தொழிலாளர்களும் யுனிவெர்சல் கணக்கு எண்ணை (UAN) நேரடியாக ஈபிஎ∴ப்ஓ இணையத்தளத்தில் பெறலாம், இது பிஎ∴ப், ஓய்வூதியம் மற்றும் ஆயுள் காப்பீட்டு சலுகைகளுக்காக பதிவு செய்கிறது மற்றும் ஒரு தொழிலாளி UAN க்கு தனது முதலாளியை மட்டுமே சார்ந்து இருக்க வேண்டியதில்லை.

6. மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.10,000 கோடி நிதியை எந்த மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ளது?

**விடை :** மகாராஷ்டிரா

**விளக்கம்**

- **மகாராஷ்டிரத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.10,000 கோடி** நிதியை அந்த **மாநில அரசு ஒதுக்கீடு** செய்துள்ளது.
    - மாநில அமைச்சர்கள் சந்திரகாந்த் பாட்டீல், கிரிஷ் மகாஜன், சுபாஷ் தேஷ்முக், சுரேஷ் கதே மகாதேவ் ஜன்கர் உள்ளிட்டோர் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.
    - **செய்தி துளிகள் :**
        - மகாராஷ்டிரா முதல்வர் : தேவேந்திர ∴பட்னாவிஸ்
        - மகாராஷ்டிரா தலைநகரம் : மும்பை

7. இந்திய ரிசர்வ் வங்கியின் (ஆர்பிஐ) ஆளுநர் சக்திகாந்த் தாஸை, அமெரிக்க நிதியமைச்சர் ஸ்டீவன் நூசின் எது தொடர்பாக சந்தித்து பேசினார்?

**விடை :** பொருளாதாரம்

**விளக்கம்**

- **இந்திய ரிசர்வ் வங்கியின் (ஆர்பிஐ) ஆளுநர் சக்திகாந்த் தாஸை, அமெரிக்க நிதியமைச்சர் ஸ்டீவன் நூசின்** மும்பையில் அக்டோபர் 2ஆம் தேதியன்று **சந்தித்துப் பேசினார்.** இச்சந்திப்பின்போது, பொருளாதாரம் தொடர்பாக உள்நாட்டு மற்றும் சர்வதேச அளவில் காணப்படும் நிலைமை, இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமான பொதுவான பொருளாதாரப் பிரச்சனைகள் ஆகியவை குறித்து இருவரும் விவாதித்தனர்.
    - பல்வேறு நாடுகளுடன் மேற்கொண்ட அணுசக்தி ஒப்பந்தத்தை மதிக்காமல் செயல்பட்டு வரும் ஈரானுக்கு எதிராக ஆதரவு திரட்டும் நோக்கில், ஸ்டீவன் நூசின் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். இப்பயணத்தின் ஒரு பகுதியாக ஆளுநர் சக்திகாந்த் தாஸை மும்பையில் அவர் அக்டோபர் 2ஆம் தேதியன்று சந்தித்துப் பேசினார்.
    - **செய்தி துளிகள் :**
        - ஈரானுடன் கடந்த 2015ஆம் ஆண்டு மேற்கொண்ட அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அமெரிக்கா கடந்த ஆண்டு அறிவித்தது. இதையடுத்து ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்தது.

8. இந்தியாவின் புதிய வரைபடத்தை வெளியிட்டது யார்?

**விடை :** மத்திய உள்துறை அமைச்சகம்

**விளக்கம்**

- ஜம்மு – காஷ்மீர் மாநிலம் ஜம்மு – காஷ்மீர், லடாக் என இரு புதிய யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டதை அடுத்து **இந்தியாவின் புதிய**

**வரைபடத்தை மத்திய உள்துறை அமைச்சகம்** நவம்பர் 2ஆம் தேதியன்று **வெளியிட்டது.**

- புதிய யூனியன் பிரதேசங்களின் எல்லைகள் வரைபடத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் சில பகுதிகளும், புதிய வரைபடத்தில் இடம்பெற்றுள்ளன.
- **செய்தி துளிகள் :**
  - ஜம்மு – காஷ்மீர் மாநிலமாக 1947ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.
  - ஜம்மு – காஷ்மீரில் சட்டம் 370 ஆகஸ்ட் 5 அன்று மத்திய அரசால் அகற்றப்பட்டது.

9. பிரியாணி, ஹலீம் ஆகிய உணவு வகைகள் தயாரிப்பில் சிறப்பிடம் பிடித்ததற்காக இந்தியாவின் எந்த நகருக்கு யுனெஸ்கோ அங்கீகாரம் வழங்கியுள்ளது?

**விடை :** ஹைதராபாத்

**விளக்கம்**

- **பிரியாணி, ஹலீம் ஆகிய உணவு வகைகள் தயாரிப்பில் சிறப்பிடம்** பிடித்ததற்காக, **ஹைதராபாத் நகருக்கு யுனெஸ்கோ அங்கீகாரம்** வழங்கியுள்ளது.
  - உலக நகரங்கள் தினம், கடந்த அக்டோபர் 31-ஆம் தேதி கடைப்பிடிக்கப்பட்டது. அன்றைய தினம், படைப்புத் திறனில் சிறந்து விளங்கும் கிரியேட்டிவ் சிட்டி பட்டியலில், மும்பை மற்றும் ஹைதராபாத் ஆகிய நகரங்களின் பெயர்களைச் சேர்த்துள்ளதாக யுனெஸ்கோ அறிவித்தது.
  - திரைப்படங்கள் தயாரிப்புக்காக மும்பை நகரையும், பிரியாணி, ஹலீம் ஆகிய உணவு வகைகளின் தயாரிப்புக்காக ஹைதராபாத் நகரையும் யுனெஸ்கோ அங்கீகரித்துள்ளது.

- **செய்தி துளிகள்**
    - உலக அளவில் வேகமாக வளர்ந்து வரும் முதல் 10 நகரங்களின் வரிசையில் ஹைதராபாத் இடம்பெற்றுள்ளது. 2019-ஆம் ஆண்டில் ஹைதராபாத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு ரூ.3.56 லட்சம் கோடியாக இருந்தது. இது, வரும் 2035-ஆம் ஆண்டுக்குள் ரூ.14 லட்சம் கோடியாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

10. இந்திய கப்பல்களில் எப்போதிலிருந்து நெகிழி பொருள்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக கப்பல் போக்குவரத்து துறை அறிவித்துள்ளது?

**விடை :** ஜனவரி 1, 2020

**விளக்கம்**

- வரும் **ஜனவரி 1-ஆம் தேதி முதல் இந்திய கப்பல்களில் நெகிழி பயன்பாட்டுக்கு தடைவிதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**
    - அதன்படி, ஐஸ்கிரீம்-உணவு கப்புகள், மைக்ரோவேவ் உணவுகள், பால் பாக்கெட்டுகள், ஷாம்பூ பாட்டில்கள், தண்ணீர்-குளிர்பான பாட்டில்கள், பிஸ்கெட் மற்றும் உருளைக்கிழங்கு சிப்ஸ் பாக்கெட் உள்ளிட்ட எந்த வகையான ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிப் பொருள்களையும் கொண்டு வருவது தடைசெய்யப்பட்டுள்ளது.
    - உள்நாட்டு கப்பல்கள் மட்டுமின்றி, இந்திய கடல் எல்லைக்குள் செல்லும் வெளிநாட்டு கப்பல்கள் அனைத்திலும் இந்ததடை வரும் 2020-ஆம் ஆண்டு ஜனவரி 2-ம் தேதியிலிருந்து அமலுக்கு வரும் என கப்பல் போக்குவரத்து தலைமை இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

11. யுனானி மருத்துவத்திற்கான மத்திய ஆராய்ச்சி நிறுவனம் எங்கு அமைந்துள்ளது?

**விடை :** ஹைதராபாத்

**விளக்கம்**

- **ஹைதராபாத்தில்** உள்ள எராகடாவில் உள்ள **யுனானி மருத்துவ மத்திய ஆராய்ச்சி நிறுவனம்** (CRIUM) இலிருந்து மேம்படுத்தப்பட்ட தோல் கோளாறுகளுக்கான தேசிய ஆராய்ச்சி நிறுவனம் (என்.ஆர்.ஐ.எம்.எஸ்.டி) மத்திய ஆயுஷ் மாநில அமைச்சர் ஸ்ரீ ஸ்ரீபாத் யெசோ நாயக் இன்று திறந்து வைத்தார்.
    - **செய்தி துளிகள்**
        - ஆயுஷ் மத்திய அமைச்சர்: ஸ்ரீபாத் யெசோ நாயக். டைரக்டர் ஜெனரல், யுனானி மருத்துவ ஆராய்ச்சிக்கான மத்திய கவுன்சில் (Central Council for Research in Unani Medicine (CCRUM)): அசிம் அலிகான் ஆவார்.

12. லடாக் யூனியன் பிரதேசத்தில் எத்தனை மாவட்டங்கள் உள்ளன?

**விடை** : 2 (கார்கில் மற்றும் லே)

**விளக்கம்**

- ஜம்மு-காஷ்மீர் மாநிலம், ஜம்மு-காஷ்மீர், லடாக் என இரு புதிய யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டதை அடுத்து, இந்தியாவின் புதிய வரைபடத்தை மத்திய உள்துறை அமைச்சகம் சனிக்கிழமை வெளியிட்டது. அதில், புதிய யூனியன் பிரதேசங்களின் எல்லைகள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் சில பகுதிகளும் புதிய வரைபடத்தில் இந்தியப் பகுதிகளாக இடம்பெற்றிருந்தன.
    - உள்துறை அமைச்சகத்தின் கூற்றுப்படி, **புதிய யூனியன் பிரதேசமான லடாக்கில் கார்கில் மற்றும் லே - இரண்டு மாவட்டங்களைக் கொண்டுள்ளது.**
    - **செய்தி துளிகள்**
        - இந்தியாவின் வரைபடத்துடன், 2019 அக்டோபர் 31 அன்று உருவாக்கப்பட்ட புதிய யூனியன் பிரதேசங்களான ஜம்மு –

காஷ்மீர் மற்றும் லடாக் ஆகியவற்றை சித்தரிக்கும் வரைபடங்களை இந்தியன் சர்வே ஜெனரல் தயாரித்தனர்.

- அக்டோபர் 31 ம் தேதி, புதிய யூனியன் பிரதேசமான ஜம்மு – காஷ்மீரின் முதல் துணை நிலை ஆளுநராக ஐ.ஏ.எஸ் அதிகாரி கிரிஷ் சந்திர முர்மு பதவியேற்றார். ராதா கிருஷ்ணா மாத்தூர் லடாக்கின் முதல் துணை நிலை ஆளுநராக பதவியேற்றார்.

13. ஒற்றை - இரட்டை இலக்க முறையில் வாகனங்களை இயக்கும் திட்டம் எந்த மாநிலத்தில்/யூனியன் பிரதேசத்தில் விதிக்கப்பட்டுள்ளது?

**விடை :** டெல்லி

**விளக்கம்**

- **ஒற்றை-இரட்டை முறையில் வாகனங்கள் இயக்கப்படும்: டெல்லி அரசு முடிவு** இன்று முதல் தேசிய தலைநகரில் செயல்படுத்தப்படும். 12 நாள் திட்டம் இந்த மாதம் 15 வரை தொடரும்.
    - காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை ஒற்றைப்படை இலக்க எண்கள் கொண்ட தனியார் 4 சக்கர, 2 சக்கர வாகனங்கள், ஒற்றைப்படை தேதிகளில் இயக்கப்பட வேண்டும். காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை இரட்டைப்படை இலக்க எண்கள் கொண்ட தனியார் 4 சக்கர, 2 சக்கர வாகனங்கள், இரட்டைப்படை தேதிகளில் இயக்கப்பட வேண்டும்.
    - இந்த விதியை மீறுவதால் நான்காயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.
    - **செய்தி துளிகள்**
        - ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, பிரதமர், மாநில ஆளுநர்கள், இந்திய பிரதம நீதியரசர், மக்களவை சபாநாயகர், மத்திய அமைச்சர்கள், மாநிலங்களவை மற்றும் மக்களவையில் எதிர்கட்சித் தலைவர்கள், மாநிலங்கள் மற்றும் மத்திய

பிரதேசங்களின் முதலமைச்சர்கள் ஆகியோருக்கும் விலக்கு அளிக்கப்படும்.

- இருப்பினும், டெல்லி முதல்வர் மற்றும் அவரது அமைச்சரவை சகாக்களின் வாகனங்களுக்கு விதிவிலக்கு இருக்காது. தனியாருக்குச் சொந்தமான சி.என்.ஜி வாகனங்களுக்கு இந்த முறை விலக்கு அளிக்கப்படாது.

14. அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலனுக்காக மத்திய அரசு கொண்டு வந்த அடல் ஓய்வூதியத் திட்டம் எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?

**விடை :** 2015

**விளக்கம்**

- அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலனுக்காக மத்திய அரசு கொண்டு வந்த அடல் ஓய்வூதியத் திட்டத்தில் இதுவரை 1.9 கோடி பேர் இணைந்துள்ளதாக ஓய்வூதிய நிதி மற்றும் மேம்பாட்டு ஆணையம் (பிஎ.ஃப்ஆர்டிஏ) தெரிவித்துள்ளது.
    - அமைப்புச் சாரா தொழிலாளர்கள், 60 வயதைக் கடந்த பிறகு, மாதம் ரூ.1,000 முதல் ரூ.5,000 வரை பெறும் வகையில், **அடல் ஓய்வூதியத் திட்டத்தை மத்திய அரசு கடந்த 2015-ஆம் ஆண்டு அறிமுகம்** செய்தது.
    - **செய்தி துளிகள்**
        - இந்தத் திட்டத்தில் இணைபவர்கள், ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தொகையை, வங்கி அல்லது அஞ்சலகக் கணக்கு மூலமாக செலுத்த வேண்டும். அரசும் தன் பங்களிப்பாக ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தும்.
        - அரசின் பிற சமூக நலப் பாதுகாப்புத் திட்டங்களில் பயன்பெறுபவராக இருந்தால், அவர்களுக்கு அரசின் பங்களிப்பு தொகைக் கிடைக்காது. இந்த திட்டத்தை ஓய்வூதிய நிதி மற்றும் மேம்பாட்டு ஆணையம்

(பிஎ.ஃ.ப்ஆர்டிஏ) நிர்வகித்து வருகிறது.

15. ஹரியானாவின் முதல்வர் யார்?

**விடை :** மனோகர் லால் கத்தார்

**விளக்கம்**

- **ஹரியானாவின் புதிய முதல்வராக மனோகர் லால் கத்தார் பதவியேற்றார்**.
    - ஆளுநர் சத்யதேவ் நாராயண் ஆர்யா சண்டிகரில் ராஜ் பவனில் நடந்த விழாவில் அவருக்கு பதவிப் பிரமாணம் மற்றும் ரகசியக் காப்புப் பிரமாணம் ஆகியவற்றை வழங்கினார்.
    - தொடர்ந்து இரண்டாவது முறையாக மனோகர் லால் முதல்வராகப் பொறுப்பேற்கிறார்.

16. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய ஒருங்கிணைப்புக்கான இந்திரா காந்தி விருது யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை :** சாந்தி பிரசாத் பட்

**விளக்கம்**

- உத்தரகாண்ட் மாநிலத்தின் சிப்கோ இயக்கத்துடன் தொடர்புடைய காந்தியவாதியும் சுற்றுச்சூழல் ஆர்வலருமான **சாந்தி பிரசாத் பட்** என்பவருக்கு, **2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய ஒருங்கிணைப்புக்கான இந்திரா காந்தி விருது** வழங்கப்பட்டுள்ளது.
    - இது 1985 ஆம் ஆண்டு முதல் இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் நினைவாக, இந்திய தேசிய காங்கிரஸ் அமைப்பால் ஆண்டுதோறும் வழங்கப்படும் ஒரு மதிப்புமிக்க விருது ஆகும்.

17. ரூபே அட்டை எப்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டது?

**விடை :** 2012

**விளக்கம்**

- வளைகுடா நாடுகளின் இராஜ்ஜியத்தில் **ரூபே அட்டையை அறிமுகப்படுத்த இந்தியா** சவூதி அரேபியாவுடன் ஒரு புரிந்துணர்வு **ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.**
  - மேற்கு ஆசியாவில் இந்தியாவின் டிஜிட்டல் பண வழங்கீட்டு முறையைத் தொடங்கிய மூன்றாவது நாடு இதுவாகும்.
  - இந்தியா ஏற்கனவே ரூபா அட்டையை ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன், சிங்கப்பூர் மற்றும் பூடான் ஆகிய நாடுகளில் அறிமுகப்படுத்தியுள்ளது.
  - ரூபே அட்டையானது 2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இதே வகையைச் சேர்ந்த இந்திய உள்நாட்டு கடன் பற்று அட்டை மற்றும் கடன் வழங்கு அட்டை ஆகும்.

18. 'கர் கர் ரோஸ்கர்' திட்டம் எங்கு அறிமுகப்படுத்தப்பட்டது?

**விடை :** பஞ்சாப்

**விளக்கம்**

- **பஞ்சாப்** முதலமைச்சர் அமரீந்தர் சிங், **'கர் கர் ரோஸ்கர்' திட்டத்தின்** கீழ் மாநிலத்தின் வேலையற்ற இளைஞர்களுக்காக 76260 –76260 என்ற முதல் வகை ஹெல்ப்லைன் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளார். இந்த ஹெல்ப்லைனின் நோக்கம் பஞ்சாபில் உள்ள ஒவ்வொரு வீட்டையும் அடைவதேயாகும். மேலும் இதை தினமும் 75 ஆயிரம் மொபைல் எண்களில் தொடர்பு கொள்ளலாம். இந்த செயல்பாட்டில், தரவு தயாரிக்க பஞ்சாப் வேலை உதவி மையத்தின் 110 இருக்கைகள் கொண்ட அழைப்பு மையமும் உருவாக்கப்பட்டுள்ளது.
  - **செய்தி துளிகள்**
    - பஞ்சாபின் தலைநகரம்: சண்டிகர்
    - பஞ்சாப் ஆளுநர்: வி.பி. சிங் பட்னோர்.

We Shine Academy™

19. மஹா புயல் எந்த கடல் பகுதியில் உருவாகியுள்ளது?

**விடை :** அரபிக்கடல்

**விளக்கம்**

- கிழக்கு மத்திய அரேபிய கடலில் 'மஹா' சூறாவளி தீவிரமான சூறாவளி புயலாக தீவிரமடைந்து வருவதால், குஜராத் மற்றும் வடக்கு மகாராஷ்டிரா கடற்கரையில் மனிதாபிமான மற்றும் பேரழிவு நிவாரண (Humanitarian and Disaster Relief (HADR)) நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய கடற்படையின் மேற்கு கடற்படை கட்டளை தயாராக உள்ளது.
    - **செய்தி துளிகள் :**
        - இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான முதல் முத்தரப்பு சேவைப் பயிற்சி நவம்பர் 13 முதல் 21 வரை **டைகர் ட்ரையம்ப்** (Tiger Triumph) எனப்படும் பெரிய அளவிலான **மனிதாபிமான உதவி மற்றும் பேரழிவு நிவாரண நடவடிக்கைகளில்** (Humanitarian Relief and Disaster Relief (HADR)) கவனம் செலுத்தும்.

20. சமீபத்தில், வெளியிடப்பட்ட வெள்ள எச்சரிக்கை செயலி எது?

**விடை :** Coastal Flood Warning System app (CFLOWS)

**விளக்கம்**

- தேசிய கடல்சார் தொழில்நுட்பக் கழகத்தின் (National Institute of Ocean Technology (NIOT)) வெள்ளி விழா கொண்டாட்டத்தில், துணைத் தலைவர் **எம்.வெங்கையா நாயுடு,** தமிழக அரசுக்கு திறம்பட கட்டுப்பாடு மற்றும் வெள்ளத்தைக் குறைப்பதில் உதவுவதற்காக **'ரெட் அட்லஸ் செயல் திட்டம்' மற்றும் "கடலோர வெள்ள எச்சரிக்கை அமைப்பு செயலி"** (Coastal Flood Warning System app for Chennai ( CFLOWS – CHENNAI)) ஆகியவற்றை சென்னை, தமிழ்நாட்டில் **வெளியிட்டுள்ளார்.**
    - **செய்தி துளிகள் :**

- சென்னை 2015ல் கடும் வெள்ளத்தை கண்டது என்பது குறிப்பிடத்தக்கது.
- சென்னைக்கான கடலோர வெள்ள எச்சரிக்கை அமைப்பு பயன்பாடு (CFLOWS – CHENNAI) இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த கடலோர வெள்ள எச்சரிக்கை அமைப்பு ஆகும்.

21. நிணநீர் யானைக்கால் நோய் தொற்றுக்கு காரணமான ஒட்டுண்ணி எது?

**விடை :** உருளை புழு

**விளக்கம்**

- **"யானைக்கால் நோயை ஒழிப்பதற்காக ஒன்றிணைதல்"** என்ற கருப்பொருள் கொண்ட ஒரு தேசியக் கருத்தரங்கமானது மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தனால் தொடங்கி வைக்கப்பட்டது.
    - மேலும் 2021 ஆம் ஆண்டிற்குள் யானைக்கால் நோயை ஒழிப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை மீதான அழைப்பிலும் மத்திய அமைச்சர் கையெழுத்திட்டார்.
    - **செய்தி துளிகள் :**
        - நிணநீர் யானைக்கால் நோயானது பொதுவாக யானைக்கால் நோய் என்று அழைக்கப்படுகின்றது. இது ஒரு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோயாகக் கருதப்படுகின்றது.

22. கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் யார்?

**விடை :** ஸ்ரீ மன்சுக் மாண்டவியா

**விளக்கம்**

- **கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஸ்ரீ மன்சுக் மாண்டவியா,** 2019 நவம்பர் 7-8 தேதிகளில் ஆந்திராவின் விசாகப்பட்டினத்தில் முதல்

'பிம்ஸ்டெக் துறைமுக மாநாட்டை' திறந்து வைத்தார்.

- **செய்தி துளிகள்**
  - பல துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான பெங்கால் விரிகுடா (Bay of Bengal Initiative for Multi-Sectoral Technical and Economic Cooperation (BIMSTEC)) என்பது தெற்காசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பங்களாதேஷ், இந்தியா, மியான்மர், இலங்கை, தாய்லாந்து, பூட்டான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளின் ஒரு குழுவை உள்ளடக்கிய ஒரு சர்வதேச அமைப்பாகும்.

23. எந்த மாநிலத்தில் இரண்டு ஹெல்த் ஏடிஎம்களை இந்திய ரயில்வே நிறுவியுள்ளது?

**விடை :** லக்னோ

**விளக்கம்**

- **லக்னோவில்** உள்ள சர்பாக் ரயில் நிலையத்தில் **இரண்டு 'ஹெல்த் ஏடிஎம்களை' ('Health ATM's) இந்திய ரயில்வே நிறுவியுள்ளது.**
  - யோலோ ஹெல்த் ஏடிஎம் (YOLO Health ATM) விளம்பரப்படுத்திய கியோஸ்க்கள் ரூ.50-100 க்கு 16 சுகாதார சோதனைகளை வழங்குகின்றன. இரண்டு வகையான சோதனைகள் 9 நிமிடங்களுக்கு ரூ.100 செலவாகும், 6 நிமிடத்திற்கு ரூ.50 செலவாகும். அறிக்கை பயனரின் மின்னஞ்சல் அல்லது ஸ்மார்ட்போனுக்கு உடனடியாக வழங்கப்படுகிறது.
  - **செய்தி துளிகள்**
    - உத்தரபிரதேச முதல்வர் : யோகி ஆதித்யநாத்
    - உத்தரபிரதேச ஆளுநர் : ஆனந்திபென் படேல்.



We Shine Academy™

24. தரிசு நில அட்லஸ் - 2019 (Wastelands Atlas – 2019) இன் ஐந்தாவது பதிப்பு யாரால் உருவாக்கப்பட்டுள்ளது?

**விடை :** தேசிய தொலைநிலை உணர்திறன் மையம் (National Remote Sensing centre (NRSC)

**விளக்கம்**

- மத்திய ஊரக வளர்ச்சி, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மற்றும் பஞ்சாயத்து ராஜ்-இன் மத்திய அமைச்சர் **ஸ்ரீ நரேந்திர சிங் தோமர் தரிசு நில அட்லஸ் - 2019ஐ** (Wastelands Atlas – 2019) **வெளியிட்டார்.**
  - நிலவளத் திணைக்களம் தேசிய தொலைநிலை உணர்திறன் மையம் (National Remote Sensing centre (NRSC)), விண்வெளித் துறை இணைந்து இந்தியாவின் தரிசு நிலங்களை – 2000, 2005, 2010 மற்றும் 2011 பதிப்புகளை வெளியிட்டுள்ளது.
  - **செய்தி துளிகள்**
    - இந்திய தொலைநிலை உணர்திறன் செயற்கைக்கோள் தரவைப் பயன்படுத்தி என்.ஆர்.எஸ்.சி. மேற்கொண்ட புதிய தரிசு நில மேப்பிங் பயிற்சியை கொண்டு, தரிசு நில அட்லஸ் - 2019 (Wastelands Atlas – 2019) இன் ஐந்தாவது பதிப்பு.

25. AHTU யின் விரிவாக்கம் என்ன?

**விடை :** Anti- Human Trafficking Units

**விளக்கம்**

- நிர்பயா நிதியின் உதவியுடன் அனைத்து மாவட்டங்களிலும் மனிதக் கடத்தல் தடுப்புப் பிரிவுகளை **(Anti- Human Trafficking Units – AHTU)** அமைப்பதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

- தற்போது நாட்டில் **146 மாவட்டங்களில்** மட்டுமே AHTUகள் செயல்படுகின்றன.
- **செய்தி துளிகள்**
  - இது பெண்கள் பாதுகாப்பை வலுப்படுத்தும். மேலும் அவர்களிடையே இவை அதிகப் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தும் என்று பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி கூறியுள்ளார்.
  - இந்திய அரசு தனது 2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நிர்பயா நிதிக்கு 1000 கோடி ரூபாய் நிதியை அறிவித்துள்ளது.

26. பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் விவசாயிகளின் வசதிக்காக அறிமுகம் செய்த புதிய மொபைல் செயலி எது?

**விடை** : ∴பர்மித்ரா

**விளக்கம்**

- **பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் விவசாயிகளின் வசதிக்காக ∴பர்மித்ரா என்ற புதிய மொபைல் செயலியை** அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த செயலி விவசாயிகளின் தேவைகளுக்கு உதவவும் அவர்களின் கவலைகளை நிவர்த்தி செய்யவும் உதவுகிறது.
  - இது அவர்களின் விவசாய முறைகளை மேம்படுத்துவதில் பயன்படுத்தக்கூடிய பொருத்தமான தகவல்களை அளிக்கிறது.
  - **செய்தி துளிகள் :**
    - பஜாஜ் அலையன்ஸ் நிர்வாக இயக்குனர் : தபன் சிங்கெல்.
    - தலைமையகம் : புனே, மகாராஷ்டிரா

27. ரயில்வே சொத்துக்களை தீர்மானித்தல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான ரயில்வே செயலி எது?


We Shine Academy™

**விடை :** சிஆர்எஸ் அனுமதி மேலாண்மை அமைப்பு (CRS Sanction Management System)

**விளக்கம்**

- ரயில்வே மேற்கொண்டு வரும் திட்டங்களை முறையாக கண்காணிப்பதை உறுதிப்படுத்த உதவும் ஐ.டி – செயல்படுத்தப்பட்ட சேவைகளை வலுப்படுத்த இந்திய ரயில்வே அகில இந்தியாவிற்கு மூன்று செயலிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. **சிஆர்எஸ் அனுமதி மேலாண்மை அமைப்பு, ரெயில்** - சாலை கடக்கும் ஜிஏடி ஒப்புதல் அமைப்பு மற்றும் கட்டுமானத்திற்கான டிஎம்எஸ் (CRS Sanction Management System, Rail – road crossing GAD approval system and TMS for construction) ஆகிய செயலிகள் ஐடி–செயல்படுத்தப்பட்ட சேவைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
    - **செய்தி துளிகள்**
        - ரயில்வே சொத்துக்களை தீர்மானித்தல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றில் சிஆர்எஸ் அனுமதி மேலாண்மை அமைப்பு ஒரு முக்கிய அம்சமாகும், அதே சமயம் ரயில் - சாலை கடக்கும் ஜிஏடி ஒப்புதல் அமைப்பு சாலை ஓவர் பாலங்கள் மற்றும் சாலை பாலங்களின் கீழ் கட்டுமானம் தொடர்பான பொதுவான ஒப்பந்த வரைபடங்களை தயாரித்தல், செயலாக்குதல் மற்றும் ஒப்புதல் ஆகியவற்றை விரைவுபடுத்துகிறது.

28. குஜராத் தீவிரவாதக் கட்டுப்பாடு மற்றும் முறைசார் குற்றங்கள் (Gujarat Control of Organised Crime – GUJCOC) என்ற மசோதாவுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் எந்த ஆண்டு ஒப்புதலை வழங்கியுள்ளார்?

**விடை :** 2019

**விளக்கம்**

- **குஜராத் தீவிரவாதக் கட்டுப்பாடு மற்றும் முறைசார் குற்றங்கள்** (Gujarat Control of Terrorism and Organised Crime – GCTOC) என்ற **மசோதாவுக்கு** இந்தியக் குடியரசுத் தலைவர் **ராம்நாத் கோவிந்த்** தனது **ஒப்புதலை** வழங்கியுள்ளார்.
    - புதிய சட்டத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று இடைமறித்து கேட்கப்பட்ட தொலைபேசி உரையாடல்கள் ஆகும். இது தற்பொழுது ஒரு சட்டப்படியான சான்றாகக் கருதப்படும்.
    - **செய்தி துளிகள் :**
        - இந்த மசோதாவானது ஒரு சிறப்பு நீதிமன்றத்தை உருவாக்குவதற்கும் சிறப்பு அரசு வழக்குரைஞர்களை நியமிப்பதற்கும் வழிவகை செய்கின்றது.
        - முன்னதாக குஜராத் முறைசார் குற்றக் கட்டுப்பாடு மசோதா (Gujarat Control of Organised Crime – GUJCOC) என்று பெயரிடப்பட்ட இந்த மசோதாவானது 2004 ஆம் ஆண்டு முதல் மூன்று முறை குடியரசுத் தலைவர் ஒப்புதலைப் பெறத் தவறிவிட்டது.

29. ‘இந்தியா நீதி அறிக்கை 2019’ படி, தனது குடிமக்களுக்கு நீதி வழங்குவதில் முதலிடம் வகிக்கும் மாநிலம் எது?

**விடை :** மகாராஷ்டிரா

**விளக்கம்**

- **‘இந்தியா நீதி அறிக்கை 2019’** படி, **மகாராஷ்டிரா** தனது **குடிமக்களுக்கு நீதி வழங்குவதில் முதலிடம் வகிக்கிறது,** தொடர்ந்து கேரளா, தமிழ்நாடு, பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகியவை குடிமக்களுக்கு நீதி வழங்குவதற்கான திறன் குறித்து மாநிலங்களின் முதல் தரவரிசையில் உள்ளன.
    - ஏழு சிறிய மாநிலங்களின் பட்டியலில் (தலா ஒரு கோடிக்கும்

We Shine Academy™

குறைவான மக்கள் தொகை) கோவா முதலிடத்திலும், சிக்கிம் மற்றும் இமாச்சல பிரதேசத்திலும் அதனை தொடர்ந்தும் உள்ளன.

- **செய்தி துளிகள் :**
  - தரவரிசை இந்திய நீதி அறிக்கை (ஐ.ஜே.ஆர்) 2019இன் ஒரு பகுதியாகும், இது சமூக நீதி மையம், பொதுவான காரணம், காமன்வெல்த் மனித உரிமைகள் முயற்சி, டாஷ், டிஸ் - பிரயாஸ் மற்றும் சட்டக் கொள்கைக்கான விதி மையம் ஆகியவற்றுடன் டாடா அறக்கட்டளையின் முன் முயற்சியாகும்.

30. பிராந்திய அளவிலான தேடல் மற்றும் மீட்பு பட்டறை மற்றும் பயிற்சி 2019 (Regional Level Search and Rescue Workshop and Exercise 2019 (ReSAREX – 19)) எங்கு நடைபெற்றது?

**விடை :** கோவா

**விளக்கம்**

- இந்திய கடலோர காவல்படை (ICG) **கோவா** கடற்கரையில் நடத்தப்பட்ட **பிராந்திய அளவிலான தேடல் மற்றும் மீட்பு பட்டறை மற்றும் பயிற்சி 2019** (Regional Level Search and Rescue Workshop and Exercise 2019 (ReSAREX – 19)) இன் போது அதன் செயல்திறனையும் தயார்நிலையையும் சோதித்தது.
  - **செய்தி துளிகள் :**
    - இந்திய கடலோர காவல்படை நிறுவப்பட்டது: 18 ஆகஸ்ட் 1978.
    - தலைமையகம் : புது தில்லி
    - குறிக்கோள் : வயம் ராக அமா (நாங்கள் பாதுகாக்கின்றோம்)

31. குருநானக்கின் 550 – ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு எந்த வழித்தடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது?

**விடை :** கர்தார்பூர்

**விளக்கம்**



We Shine Academy

- இந்தியா, பாகிஸ்தான் இடையிலான கர்தார்பூர் வழித்தடத்தை பிரதமர் நரேந்திர மோடி சனிக்கிழமை திறந்து வைத்தார். அத்துடன், முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங், மத்திய அமைச்சர் ஹர்சிம்ரத் கௌர், பஞ்சாப் முதல்வர் அமரீந்தர் சிங் உள்பட சுமார் 500 பேர் கொண்ட முதல் யாத்ரீகர்கள் குழுவை கர்தார்பூருக்கு பிரதமர் மோடி வழியனுப்பிவைத்தார்.
    - **குருநானக்கின் 550 – ஆவது பிறந்த தினம்** வரும் 12-ஆம் தேதி கொண்டாடப்படவிருக்கும் நிலையில் **கர்தார்பூர் வழித்தடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.**
    - **செய்தி துளிகள் :**
        - 1522 : முதல் சீக்கிய குருவான குருநானக் கர்தார்பூரில் குருத்வாராவை நிறுவினார்.
        - 2018, நவம்பர் 22: கர்தார்பூர் வழித்தடத் திட்டத்துக்கு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல்.

32. குஜராத்தின் பாவ்நகர் துறைமுகத்தில் உலகின் முதல் சி.என்.ஜி முனையத்திற்க்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் யாருக்கு இடையே கையெழுத்தானது?

**விடை :** குஜராத் கடல்வாரியம் மற்றும் லண்டனை தளமாகக் கொண்ட தொலைநோக்குக் குழு

**விளக்கம்**

- **குஜராத்தின் பாவ்நகர் துறைமுகத்தில் உலகின் முதல் சி.என்.ஜி முனையத்திற்கு குஜராத் அரசு ஒப்புதல்** அளித்துள்ளது.
    - பாவ்நகர் துறைமுகத்தில் சி.என்.ஜி முனையம் அமைக்க யுனைடெட் கிங்டத்தை தளமாகக் கொண்ட தொலைநோக்கு குழுமம் மற்றும் மும்பையைச் சேர்ந்த பத்மநாப் மபத்லால் குழுமம் இணைந்து 1,900 கோடி ரூபாய் முதலீடு செய்யும்.
    - **செய்தி துளிகள் :**

- குஜராத் முதல்வர் : விஜய் ரூபானி
- ஆளுநர் : ஆச்சார்யாதேவ் வ்ரத்
- தலைநகரம் : காந்திநகர்
- CNG – Compressed natural gas

33. மகாராஷ்டிரத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தவும், சட்டப்பேரவையை தற்காலிகமாக முடக்கி வைக்கவும் உதவும் அரசமைப்பு சட்ட பிரிவு எது?

**விடை :** 356 (1)

**விளக்கம்**

- மகாராஷ்டிரத்தில் ஆட்சி அமைப்பது தொடர்பாக தொடர்ந்து குழப்பமும், இழுபறியான சூழ்நிலையும் நீடித்து வந்த நிலையில் அந்த மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி செவ்வாய்க்கிழமை (12.11.19) அமல்படுத்தப்பட்டது.
    - குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்துவது தொடர்பாக ஆளுநர் பகத்சிங் கோஷியாரி அளித்த அறிக்கையைப் பரிசீலித்த மத்திய அமைச்சரவை, இது தொடர்பாக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்துக்கு செவ்வாய்கிழமை பரிந்துரை அனுப்பியது.
    - அந்தக் கூட்டத்தில் அரசமைப்புச் **சட்டத்தின் 356 (1) பிரிவின்படி மகாராஷ்டிரத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சியை அமல்படுத்தவும், சட்டப்பேரவையை தற்காலிகமாக முடக்கி வைக்கவும்** பரிந்துரைக்கப்பட்டது.
    - **செய்தி துளிகள் :**
        - மகாராஷ்டிரத்தில் கடந்த 59 ஆண்டுகால வரலாற்றில் இப்போது மூன்றாவது முறையாக குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டுள்ளது.
        - மகாராஷ்டிர மாநிலம் 1960-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

34. சமீபத்தில் யார் உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட வகை செய்யும் திருத்தத்தை நடைமுறைக்கு கொண்டு வர அரசு உத்தரவிட்டுள்ளது?

**விடை :** மாற்றுத் திறனாளி

**விளக்கம்**

- **உள்ளாட்சித் தேர்தல்களில் மாற்றுத் திறனாளிகளும் போட்டியிட** வகை செய்யும் **சட்டத் திருத்தத்தை** நடைமுறைக்குக் கொண்டு வரும் வகையில் **அரசு உத்தரவு** வெளியிடப்பட்டுள்ளது.
    - அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் போட்டியிட்டு பதவிகளில் அமரும் வகையில், கடந்த ஜூலையில் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது.
    - **செய்தி துளிகள் :**
        - சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்திருத்தத்தை செயலாக்கத்துக்குக் கொண்டு வரும் வகையில், உரிய உத்தரவை தமிழக அரசு பிறப்பித்துள்ளது.

35. **'**ஸ்வச் - நிர்மல் டாட் அபியான்**'** என்ற திட்டம் எந்த அமைச்சகத்தால் மேற்கொள்ளப்பட்டது?

**விடை :** மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

**விளக்கம்**

- மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் 2019 நவம்பர் 11 – 17 முதல் **'ஸ்வச் - நிர்மல் டாட் அபியான்'** என்ற திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட 50 கடற்கரைகளில் வெகுஜன தூய்மை – விழிப்புணர்வு இயக்கத்தை மேற்கொண்டு வருகிறது.
    - **செய்தி துளிகள் :**
        - நாடு முழுவதும் கரையோரப் பகுதிகளை சுத்தமாக மாற்ற முயற்சிப்பதும், கடலோர சுற்றுச்சூழல் அமைப்புகளின் முக்கியத்துவம் குறித்த குடிமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், கடல் உயிரினங்களை, பிளாஸ்டிக்

கழிவுகள், தொழில்துறை கழிவுகள் மற்றும் பிற தீங்கு விளைவிக்கும் பொருட்களிலிருந்து காப்பாற்றுவதற்கும் ஸ்வாச் - நிர்மல் டாட் அபியான் உதவுகிறது.

- சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர்.

36. சமீபத்தில் இந்தியத் தலைமைப் பதிவாளரால் வெளியிடப்பட்ட மகப்பேறு இறப்பு விகிதம் (Maternity Mortality Ratio – MMR) குறித்த ஒரு சிறப்பு அறிக்கையின்படி, இந்தியாவின் MMR ஆனது ஒரு ஆண்டில் 8 புள்ளிகள் என்ற அளவில் குறைந்துள்ளது. இந்தியாவில் உள்ள எத்தனை மாநிலங்கள் இந்த MMR இலக்கை அடைந்துள்ளன?

**விடை** : 11

**விளக்கம்**

- சமீபத்தில் இந்தியத் தலைமைப் பதிவாளரால் வெளியிடப்பட்ட **மகப்பேறு இறப்பு விகிதம்** (Maternity Mortality Ratio – MMR) குறித்த ஒரு சிறப்பு அறிக்கையின்படி, இந்தியாவின் MMR ஆனது **ஒரு ஆண்டில் 8 புள்ளிகள் என்ற அளவில் குறைந்துள்ளது.**
  - 2014 – 16 ஆம் அண்டுகளில் பிறந்த ஒரு லட்சம் குழந்தைகளுக்கு 130 ஆக இருந்த MMR ஆனது 2015 – 17 ஆம் ஆண்டுகளில் பிறந்த ஒரு லட்சம் குழந்தைகளுக்கு 122 ஆக (6.2% சரிவு) குறைந்துள்ளது.
  - **செய்தி துளிகள் :**
    - தற்போது கேரளா, மகாராஷ்டிரா, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், ஜார்க்கண்ட், தெலுங்கானா, குஜராத், உத்தரகாண்ட், மேற்கு வங்கம், கர்நாடகா மற்றும் ஹரியானா ஆகிய இந்தியாவில் உள்ள 11 மாநிலங்கள் இந்த MMR இலக்கை அடைந்துள்ளன.

- அசாம், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய நான்கு மாநிலங்கள் MMR இலக்கை அடைவதில் பின்தங்கியுள்ளன.

37. ஸ்ரீநகரில் உள்ள எந்த பகுதியை சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலமாக (ESZ – eco sensitive zone) அறிவிப்பதற்காக பத்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை ஜம்மு காஷ்மீர் அரசானது அமைத்துள்ளது?

**விடை :** தால் ஏரி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதி

**விளக்கம்**

- ஸ்ரீநகரில் உள்ள தால் **ஏரி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் சுருங்கி வருவதன்** காரணமாக, **ஜம்மு காஷ்மீர் அரசானது** இந்தப் பகுதியை சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலமாக (ESZ – eco sensitive zone) அறிவிப்பதற்காக **பத்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை** அமைத்துள்ளது.
  - **செய்தி துளிகள் :**
    - சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலங்கள் என்பது பாதுகாக்கப்பட்ட பகுதிகள், தேசியப் பூங்காக்கள் மற்றும் வன விலங்குச் சரணாலயங்கள் ஆகியவற்றைச் சுற்றி 10 கி.மீ தொலைவு வரை பரவியுள்ள பகுதிகளாகும். சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986ன் கீழ் இந்திய அரசின் மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனங்கள் துறை அமைச்சகத்தால் ESZகள் அறிவிக்கப்படுகின்றன.

38. 'தகவல் அறியும் உரிமை (ஆர்டிஐ) சட்ட வரம்பின் கீழ் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அலுவலகமும் வரும்' என்று யாரின் தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு உறுதி செய்துள்ளது?

**விடை :** ரஞ்சன் கோகோய்

**விளக்கம்**

- 'தகவல் அறியும் உரிமை (ஆர்டிஐ) சட்ட வரம்பின் கீழ் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அலுவலகமும் வரும்' என்று உச்சநீதிமன்றம் புதன்கிழமை ஒருமனதாக தீர்ப்பளித்தது.
    - இதன் மூலம், **'உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அலுவலகம், ஆர்டிஐ சட்ட வரம்புக்கு உள்பட்டதே'** என்று தில்லி உயர் நீதிமன்றம் கடந்த 2010-ஆம் ஆண்டில் அளித்த தீர்ப்பை, **உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய்** தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு உறுதி செய்துள்ளது.
    - **செய்தி துளிகள் :**
        - தில்லி உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுக்களை தள்ளுபடி செய்த இந்த அமர்வு, 'உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அலுவலகம், ஒரு பொது அமைப்பு' என்று குறிப்பிட்டுள்ளது.
        - அதேசமயம், 'ஆர்டிஐ சட்டம், கண்காணிப்புக்கான ஆயுதமாக பயன்படுத்தப்படக் கூடாது' என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

39. முந்தைய ஆண்டின் செப்டம்பர் மாதத்தில் இருந்ததை விட இந்த ஆண்டின் செப்டம்பர் மாதத்தில் தொழில்துறை உற்பத்தியானது (தொழில்துறை உற்பத்திக் குறியீடு) எத்தனை சதவீதம் சரிந்துள்ளது?

**விடை :** 4.3%

**விளக்கம்**

- **சுரங்கத் துறை உற்பத்தி மற்றும் மின்சாரத் துறைகளில்** ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக முந்தைய ஆண்டின் செப்டம்பர் மாதத்தில் இருந்ததை விட இந்த ஆண்டின் **செப்டம்பர் மாதத்தில் தொழில்துறை உற்பத்தியானது** (தொழில்துறை உற்பத்திக் குறியீடு) **4.3% சரிந்துள்ளது**.
    - **செய்தி துளிகள் :**

- 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குப் பிறகு, முதல் முறையாக தற்பொழுது மூன்று பெரிய துறைகளின் உற்பத்தியும் குறைந்து, மிகக் குறைந்த மாதாந்திர வளர்ச்சியை உற்பத்திக் குறியீடு பதிவு செய்துள்ளது.

40. சபரிமலை வழக்கை 7 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு பரிந்துரைத்த தலைமை நீதிபதி யார்?

**விடை :** ரஞ்சன் கோகோய்

**விளக்கம்**

- **சபரிமலை கோயிலில்** வழிபட பெண்களுக்கு அனுமதி அளித்து கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ஆம் தேதி உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்தது.
  - இதனை மறு ஆய்வு செய்ய கூறி அளித்த **மனுக்கள் மீதான விசாரணையை தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் தலைமையில்** 5 நீதிபதி கொண்ட அமர்வு விசாரித்து வந்தது. அதனை அடுத்து நீதிபதிகள் ரஞ்சன் கோகோய், ஏ.எம். கான்வில்கர் (A) இந்து மல்ஹோத்ரா ஆகியோர் **7 பேர் கொண்ட அமர்வுக்கு மாற்ற தீர்பளித்தனர்.**
- **செய்தி துளிகள்**
  - மசூதிகளில் பெண்களை அனுமதிக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், ஷியா – முஸ்லிம் - தாவூதி போரா பிரிவை சேர்ந்த சிறுமிகளுக்கு மேற்கொள்ளப்படும் சடங்குகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மதம் தொடர்பான விவகாரங்களும் 7 நீதிபதிகள் அமர்வுக்கு மாற்ற ஒப்புக்கொண்டனர்.
  - அரசமைப்பு சட்டத்தில்:
    - வழிபாட்டு சுதந்திரம் - பிரிவு – 25
    - வழிபாட்டு தலங்களை நிர்வகிக்கும் சுதந்திரம் - பிரிவு – 26

41. CSIR – NEERI சமீபத்தில் வெளியிட்ட வலை களஞ்சியம் எது?

**விடை** : IndAIR

**விளக்கம்**

- தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனமானது (**National Environmental Engineering Research Institute** – NEERI) அறிவியல் (ம) தொழிற்துறை ஆராய்ச்சி மன்றத்துடன் (**Council of Scientific & Industrial Research** – CSIR) , **இணைந்து** கடந்த 60 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட காற்றின் தர ஆய்வுகளை கொண்ட முதலாவது **வலை களஞ்சியமான "IndAIR"-**ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.
    - IndAIR - இந்திய காற்று தர ஆய்வுகள் ஊடாடும் களஞ்சியம்
- **செய்தி துளிகள்**
    - 1905 ஆம் ஆண்டிலிருந்து இயற்றப்பட்ட நாட்டின் அனைத்து முக்கியமான சட்டங்களும் இதில் அடங்கும்.
    - CSIR – NEERI – 1958 ஆம் ஆண்டில் நாக்பூரில் நிறுவப்பட்டது.

42. ஜம்மு-காஷ்மீர், லடாக் யூனியன் பிரதேசங்களுக்கு இடையே சொத்துகளைப் பகிர்ந்தளிப்பதற்காக எத்தனை பேர் அடங்கிய குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது?

**விடை** : 3

**விளக்கம்**

- **ஜம்மு-காஷ்மீர், லடாக் யூனியன் பிரதேசங்களுக்கு** இடையே **சொத்துகளைப் பகிர்ந்தளிப்பதற்காக 3 பேர் அடங்கிய குழுவை** மத்திய அரசு அமைத்துள்ளது.
- ○ ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை ஜம்மு-காஷ்மீர், லடாக் ஆகிய இரு யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்க நாடாளுமன்றம் கடந்த ஆகஸ்ட் மாதம் ஒப்புதல் அளித்தது. இதையடுத்து, கடந்த மாதம் 31-ஆம் தேதியிலிருந்து இரண்டு புதிய யூனியன் பிரதேசங்களும் செயல்பாட்டுக்கு வந்தன.

- **செய்தி துளிகள்:**
  - பாதுகாப்பு அமைச்சக முன்னாள் செயலர் சஞ்சய் மித்ரா தலைமையிலான அந்தக் குழுவில் ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி அருண் கோயல், ஓய்வு பெற்ற ஐசிஏஎஸ் அதிகாரி கிரிராஜ் பிரசாத் குப்தா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். ஜம்மு-காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

43. அனைத்து வீடுகளுக்கும் எந்த ஆண்டுக்குள் குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் நடைமுறைபடுத்தப்படவுள்ளது?

**விடை :** 2024

**விளக்கம்**

- **அனைத்து வீடுகளுக்கும் 2024-ஆம் ஆண்டுக்குள் குழாய் மூலம் குடிநீர் வழங்குவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இஸ்ரேலின் உதவியுடன் இந்தியா** செயல்படவுள்ளது.
  - பிரதமர் நரேந்திர மோடி சுதந்திர தினத்தின்போது ஆற்றிய உரையில், அனைத்து வீடுகளுக்கும் வரும் 2024-ஆம் ஆண்டுக்குள் குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டத்துக்கு ரூ.3.5 லட்சம் கோடிக்கும் அதிகமாக செலவிடப்படவுள்ளதாகத் தெரிவித்திருந்தார். இந்நிலையில், 'நீர் மேலாண்மையில் இந்தியா-இஸ்ரேல் இடையேயான பரஸ்பர ஒத்துழைப்பு' என்ற மாநாடு, இஸ்ரேலில் வரும் 17-ஆம் தேதி முதல் 19-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.
  - **செய்தி துளிகள்:**
    - இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவிலுள்ள இந்தியத் தூதரகம் இந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளது.
    - நீர் மறுசுழற்சியை இஸ்ரேல் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. அந்நாட்டின் வீடுகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரில் 80 சதவீதம், மறுசுழற்சி செய்யப்பட்டு மீண்டும்

பயன்படுத்தப்படுகிறது. ஆண்டுக்கு 14.13 டிஎம்சி கழிவு நீரை இஸ்ரேல் மறுசுழற்சி செய்கிறது. இது, மற்ற நாடுகளின் மறுசுழற்சி அளவுடன் ஒப்பிடுகையில் 4 மடங்கு அதிகமாகும்.

44. தொலைவில் இருக்கக்கூடிய இலக்கையும் துல்லியமாகத் தாக்கும் வல்லமை படைத்த ஏவுகணை பெயர் என்ன?

**விடை :** "அக்னி 2"

**விளக்கம்**

- **"அக்னி 2" ஏவுகணை** முதல் முறையாக இரவில் ஏவப்பட்டு நவம்பர் 16, 2019 அன்று வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டதாக பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.
    - அணு ஆயுதத்தை தாங்கி கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து 2,000 கி.மீ **தொலைவில் இருக்கக் கூடிய இலக்கையும் துல்லியமாகத் தாக்கும் வல்லமை** படைத்த இந்த ஏவுகணை பாதுகாப்புப் படையில் ஏற்கனவே சேர்த்துக்கொள்ளப்பட்டது.
    - **செய்தி துளிகள் :**
        - 20 மீட்டர் நீளம், 17 டன் எடை கொண்ட இந்த ஏவுகணை, 1,000 கிலோ எடையுள்ள வெடிபொருளை தாங்கிச் செல்லும் திறன் படைத்ததாகும் என்று அந்த வட்டாரங்கள் கூறின.

45. எந்த ஆண்டுக்குள் 5 பில்லியன் டாலர் மதிப்பில் ராணுவ தளவாடங்கள் ஏற்றுமதி செய்ய இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது?

**விடை :** 2025

**விளக்கம்**

- வரும் **2025 ஆம் ஆண்டுக்குள் 5 பில்லியன் டாலர்** (ரூ.35 ஆயிரம் கோடி) **மதிப்பில் ராணுவ தளவாடங்களை ஏற்றுமதி செய்ய இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.**
    - 2025 ஆம் ஆண்டுக்குள் விண்வெளி மற்றும் பாதுகாப்பு துறையில்

ரூ.70 ஆயிரம் கோடி முதலீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

- இத்திட்டங்கள் அனைத்தும் “இந்தியாவில் தயாரிப்போம்” என்ற திட்டத்தின் கீழ் பாதுகாப்பு துறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்று இந்தியாவின் பாதுகாப்பு துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் “இந்தியாவின் எழுச்சி” என்ற கருத்தரங்கில் தெரிவித்தார்.
- **செய்தி துளிகள்:**
    - தென்கிழக்கு ஆசிய நாடுகள் (ஆசியான்) மாநாடு தாய்லாந்தில் நடைபெறுகிறது.
    - “இந்தியாவின் எழுச்சி” என்ற தலைப்பில் கருத்தரங்கம் தாய்லாந்தின் தலைநகரான பாங்காக்கில் நடைபெற்றது.

46. ஜாலியன் வாலா பாக் தேசிய நினைவு (திருத்த) மசோதா, என்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டது?

**விடை :** ஆகஸ்ட் 2, 2019

**விளக்கம்**

- பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ஜாலியன் வாலா பாக் தேசிய நினைவிடத்தை நிர்வகிக்கும் அறக்கட்டளையின் அறங்காவலராக காங்கிரஸ் கட்சியின் தலைவர் அங்கம் வகித்து வந்த நிலையில், அதனை நீக்குவதற்கான மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
    - **‘ஜாலியன் வாலா பாக் தேசிய நினைவிட சட்டத் திருத்த மசோதா’** என்ற பெயரிலான அந்த மசோதா, **மக்களவையில்** கடந்த **ஆகஸ்ட் மாதம் 2-ஆம்** தேதி நிறைவேற்றப்பட்டிருந்தது.
    - **செய்தி துளிகள்:**
        - தேசிய நினைவுச்சின்னச் சட்டம், 1951, அறங்காவலர்கள் காங்கிரஸ் தலைவர்களாக இருப்பார்கள் என கூறுகிறது.
        - ஜாலியன் வாலா பாக் அறக்கட்டளை கடந்த 1951-இல்

உருவாக்கப்பட்டது.

47. பவந்தர் பார்பாய் யோஜனா திட்டம் எப்போது தொடங்கப்பட்டது?

**விடை :** 2018

**விளக்கம்**

- **ஹரியானா** மாநிலமானது **'பவந்தர் பார்பாய் யோஜ்னா** (Bhavantar Bharpayee Yojana-BBY) என்ற **திட்டத்தின்** கீழ் கூடுதல் பயிர்களை இணைத்துள்ளது.
    - கேரட், பட்டாணி, கின்னோ, கொய்யா, குடை மிளகாய் மற்றும் கத்திரிக்காய் ஆகியவை இந்தத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ள சில பயிர்களாகும்
    - **செய்தி துளிகள்:**
        - BBYன் கீழ், விவசாயிகள் தங்கள் பயிர்களை அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட குறைந்த விலைக்கு விற்றதற்காக இழப்பீடு பெறுகிறார்கள்.

48. சீட்டு நிதி நிறுவன சட்டதிருத்த மசோதா தனி நபராலும், 4 பேரை விட குறைவான பங்குதாரர்களாலும் நிர்வகிக்கப்படும் சீட்டு நிதி நிறுவனங்கள் வசூலிக்கும் தொகையை ரூ.1 லட்சத்திலிருந்து எவ்வளவு அதிகரிக்கிறது?

**விடை :** ரூ.3 லட்சம்

**விளக்கம்**

- சீட்டு நிதி நிறுவன சட்ட திருத்த மசோதாவுக்கு மக்களவை ஒப்புதல் அளித்தது.
    - தனி நபராலும், 4 பேரை விட குறைவான பங்குதாரர்களாலும் நிர்வகிக்கப்படும் **சீட்டு நிதி நிறுவனங்கள் வசூலிக்கும் தொகையை ரூ.1 லட்சத்தில் இருந்து ரூ.3 லட்சமாக உயர்த்துவதற்கு மசோதாவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.**
    - இதேபோல், 4 பேருக்கும் அதிகமான பங்குதாரர்களைக்

கொண்ட சீட்டு நிதி நிறுவனம் வசூலிக்கும் தொகை ரூ.6 லட்சத்தில் இருந்து 18 லட்சமாக உயர்த்துவதற்கு இந்த மசோதா பரிந்துரை செய்துள்ளது.

- **செய்தி துளிகள்:**
  - இதுமட்டுமன்றி, நிதி நிறுவனத்தின் முகவருக்கான கமிஷன் தொகையை 5 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாக உயர்த்துவதற்கு மசோதா பரிந்துரை செய்துள்ளது.
  - நிதி நிறுவனங்களின் செயல்பாடுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில், 2019- ஆண்டைய சீட்டு நிதி சட்டதிருத்த மசோதாவில் 'கடன் வழங்கும் நிறுவனம்', 'கூட்டு நிதி' போன்ற வார்த்தைகள் சேர்க்கப்பட்டுள்ளன என்றார்.
  - மத்திய நிதித் துறை இணையமைச்சர் அனுராக்தாக்குர்.

49. இந்திய விமானப் படையிடம் 3 ரஃபேல் போர் விமானங்களை எந்த அரசினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது?

**விடை** : பிரான்ஸ்

**விளக்கம்**

- **'இந்திய விமானப் படையிடம் 3 ரஃபேல் போர் விமானங்களை பிரான்ஸ் அரசு ஒப்படைத்துள்ளது**. பிரான்ஸில் அந்தப் போர் விமானங்களில் இந்திய விமானப் படை வீரர்கள் மற்றும் பொறியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது' என்று பாதுகாப்புத் துறை இணையமைச்சர் ஸ்ரீபாத் நாயக், மக்களவையில் கூறினார்.
  - **செய்தி துளிகள்:**
    - பிரான்ஸின் டஸால்ட் ஏவியேஷன் நிறுவனத்திடம் இருந்து இந்திய விமானப் படைக்கு ரூ.59,000 கோடியில் 36 ரஃபேல் போர் விமானங்களைக் கொள்முதல் செய்வதற்கு கடந்த 2016-ஆம் ஆண்டில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

- இந்நிலையில், முதல் ரஃபேல் விமானம், பிரான்ஸில் உள்ள ஒரு விமானப் படைத் தளத்தில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கிடம் கடந்த அக்டோபர் 8-ஆம் தேதி ஒப்படைக்கப்பட்டது. இதேபோல், இதுவரை மொத்தம் 3 ரஃபேல் போர் விமானங்கள், இந்திய விமானப் படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

51. உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 'பிருத்வி-2' ஏவுகணை பரிசோதனை எங்கு நடைபெற்றது?

**விடை :** சந்திப்பூர், ஒடிஸா

**விளக்கம்**

- **உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 'பிருத்வி-2' ஏவுகணை புதன்கிழமை இரவில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.**
  - இந்த ஏவுகணை 500 கிலோ முதல் 1,000 கிலோ எடையுள்ள அணு ஆயுதத்தை தாங்கிச் சென்று நிலத்தில் 350கி.மீ, தொலைவில் உள்ள இலக்கை தாக்கி அழிக்கும் திறன் கொண்டதாகும்.
  - **செய்தி துளிகள்:**
    - ஒடிஸா மாநிலம், சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த பரிசோதனை தளத்தில் புதன்கிழமை இரவில் இரண்டு 'பிருத்வி-2' ஏவுகணைகள் வெற்றிகரமாக ராணுவத்தால் பரிசோதிக்கப்பட்டன.

52. சமீபத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2021, எத்தனை மொழிகளில் நடத்தப்படும் என்று மத்திய உள்துறை இணைஅமைச்சர் நித்யானந்த் ராய் தெரிவித்தார்?

**விடை :** 16

**விளக்கம்**

- **மக்கள் தொகை கணக்கெடுப்பு 2021, 16 மொழிகளில் நடத்தப்படும்** என்று **மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய்** தெரிவித்தார்.
    - மக்கள் தொகை கணக்கெடுப்பு 2021 இன் போது, தரவு சேகரிப்புக்கு மிக்ஸ் மோட் அணுகுமுறை பின்பற்றப்படுகிறது. 2020 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை வீடு பட்டியல் மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு மற்றும் 2021 பிப்ரவரி 09-28 காலப்பகுதியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு என இரண்டு கட்டங்களாக கணக்கெடுப்பு நடத்தப்படும்.
    - **செய்தி துளிகள்:**
        - 16 மொழிகளில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2021 நடத்த 8754.23 கோடி ரூபாய் செலவாகும் என செலவு நிதிக் குழுவால் (Expenditure Finance Committee (EFC)) கணக்கிடப்பட்டுள்ளது.
        - தலைமைப் பதிவாளர் மற்றும் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையர் : விவேக் ஜோஷி

53. வாடகைத்தாய் முறை (ஒழுங்கு முறைப்படுத்துதல்) மசோதா 2019 இன் படி வாடகைத்தாயின் வயது வரம்பு என்ன?

**விடை :** 25 முதல் 35 வரை

**விளக்கம்**

- வாடகைத்தாய் முறையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான மசோதாவை மாநிலங்களவையின் தேர்வுக் குழு ஆய்வுக்காக மத்திய அரசு வியாழக்கிழமை (21.11.2019) பரிந்துரைத்தது.
    - **வாடகைத்தாய் முறை (ஒழுங்கு முறைப்படுத்துதல்) மசோதா 2019-இன் படி, வர்த்தக அடிப்படையில் வாடகைத்தாய் முறையை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்படும்.** அத்துடன், கரு முட்டையை விற்பனை செய்வது மற்றும் வெளிநாடுகளில் இருந்து

இறக்குமதி செய்வதற்கும் தடை விதிக்கப்படும்.

- **செய்தி துளிகள்:**
  - வாடகைத்தாய் முறையில் குழந்தை பெற்றுக்கொள்ள விரும்பும் தம்பதி இந்தியக் குடிமக்களாக இருக்க வேண்டும். அதில் மனைவி 23 முதல் 50 வயதுக்கு உள்பட்டவராகவும், கணவன் 26 முதல் 55 வயதுக்கு உள்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

54. பயங்கரவாதத்துக்கு எதிராக ஒருங்கிணைந்த செயல்பாடு குறித்த (இந்தியா – உஸ்பெகிஸ்தான்) ஒப்பந்தம் எந்த அமைச்சகத்தால் போடப்பட்டது?

**விடை :** உள்துறை அமைச்சகம்

**விளக்கம்**

- **பயங்கரவாதத்துக்கு எதிரான ஒருங்கிணைந்த செயல்பாடு - இந்தியா – உஸ்பெகிஸ்தான் இடையே ஒப்பந்தம்** கையெழுத்தானது.
  - இது தொடர்பான ஒப்பந்தம் இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் உஸ்பெகிஸ்தான் உள்துறை அமைச்சர் புலாத் போபோ ஜோனாவ் ஆகியோர் முன்னிலையில் கையெழுத்தானது.
  - **தேர்வுத் துளிகள்**
    - பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள், குற்றங்களை தடுப்பது, கடத்தல் சம்பவங்களை தடுப்பது உள்ளிட்ட துறைகளில் ஒப்பந்தம் போடப்பட்டது.
    - பிரதமர் மோடி கடந்த 2015, 2016-ம் ஆண்டுகளில் இந்தியா – உஸ்பெகிஸ்தான் உறவை மேம்படுத்த அந்நாட்டிற்கு பயணம் மேற்கொண்டார்.

55. இந்தியாவின் மிக இளம் வயது நீதிபதி யார்?

**விடை :** மயங்க் பிரதாப் சிங்

**விளக்கம்**

- **இந்தியாவின் மிக இளம் வயது நீதிபதியாக ஜெய்ப்பூரைச் சேர்ந்த மயங்க் பிரதாப் சிங் 21 வயதில் தேர்வாகி சாதனை படைத்துள்ளார்.**
    - நீதித்துறை சேவைக்கான தேர்வு எழுத 23 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும் என்று இருந்தது.
    - இந்நிலையில் அந்த தேர்வெழுதும் வயதை 21-ஆக குறைத்து ராஜஸ்தான் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

56. மாநிலத்தில் குடியரசு தலைவர் ஆட்சி பற்றி குறிப்பிடும் ஷரத்து என்ன?

**விடை :** ஷரத்து 356 (1)

**விளக்கம்**

- **மகாராஷ்டிரா மாநிலத்தின் 18-வது முதலமைச்சராக மீண்டும் பதவியேற்றார் தேவேந்திர.்.பட்னாவிஸ்**
    - மகாராஷ்டிராவில் நடந்த சட்டமன்ற தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் கடந்த நவம்பர் 12-ம் தேதி குடியரசு தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது.
    - மகாராஷ்டிராவில் 288 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. அதில் பெரும்பான்மை பலம் பெற 145 இடங்கள் தேவை
    - **செய்தி துளிகள்**
        - மகாராஷ்டிரா மாநிலத்தின் ஆளுநர் - பகத்சிங் கோஷியாரி
        - இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 356 (1) பிரிவு மாநிலத்தில் குடியரசு தலைவர் ஆட்சி பற்றி குறிப்பிடுகிறது.

57. "அருந்ததி ஸ்வர்ண யோஜனா" திட்டம் எந்த மாநில அரசு கொண்டு வந்துள்ளது?

**விடை :** அசாம் அரசு

**விளக்கம்**

- **"அருந்ததி ஸ்வர்ண யோஜனா" என்ற திட்டத்தை அசாம் அரசு அறிவித்துள்ளது.**

- இத்திட்டத்தின்படி குறைந்தது 10-ம் வகுப்பு முடித்து, திருமணத்தை பதிவு செய்த பெண்களுக்கு "10 கிராம்" தங்கம் வழங்கப்படும் என்று அசாம் அரசு தெரிவித்துள்ளது.
- குடும்பங்கள் தங்களது திருமணத்தை சிறப்புத் திருமண (அசாம்) விதிகள், 1954-ன் கீழ் பதிவு செய்ய வேண்டும்.
- **செய்தி துளிகள்**
  - "தமிழக அரசின் தாலிக்கு தங்கம்" திட்டம் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களால் 2011-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

58. மாநிலங்களின் ஆளுநர்கள் பற்றி குறிப்பிடும் ஷரத்து என்ன?

**விடை** : ஷரத்து 153

**விளக்கம்**

- **மாநில ஆளுநர்கள், யூனியன் பிரதேசங்களின் துணை நிலை ஆளுநர்கள் ஆகியோருக்கான 50-வது மாநாடு, தில்லியில் நடைபெற்றது.**
  - விழாவினை தொடங்கி வைத்த குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந், கூட்டாட்சி தத்துவத்தை மேம்படுத்த ஆளுநர்களின் பங்கு அவசியம் என்று குறிப்பிட்டார்.
  - குடியரசு தலைவர் மாளிகையில் 2 நாட்கள் மாநாடு நடைபெற உள்ளது.
  - **செய்தி துளிகள்**
    - மாநிலத்தின் ஆளுநர்கள் பற்றி குறிப்பிடும் ஷரத்து 153
    - டெல்லி குடியரசு தலைவர் மாளிகை "ராஷ்டிரபதி பவன்" என்று அழைக்கப்படுகிறது.

59. தேசிய விளையாட்டு தினம் எப்போது கடைபிடிக்கப்படுகிறது?

**விடை** : ஆகஸ்ட் 29

**விளக்கம்**

- **வரும் டிசம்பர் மாதம் "ஃபிட் இந்தியா வாரம்"** (உடலை உறுதியாக வைப்பது) **இயக்கத்தை மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் நடத்தவுள்ளதாக பிரதமர் மோடி அறிவிப்பு**
    - கடந்த ஆகஸ்ட் 29-ம் தேதி பிரதமர் மோடி "ஆரோக்கிய இந்தியா (Fit India)" இயக்கத்தை தொடங்கி வைத்தார்.
    - பள்ளி மாணவர்களுக்கு இத்திட்டம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த டிசம்பர் மாதம் "ஃபிட் இந்தியா வாரம்" கடைபிடிக்கப்பட உள்ளது
    - **செய்தி துளிகள்**
        - ஆகஸ்ட் 29-ம் தேதி இந்தியாவில் தேசிய விளையாட்டு தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
        - "ஆரோக்கிய இந்தியா" திட்டத்தை மத்திய விளையாட்டு துறை அமைச்சகம் செயல்படுத்துகிறது.
        - ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 29-ம் தேதி குடியரசு தலைவரால் விளையாட்டு துறையில் சாதனை படைத்தவர்களுக்கு ராஜீவ் காந்தி கேல் ரத்னா, அர்ஜுனா மற்றும் துரோணாச்சாரியார் விருது வழங்கப்படும்

60. தற்போது உலக மனிதர்களின் சராசரி ஆயுள்காலம் எத்தனை ஆண்டுகள்?

**விடை** : 73.5 ஆண்டுகள்

**விளக்கம்**

- **உலக அளவில் மருத்துவத் துறையின் வளர்ச்சி 2022-ம் ஆண்டு 5.4% ஆக இருக்கும் என ஆய்வறிக்கையில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.**
    - தற்போது 73.5 ஆண்டுகளாக இருக்கும் உலக மனித சராசரி ஆயுள்காலம் 74.4 ஆண்டுகளாக அதிகரிக்கும் என்று தெரிவித்துள்ளது உலக சுகாதார நிறுவனம்.
    - இந்திய மருத்துவத் துறையில் ஜுன் 2019 நிலவரப்படி, துணை

சுகாதார மையங்களின் எண்ணிக்கை 1,68,418 ஆகவும், ஆரம்ப சுகாதார மையங்களின் எண்ணிக்கை 33,476 ஆகவும் உள்ளது.

- **செய்தி துளிகள்**
  - இந்தியாவில் வழங்கப்படும் மருத்துவ காப்பீடு திட்டங்கள்
  - 1. ஆயுஷ்மான் பாரத் (இந்தியா முழுவதும் மத்திய அரசின் திட்டம்)
  - 2. ஆரோக்கிய ரக்ஷா (ஆந்திர மாநிலத்தில்)
  - 3. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டம் (தமிழகம்)

61. எஸ்பிஜி சட்டத்திருத்த மசோதாவின் படி முன்னாள் பிரதமருடன் வசிக்கும் குடும்ப உறுப்பினருக்கும் அவர் பதவியில் இருந்து விலகிய பிறகு எத்தனை ஆண்டுக்கு எஸ்பிஜி பாதுகாப்பு அளிக்கப்படும்?

**விடை : 5**

**விளக்கம்**

- **சிறப்பு பாதுகாப்பு படை (எஸ்பிஜி) சட்டத்திருத்த மசோதா மக்களவையில் தாக்கல்** செய்யப்பட்டது.
  - **செய்தி துளிகள்:**
    - இந்த புதிய மசோதாவின்படி, தற்போது பதவியில் இருக்கும் பிரதமருக்கும், அவருடன் தங்கியிருக்கும் குடும்ப உறுப்பினருக்கும் எஸ்பிஜி பாதுகாப்பு அளிக்கப்படும்.
    - முன்னாள் பிரதமருடன் வசிக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கு அவர் பதவியில் இருந்து விலகிய பிறகு 5 ஆண்டுகளுக்கு மட்டுமே எஸ்பிஜி பாதுகாப்பு அளிக்கப்படும்.
    - தற்போதுள்ள எஸ்பிஜி சட்டப்படி முன்னாள் பிரதமருக்கும் அவர் குடும்ப உறுப்பினருக்கும் கால வரையின்றி எஸ்பிஜி பாதுகாப்பு அளிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

62. பெரு நிறுவனங்களுக்கான வரியை 30% இருந்து எத்தனை சதவீதமாக மத்திய அரசு குறைத்துள்ளது?

**விடை : 22%**

**விளக்கம்**

- **பெரு நிறுவனங்களுக்கான வரியை குறைப்பதற்கான வரி விதிமுறைகள் சட்டத்திருத்த மசோதாவை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மக்களவையில் அறிமுகம்** செய்தார்.
    - **செய்தி துளிகள்:**
        - நாட்டில் அந்நிய நேரடி முதலீடுகளை அதிகரிக்கும் பொருட்டு, பெரு நிறுவனங்களுக்கான வரியை 30% இருந்து 22% -மாக மத்திய அரசு அண்மையில் குறைத்தது குறிப்பிடத்தக்கது.
        - இதற்கான அவசர சட்டம் செப்டம்பர் 20 அன்று கொண்டு வரப்பட்டது.
        - அரசமைப்பு சட்டப்படி நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறாத வேளையில், குடியரசு தலைவர் மூலம் இயற்றப்படும் அவசர சட்டங்களுக்கு 6 மாதங்களுக்குள் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டியது அவசியமாகும்.

63. நாட்டில் சாலை வசதியால் இணைக்கப்படாத கிராமங்களுக்கு சிறந்த, அனைத்து வானிலையையும் தாங்க கூடிய சாலையை அமைக்கும் மத்திய அரசின் திட்டம் எது?

**விடை : PMGSY**

**விளக்கம்**

- இந்த ஆண்டில் ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசமானது பிரதான் மந்திரி கிராமீன் சதக் யோஜனா (Pradhan Mantri Grameen Sadak Yojana –

We Shine Academy™

PMGSY) என்ற திட்டத்தின் கீழ் நாட்டில் மிக அதிகத் தொலைவு கொண்ட சாலை வசதிகளை ஏற்படுத்தி சாதனை படைத்து இருக்கின்றது.

- இப்பகுதியானது இதுவரையில் 1,838 வாழ்விடங்களை உள்ளடக்கிய 11,400 கிலோ மீட்டர் சாலை வசதியைக் கொண்டிருக்கின்றது.
- **செய்தி துளிகள்:**
    - **PMGSY என்பது நாட்டில் சாலை வசதியால் இணைக்கப்படாத கிராமங்களுக்கு சிறந்த, அனைத்து வானிலைகளையும் தாங்கக் கூடிய சாலை** இணைப்பை வழங்குவதற்காக **மத்திய அரசால்** தொடங்கப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.
    - இது 2000 ஆம் ஆண்டில் அப்போதையப் பிரதமரான ஏபி வாஜ்பாயின் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது.

64. லோக்பாலின் தலைவர் யார்?

**விடை :** பினாக்கி சந்திரகோஷ்

**விளக்கம்**

- ஊழல் தடுப்பு அமைப்பான லோக்பால் குழுவின் சின்னம் (லோகோ) மற்றும் குறிக்கோள் வாசகம் செவ்வாய்க்கிழமை தேர்வு செய்யப்பட்டது.
    - தேசிய அளவில் அரசு அதிகாரிகளுக்கு எதிரான ஊழல் வழக்குகளை கையாளும் வகையில் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு லோக்பால் குழு.
    - **லோக்பால் அமைப்பின் தலைவராக நீதிபதி பினாக்கி சந்திரகோஷ்** நியமிக்கப்பட்டு, மார்ச் 23-இல் அவருக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இதன் தொடர்ச்சியாக லோக்பால் குழுவில் 8 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு மார்ச் 27-இல் பொறுப்பேற்றுக் கொண்டனர்.
    - **செய்தி துளிகள்:**

- இந்நிலையில், லோக்பால் குழுவுக்கு புதிய சின்னமும், வாசகமும் தேவைப்பட்ட நிலையில் இதுதொடர்பான திறந்தநிலை போட்டி அறிவிக்கப்பட்டிருந்தது.
- 'யாருடைய செல்வத்திற்கும் பேராசை கொள்ளாதீர்' என்ற சமஸ்கிருத வாசகம் லோக்பாலுக்கான குறிக்கோளாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

65. உத்தரபிரதேச மாநிலத்தின் முதல் பிணந்தின்னிக் கழுகு பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க மையம் எங்கு அமையவுள்ளது?

**விடை :** மகாராஜ்கஞ்ச்

**விளக்கம்**

- ஆபத்தான பிணந்தின்னிக் கழுகுகளைப் பாதுகாப்பதற்கான ஒரு முக்கிய படியாக, உத்தரபிரதேச அரசு **மகாராஜ்கஞ்ச் மாவட்டத்தின் ∴பரேண்டா பகுதியில்** மாநிலத்தின் முதல் **பிணந்தின்னிக் கழுகு பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க மையத்தை அமைக்கும்.**
  - **செய்தி துளிகள்:**
    - சுற்றுச்சூழல் அமைச்சரின் கூற்றுப்படி, நாட்டில் பிணந்தின்னிக் கழுகுகளின் எண்ணிக்கையில் கூர்மையான சரிவு ஏற்பட்டுள்ளது, இது மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக 40 மில்லியனிலிருந்து 19,000 ஆக குறைந்துள்ளது.

66. மகாராஸ்டிராவின் முதல்வராக உத்தவ் தாக்கரே சத்தியப்பிரமாணம் செய்து எத்தனை மாதங்களுக்குள் மகாராஷ்டிரா சட்டமன்றம் அல்லது சட்டமன்றத்திற்கு தேர்தலை நாட வேண்டும்?

**விடை :** ஆறு

**விளக்கம்**

- சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே 2019 நவம்பர் 26 அன்று மகாராஷ்டிராவில் அரசாங்கம் அமைப்பதாக உரிமை கோரினார்.

மகாராஷ்டிராவின் முதல்வராக தாக்கரே நவம்பர் 28 அன்று மும்பையின் தாதர் பகுதியில் உள்ள சிவாஜி பூங்காவில் பதவியேற்க உள்ளார்.

- **செய்தி துளிகள்:**
  - **உத்தவ் தாக்கரே** முதல்வர் பதவியை வகித்த தாக்கரே குடும்பத்தின் முதல் உறுப்பினராவார். அவர் **சத்தியப் பிரமாணம் செய்து ஆறு மாதங்களுக்குள் மகாராஷ்டிரா சட்டமன்றம் அல்லது சட்டமன்றத்திற்கு தேர்தலை நாட வேண்டும்.**

67. இ-சிகரெட் தடை மசோதா மூலம் முதல் முறை தடையை மீறுவோருக்கு வழங்கப்படும் தண்டனை என்ன?

**விடை :** 1 ஆண்டு சிறை (ம) ரூ.1 லட்சம் அபராதம்

**விளக்கம்**

- இ-சிகரெட்டை தடை செய்யும் மசோதா மக்களவையில் நிறைவேறியது. முன்னதாக, இ-சிகரெட் உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, பரிமாற்றம், விற்பனை, விநியோகம், சேமிப்பு, விளம்பரம் ஆகியவற்றுக்கு எதிராக கடந்த செப்டம்பர் 18-ஆம் தேதி அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டது.
  - **செய்தி துளிகள்:**
    - இ-சிகரெட்டில் பயன்படுத்தப்படும் ரசாயனங்கள் புற்றுநோய், இருதயநோய்கள் போன்றவற்றை ஏற்படுத்தும். இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் இ-சிகரெட் குறித்து ஒரு வெள்ளை அறிக்கை வெளியிட்டு அதற்கு தடைவிதிக்க கோரியது என்றார்.
    - இந்த மசோதா மூலம் **இ-சிகரெட் விற்க, வாங்க** தடை விதிக்கப்படுகிறது. **முதல் முறையாக தடையை மீறுபவர்களுக்கு ஓராண்டு சிறையும், ரூ.1 லட்சம் அபராதமும் விதிக்கப்படும்.** மீண்டும் குற்றத்தைத் தொடர்ந்தால், மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது ரூ.5 லட்சம்

அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும் என்று மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

68. எந்த மாநிலத்தின் கிராமப்புறங்களில் அதிகபட்சமாக கழிப்பறை வசதிகள் உள்ளன?

**விடை** : உத்திர பிரதேசம்

**விளக்கம்**

- **நாடு முழுவதும் கிராமப்புறங்களில் 16.34 கோடி வீடுகளில்** கழிப்பறை வசதி உள்ளது என்று நாடாளுமன்றத்தில் மத்திய ஜல் சக்தி துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்தார்.
    - இதில் அதிகபட்சமாக, உத்தரபிரதேசத்தில் 2.84 கோடி வீடுகளிலும், பீகாரில் 1.59 கோடி வீடுகளிலும், மேற்கு வங்கத்தில் 1.37 கோடி வீடுகளிலும் கழிப்பறை வசதிகள் உள்ளன.
    - **செய்தி துளிகள்:**
        - ஸ்வச் பாரத் அபியனின் கீழ் ஒரு புதிய திட்டமாக பிரதா மந்திரி ஸ்வச் பாரத் யோஜனா, இலவச கழிப்பறை திட்டம் 2019 அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.
        - இத்திட்டத்தின் முதன்மையான நோக்கம் கழிப்பறை இல்லாத வீடுகளில் கழிப்பறைகள் அமைப்பதாகும்.

69. இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையே நடத்தப்படும் கூட்டுப்பயிற்சியின் ஏழாவது பதிப்பின் பெயர் என்ன?

**விடை** : மித்ரா சக்தி

**விளக்கம்**

- இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையே நடத்தப்படும் கூட்டுப் பயிற்சியின் ஏழாவது **பதிப்பான 2019 ஆம் ஆண்டின் "மித்ரா சக்தி" என்ற பயிற்சியானது 2019 ஆம் ஆண்டில் டிசம்பர் 01 முதல் 14 வரை புனேவில்** உள்ள வெளிநாட்டு பயிற்சி முனையத்தில் நடத்தத்

திட்டமிடப்பட்டுள்ளது.

- மித்ரா சக்தி என்ற பயிற்சியானது இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் இராணுவ உறவுகள் மற்றும் இருநாட்டுப் படைகளுக்கு இடையேயான தொடர்புகள் ஆகியவற்றின் ஒரு பகுதியாக ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றது.

70. இந்திய உணவு மற்றும் பாதுகாப்பு தர நிர்ணய ஆணையமானது, பாதுகாப்பற்ற தரமற்ற மற்றும் பெயரிடல் குறைபாடுகளுக்கான பட்டியலில் சிறப்பாக செயல்பட்ட மாநிலங்கள் எது?

**விடை :** உத்ரகாண்ட், கோவா, பீகார், சிக்கிம், குஜராத் மற்றும் தெலுங்கானா

**விளக்கம்**

- **இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது (Food Safety and Standards Authority of India – FSSAI) விதிமுறைகளின் அமலாக்கம் குறித்த 2018 – 19 ஆம் ஆண்டிற்கான தரவை வெளியிட்டுள்ளது.**
    - பாதுகாப்பற்ற, தரமற்ற மற்றும் பெயரிடல் குறைபாடுகள் ஆகியவற்றிற்காகத் தனித்தனியாகத் தொகுக்கப்பட்ட தரவுகளை வெளியிடுவது இதுவே முதல் முறையாகும்.
    - இதில் உத்தரகாண்ட், கோவா, பீகார், சிக்கிம், குஜராத் மற்றும் தெலுங்கானா உள்ளிட்ட பத்து மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்கள் சிறப்பாகச் செயல்பட்டன என அறிவிக்கப்பட்டுள்ளன.
    - இதில் நாகாலாந்து, உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, ஜார்க்கண்ட், ஜம்மு காஷ்மீர், ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப் ஆகியவை மிகவும் மோசமாகச் செயல்பட்ட பத்து மாநிலங்களின் வரிசையில் உள்ளன.

71. IFC-IOR என்று தொடங்கப்பட்டது?

**விடை :** டிசம்பர், 2018

**விளக்கம்**

- ஹரியானாவின் குருகிராமில் உள்ள **'தகவல் இணைவு மையம்-இந்தியப் பெருங்கடல் பிராந்தியம்' (Information Fusion Centre-Indian Ocean Region-IFC-IOR) மையத்தில் முதல் சர்வதேச தொடர்பு அதிகாரியாக ஒரு பிரெஞ்சுக் கடற்படை அதிகாரி** நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் கடல் பாதைகள் குறித்தத் தரவுகளை இந்த மையம் சேகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
    - **செய்தி துளிகள்:**
        - உலகின் கடல் வர்த்தகத்தில் 75% மற்றும் உலகளாவிய எண்ணெய் வர்த்தகத்தில் 50% ஆகியன இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் வழியாக நடைபெறுகின்றது.
        - IFC-IOR ஆனது 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது.

72. 3 நாள் நடைபெறும் இராணுவ இலக்கிய விழா எங்கு நடைபெறவுள்ளது?

**விடை :** சண்டிகர்

**விளக்கம்**

- **3 நாள் இராணுவ இலக்கிய விழாவை (எம்.எல்.எ.ஃப்) பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் 13 டிசம்பர் 2019 அன்று சண்டிகரில் திறந்து வைப்பார்.** இந்த நிகழ்வு இராணுவ இலக்கியம் மற்றும் அதனுடன் தொடர்புடைய படைப்புகள் தொடர்பான அறிவு பரிமாற்றத்தை வளர்ப்பதற்கும் பாதுகாப்பதற்கும் ஒரு சர்வதேச அளவிலான மன்றத்தை வழங்கும்.
    - **செய்தி துளிகள்:**
        - குறிப்பிடத்தக்க பாதுகாப்பு மற்றும் இலக்கிய ஆசிரியர்களின் 10 புத்தகங்களும் சந்தர்ப்பத்தில் வெளியிடப்படும்.

- இந்த ஆண்டு, இந்த நிகழ்வு இரண்டாம் உலகப் போரில் பர்மா பிரச்சாரத்தில் இந்திய பங்கேற்பை நினைவுகூரும், இதன் 75வது ஆண்டு நிறைவு அடுத்த ஆண்டு வருகிறது.

## சர்வதேச நிகழ்வுகள்

1. சமீபத்தில், இந்தியா எந்த நாட்டுடன் 17 ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது?

**விடை :** ஜெர்மனி

**விளக்கம்**

- **இந்தியா – ஜெர்மனி** இடையே **17 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்** கையெழுத்தாகியுள்ளன. இது தவிர பல்வேறு துறை ஒத்துழைப்பு தொடர்பாக 5 கூட்டுப் பிரகடனங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
  - வேளாண்மை, கடல்சார் பாதுகாப்பு தொழில்நுட்பம், ஆயுர்வேதம், யோகாசனம், தியானம், தொழிற்பயிற்சி, நோய்த்தடுப்பு, தேசிய அருங்காட்சியக ஒத்துழைப்பு, விளையாட்டு, அறிவியல் ஆய்வு, நவீன தொழில்நுட்ப ஆய்வில் ஒத்துழைப்பு உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளிடையே 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.
  - **செய்தி துளிகள் :**
    - பேட்டரி வாகனப் பயன்பாடு மூலம் நகர்ப்புற சுற்றுச்சூழலை பாதுகாப்பது, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான ஆய்வு, கடலில் கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுப்பதில் ஒத்துழைப்பு உள்ளிட்ட துறைகளில் 5 கூட்டுப் பிரகடனங்கள் வெளியிடப்பட்டன.
    - இந்த ஒப்பந்தத்தில் இந்தியா-ஜெர்மனி இடையிலான உயர்கல்வி ஒத்துழைப்பு ஒப்பந்தம் மிகவும் முக்கியமானதாகும்.

2. உலக நகரங்கள் தினம் 2019 இன் கருத்துரு என்ன?

**விடை :** உலகை மாற்றுவது : புதுமைகள் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த வாழ்க்கை

Changing the world: Innovations and better life for future generations

**விளக்கம்**

- உலக நகரங்கள் தினத்தை முன்னிட்டு **யுனெஸ்கோ அமைப்பானது** ஹைதராபாத் நகரத்தை **'அறுசுவை உணவியல்'** என்ற வகையின் கீழ் **'ஆக்கப்பூர்வ நகரம்'** என்று அறிவித்துள்ளது.
    - மேலும் மும்பை நகரமும் 'திரைப்பட வகையின்' கீழ் 'ஆக்கப்பூர்வ நகரம்' என்ற குறியீட்டைப் பெற்றுள்ளது.
    - யுனெஸ்கோ அமைப்பானது ஏழு பிரிவுகளின் அடிப்படையில் 'ஆக்கப்பூர்வ நகரங்கள்' என்ற அந்தஸ்தை வழங்குகின்றது.
    - **செய்தி துளிகள் :**
        - ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை அக்டோபர் 31 ஆம் தேதி உலக நகரங்கள் தினமாக நியமித்துள்ளது.
        - 2019 கருத்துரு: உலகை மாற்றுவது : புதுமைகள் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த வாழ்க்கை 2019 Theme: Changing the world: innovations and better life for future generations

We Shine Academy TM

3. சர்வதேச உயிரி இந்தியா 2019 எங்கு நடைபெறுகிறது?

**விடை :** புதுடெல்லி

**விளக்கம்**

- **சர்வதேச உயிரி இந்தியா 2019** ஆனது மிகப்பெரிய உயிரி தொழில்நுட்ப பங்குதாரர்களின் கூட்டமைப்புகளில் ஒன்றாகும். இது இந்தியாவில் **முதல் முறையாக புது தில்லியில்** நடத்தப்பட இருக்கின்றது.
    - இது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள உயிரி தொழில்நுட்பத் துறை மற்றும் உயிரித் தொழில்நுட்பத்

தொழில் ஆராய்ச்சி உதவி மன்றம் (BIRAC) ஆகியவற்றால் ஒருங்கிணைக்கப்படுகின்றது.

- **செய்தி துளிகள் :**
  - இது இந்தியாவில் முதல் முறையாக நவம்பர் 21 முதல் 2019 நவம்பர் 23 வரை நடைபெற உள்ளது. மேக் இன் இந்தியா 2.0 இன் முக்கிய துறைகளில் ஒன்றாக பயோடெக் அடையாளம் காணப்பட்டுள்ளது.
  - 30 நாடுகளின் பங்குதாரர்களை ஒன்றிணைக்க இந்த நிகழ்வு திட்டமிடப்பட்டுள்ளது.

4. சமீபத்தில், இந்தியா உஸ்பெகிஸ்தானுடன் தனது முதல் இராணுவ பயிற்சி எது?

**விடை :** டஸ்ட்லிக் 2019

**விளக்கம்**

- பயங்கரவாத எதிர்ப்பு தந்திரோபாயங்கள் குறித்த 10 நாள் அமர்வில் **இந்தியா உஸ்பெகிஸ்தானுடன்** தனது **முதல் இராணுவ பயிற்சியான டஸ்ட்லிக் 2019 நடத்தவுள்ளது.**
  - இந்த பயிற்சி நவம்பர் 4 முதல் 2019 நவம்பர் 13 வரை உஸ்பெகிஸ்தானின் சிர்ச்சிக் பயிற்சி பகுதியில் நடைபெறும்.
  - **செய்தி துளிகள் :**
    - மலை, கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் கிளர்ச்சி மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதே இந்த பயிற்சியின் நோக்கம்.
    - உஸ்பெகிஸ்தானின் ஜனாதிபதி : ஷவ்காட் மிர்சியோயேவ்
      உஸ்பெகிஸ்தானின் நாணயம் : உஸ்பெகிஸ்தான் சோம்

5. இந்தியா – ஆசியான் உச்சி மாநாடு எங்கு நடைபெறுகிறது?

**விடை :** தாய்லாந்து

**விளக்கம்**

- **இந்தியா – ஆசியான் உச்சி மாநாடு தாய்லாந்தில்** நவம்பர் 3 மற்றும் 4ஆம் தேதி **நடைபெறுகிறது**. இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக பாங்காக் சென்ற பிரதமர் நரேந்திர மோடி, அங்கு தாய்லாந்து மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் நூலை வெளியிட்டார்.
    - மேலும் குருநானக்கின் 550வது பிறந்தநாள் நினைவாக சிறப்பு நாணயம் ஒன்றையும் வெளியிட்டார்.
    - **செய்தி துளிகள் :**
        - தாய்லாந்து தலைநகரம் : பாங்காக்
        - தாய்லாந்து நாணயம் : பட்

6. இந்தியா – உஸ்பெஸ்கிஸ்தான் இடையேயான முதல் கூட்டு ராணுவப் பயிற்சி எங்கு நடைபெற உள்ளது?

**விடை :** சிர்ச்சிக் தாஷ்கண்ட்

**விளக்கம்**

- **இந்தியா, உஸ்பெகிஸ்தான் இடையே பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பு அளிப்பது தொடர்பாக 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.** இரு நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.
    - உஸ்பெகிஸ்தான் சென்றுள்ள பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் பகோதிர் நிஜாமோவிச் குர்பனோவை தலைநகர் தாஷ்கண்டில் சனிக்கிழமை சந்தித்துப் பேசினார்.
    - இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து, ராணுவம் சார்ந்த மருத்துவத் துறையில் இருநாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பு அளிப்பது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
    - **செய்தி துளிகள்**

- இந்தியா – உஸ்பெகிஸ்தான் இடையே முதல் முறையாக கூட்டு ராணுவப் பயிற்சி, தாஷ்கண்ட் அருகே உள்ள சிர்ச்சிக் பயிற்சி முகாமில் திங்கள்கிழமை தொடங்கவுள்ளது. இந்தப் பயிற்சியை இரு நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர்களும் தொடங்கி வைக்கவுள்ளனர். வரும் 13-ஆம் தேதி வரை நடைபெறும் இந்தப் பயிற்சியில், பயங்கரவாதத்தை ஒழிப்பது குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

7. சமீபத்தில், ஆசியான் கூட்டமைப்பில் இந்தியா எந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடாது என்று பிரதமர் மோடி அறிவித்தார்?

**விடை :** ஆர்சிஇபி

**விளக்கம்**

- உலகிலேயே **மாபெரும் தடையற்ற வர்த்தகப் பகுதியை உருவாக்க வழிவகுக்கும் ஒருங்கிணைந்த பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் (ஆர்சிஇபி) இந்தியா கையெழுத்திடாது** என்று பிரதமர் **நரேந்திர மோடி** திங்கள்கிழமை தெரிவித்தார்.
  - தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் 'ஆசியான்' நாடுகள் மற்றும் சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா, தென்கொரியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற மாநாட்டின்போது இந்த அறிவிப்பை பிரதமர் மோடி வெளியிட்டார்.
  - ஆர்சிஇபி ஒப்பந்தம் தொடர்பாக இந்தியா முன்வைத்த கவலைகளுக்கு திருப்திகரமான தீர்வு காணப்படாத நிலையில், அதில் இந்தியா கையெழுத்திடுவது சாத்தியமில்லை என்று பிரதமர் குறிப்பிட்டார். இந்த ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடக் கூடாது என்று இந்திய தொழிற்சங்கங்களும், எதிர்கட்சிகளும் வலியுறுத்தி வந்த நிலையில், பிரதமர் மோடியின் அறிவிப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.
  - **செய்தி துளிகள்**
    - ஆர்சிஇபி ஒப்பந்தமானது, 'ஆசியான்' கூட்டமைப்பைச் சேர்ந்த

10 நாடுகள் மற்றும் அந்த கூட்டமைப்புடன் தடையற்ற வர்த்தக உறவைக் கொண்டுள்ள இந்தியா, சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா, தென்கொரியா, நியூஸிலாந்து ஆகிய 6 நாடுகள் என மொத்தம் 16 நாடுகளின் மொத்த மக்கள் தொகை சுமார் 360 கோடி. இது, உலக மக்கள்தொகையில் கிட்டத்தட்ட பாதியாகும்.

8. மும்பை-அகமதாபாத் அதிவேக ரயில் (புல்லட் ரயில்) திட்டம் எந்த நாட்டின் உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ளது?

**விடை :** ஜப்பான்

**விளக்கம்**

- இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்டவும், வளர்ச்சியை மேம்படுத்தவும் இந்தியா, ஜப்பான் உறுதி பூண்டன.
  - தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் திங்கள்கிழமை நடைபெற்ற கிழக்கு ஆசியா அமைப்பு நாடுகளின் உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக, ஜப்பான் பிரதமர் ஷின்ஸோ அபேவை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின்போது, இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் நிலவும் பாதுகாப்பு நிலைமை குறித்து இருவரும் ஆய்வு செய்தனர்.
  - **செய்தி துளிகள்**
    - '2+2 பேச்சுவார்த்தை': இரு நாடுகளுக்கிடையே பல்வேறு துறைகளில் நிலவும் ஒத்துழைப்பை மேம்படுத்த இருநாட்டுத் தலைவர்களும் உறுதிபூண்டனர்.
    - இரு நாடுகளின் பாதுகாப்பு, வெளியுறவு அமைச்சர்களுக்கு இடையேயான முதலாவது பேச்சுவார்த்தையை இந்த மாத இறுதியில் இந்தியாவில் நடத்த இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர். இந்தப் பேச்சுவார்த்தை, பாதுகாப்புத் துறையில் இரு நாடுகளுக்கிடையே நிலவும் ஒத்துழைப்பை

We Shine Academy TM

வலுப்படுத்தும் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

- **ஜப்பான் உதவியுடன்** மேற்கொள்ளப்பட்டு வரும் **மும்பை-ஆமதாபாத் அதிவேக ரயில் (புல்லட் ரயில்) திட்டம் செயல்படுத்தப்படுவது குறித்து இருவரும் விவாதித்தனர்.** அந்தத் திட்டத்தை விரைந்து நடைமுறைக்குக் கொண்டு வரவும் இருவரும் உறுதிபூண்டனர்.

9. சர்வதேச பருவநிலை ஒப்பந்தம் எத்தனை நாடுகளுக்கு இடையே கையெழுத்தானது?

**விடை :** 188

**விளக்கம்**

- பாரீஸ் நகரில் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் கடந்த 2015 ஆம் ஆண்டு மேற்கொண்ட சர்வதேச பருவநிலை ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதற்கான அறிவிக்கையை அமெரிக்கா ஐ.நா.வில் தாக்கல் செய்துள்ளது.
  - இதையடுத்து, வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்த ஒப்பந்தத்திலிருந்து விலகும் நடவடிக்கையை அந்த நாடு அதிகாரப்பூர்வமாக தொடங்கியுள்ளது.
  - **செய்தி துளிகள் :**
    - புவியின் வெப்பத்தை அதிகரிக்கும் புகை மாசுக்களை குறிப்பிட்ட அளவு குறைப்பதன் மூலம், **பருவ நிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில்** அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட **188 நாடுகள்** பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த 2015 – ஆம் ஆண்டு **கையெழுத்திட்டன.**
    - இந்த ஒப்பந்தம் உருவாவதில் அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா முக்கியப் பங்காற்றினார்.

10. UNFCCC யின் விரிவாக்கம் என்ன?

**விடை :** United Nations Framework convention on Climate Change

**விளக்கம்**

- இந்த ஆண்டின் **காலநிலை மாற்றம் மீதான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு ஒப்பந்தம்** (United Nations Framework Convention on Climate Change – UNFCCC) அல்லது ஐ.நா காலநிலை மாநாட்டை நடத்துவதற்கு சிலிக்குப் பதிலாக **ஸ்பெயின் நாடு மாட்ரிட் நகரைத் தேர்ந்தெடுத்துள்ளது.**
    - இந்த ஆண்டானது ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றத்தின் 25வது மாநாடாகும்.
    - கடந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் காலநிலை மாநாடானது போலந்தின் கோட்டோவைஸில் நடத்தப்பட்டது.
    - அமைதியின்மையை எதிர்கொண்டுள்ள சிலி அரசாங்கமானது நவம்பர் மாதத்தில் ஆசிய – பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பின் (Asia – Pacific Economic Cooperation – APEC) பொருளாதார உச்சி மாநாட்டை நடத்துவதையும் கைவிட்டுள்ளது.
    - **செய்தி துளிகள் :**
        - UNFCCC உறுப்பு நாடுகளின் 25வது மாநாடு

11. சூடானின் முதல் செயற்கைகோள் சீனாவின் எந்த ராக்கெட் மூலம் ஏவப்பட்டது?

**விடை :** லாங் மார்ச்-4 பி

**விளக்கம்**

- இராணுவ, பொருளாதார மற்றும் விண்வெளி தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி நடத்துவதற்கான **சூடானின் முதல் செயற்கைக்கோள்** சீனாவால் ஏவப்பட்டது. சூடானின் ரிமோட் சென்சிங் செயற்கைக்கோள் (Sudan's remote – sensing satellite (SRSS-1)), ஷென்ஜென் ஏரோஸ்பேஸ் ஓரியண்டல் செங்கடல் செயற்கைக்கோள்



We Shine Academy™

நிறுவனத்தால் (Shenzhen Aerospace Oriental Red Sea Satellite Co) உருவாக்கப்பட்டது. இந்த செயற்கைக்கோள் **சீனாவின் லாங் மார்ச்-4 பி ராக்கெட்டில் ஏவப்பட்டது.**

- **செய்தி துளிகள்**
  - President of Sudan : Omar al-Bashir
  - Sudan Capital : Khartoum; Currency : Sudanese pound

12. அல்சைமர் எந்த ஆண்டு கண்டறியப்பட்டது?

**விடை** : 1906

**விளக்கம்**

- ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களில் அல்சைமர் நோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்கான மற்றும் அந்த நிலையை மாற்றியமைக்கும் ஆற்றலுடன் கூடிய ஒரே சிகிச்சையான உலகின் முதலாவது புதிய மருந்தான ஒலிகோமன்னேட் ஆனது சீன அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
  - கடற்பாசியைத் தவறாமல் உட்கொள்ளும் வயதானவர்களிடையே அல்சைமர் நோய் குறைவாக இருப்பதால் அதன் மூலம் ஒலிகோமன்னேட் கண்டுபிடிப்பின் வளர்ச்சி ஈர்க்கப்பட்டது.
  - **செய்தி துளிகள்**
    - தற்போது அல்சைமர் நோய்க்கு என்று எந்த சிகிச்சையும் இல்லை.
    - இந்நோயை முதன்முதலில் **ஜெர்மன் மருத்துவர் அலோயிஸ் அல்சைமர் 1906 ஆம் ஆண்டில் கண்டறிந்தார்.**

13. "சமுத்திர சக்தி" பயிற்சி இந்தியாவும் எந்த நாடும் இணைந்து மேற்கொண்டது?

**விடை** : இந்தோனேசியா

**விளக்கம்**


We Shine Academy TM

- **இந்தியா** தனது நீர்மூழ்கி எதிர்ப்பு போர் கொர்வெட் ஐ.என்.எஸ் கமோர்டாவுடன் **இந்தோனேசிய** போர்க்கப்பல் கே.ஆர்.ஐ உஸ்மான் ஹருன், பல பங்கு கொர்வெட்டான வங்காள விரிகுடாவில், **"சமுத்திர சக்தி" என்ற இருதரப்பு பயிற்சியின் ஒரு பகுதியாக இணைந்து செயல்படுகிறது.**
  - **செய்தி துளிகள் :**
    - இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது, கடல்சார் ஒத்துழைப்பை விரிவுபடுத்துதல், இயங்குதளத்தை மேம்படுத்துதல் மற்றும் சிறந்த நடைமுறைகளை பரிமாறிக்கொள்வதே பயிற்சியின் நோக்கம்.
    - கூட்டுப் பயிற்சிகளில் சூழ்ச்சிகள், மேற்பரப்பு போர் பயிற்சிகள், வான் பாதுகாப்பு பயிற்சிகள், ஆயுத துப்பாக்கிச் சூடு பயிற்சிகள், ஹெலிகாப்டர் செயல்பாடுகள் மற்றும் போர்டிங் செயல்பாடுகள் ஆகியவை அடங்கும்.

14. SCOJtEX – 2019 எங்கு நடைபெற்றது?

**விடை :** புதுடெல்லி

**விளக்கம்**

- **புது தில்லியில்** ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (Shanghai Cooperation Organization – SCO) நகர்ப்புற நிலநடுக்கம் தொடர்பான தேடல் மற்றும் மீட்பு மீதான கூட்டுப் பயிற்சியை **(SCOJtEx – 2019) மத்திய உள்துறை அமைச்சர் துவங்கி வைத்தார்.**
  - இது தேசியப் பேரிடர் மீட்புப் படை ஏற்பாடு செய்த பயிற்சியாகும்.
  - **செய்தி துளிகள் :**
    - பேரிடர் சூழ்நிலையில் ஆயத்தத்தை மேம்படுத்துவதையும், 8 SCO உறுப்பு நாடுகளின் பங்கேற்புடன் பூகம்பத்திற்குப் பிந்தைய நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும்

நடைமுறைகளை அங்கீகரிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

15. ஐக்கிய அரபு அமீரகத்தின் ஜனாதிபதி யார்?

**விடை :** ஷேக் கலீ்.பா பின் சயீத் நஹ்யான் (Sheikh Khalifa bin Zayed Al Nahyan)

**விளக்கம்**

- **ஐக்கிய அரபு அமீரகத்தின்** உச்ச சபை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அரசியலமைப்பின் விதிகளின்படி, 4வது ஐந்தாண்டு காலத்திற்கு அதன் **ஜனாதிபதியாக ஷேக் கலீ்.பா பின் சயீத் அல் நஹ்யானை** (Sheikh Khalifa bin Zayed Al Nahyan) மீண்டும் தேர்ந்தெடுத்துள்ளது.
    - **செய்தி துளிகள் :**
        - ஐக்கிய அரபு எமிரேட்ஸின் தலைநகரம் அபுதாபி
        - நாணயம் : ஐக்கிய அரபு எமிரேட்ஸ் திர்ஹாம்.

16. SACEP யின் 15வது கூட்டம் எங்கு நடைபெற்றது?

**விடை :** வங்கதேசம்

**விளக்கம்**

- **வங்கதேசத்தின் டாக்காவில்** நடைபெற்ற தெற்காசியச் சுற்றுச்சூழல் ஒத்துழைப்புத் திட்டத்தின் **(SACEP – South Asia Co – operative Environment Programme) 15வது கூட்டத்தில்** மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன & காலநிலை மாற்றத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர் கலந்து கொண்டார்.
    - இது இலங்கையின் கொழும்பு நகரைத் தலைமையிடமாகக் கொண்ட அரசாங்கங்களுக்கிடையேயான ஒரு அரசு அமைப்பாகும்.
    - **செய்தி துளிகள் :**
        - இது ஆசியப் பகுதியில் சுற்றுச்சூழலின் பாதுகாப்பு,


We Shine Academy™

மேலாண்மை மற்றும் மேம்பாட்டை மேம்படுத்துவதற்கும் ஆதரிப்பதற்கும் 1982ஆம் ஆண்டில் தெற்காசியா அரசாங்கங்களால் நிறுவப்பட்டது.

- SACEP அமைப்பில் ஆப்கானிஸ்தான், வங்க தேசம், பூடான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

17. இராணுவம் மற்றும் இராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான இந்தியா - ரஷ்யா ஆகிய நாடுகளின் அரசாங்கங்களுக்கு இடையேயான ஆணையத்தின் 19வது சந்திப்பானது எங்கு நடைபெற்றது?

**விடை :** ரஷ்யா

**விளக்கம்**

- **இராணுவம் மற்றும் இராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான** இந்தியா – ரஷ்யா ஆகிய நாடுகளின் அரசாங்கங்களுக்கு இடையேயான ஆணையத்தின் **19 வது சந்திப்பானது ரஷ்யாவில்** நடைபெற்றது.
    - இந்தக் கூட்டமானது இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங்கால் தலைமை தாங்கப்பட்டது.
    - **செய்தி துளிகள்**
        - இந்தத் தளவாட ஒப்பந்தமானது இந்தியக் கடற்படைக்குப் பயனளிக்கும் இந்தியப் போர்க் கப்பல்கள் எரிபொருளை நிரப்புவதற்கும் பொருட்களை எடுத்துச் செல்வதற்கும் இரு நாடுகளின் துறைமுகங்கள் மற்றும் பிரத்தியேகப் பொருளாதார மண்டலங்கள் ஆகியவற்றை அணுக முடியும்.

18. 11 வது பிரிக்ஸ் (BRICS) உச்சி மாநாட்டின் கருப்பொருள் என்ன?

**விடை :** "ஒரு புதுமையான எதிர்காலத்திற்கான பொருளாதார வளர்ச்சி" . "Economic Growth for an Innovative Future".

**விளக்கம்**

- பிரேசில் பிரேசிலியாவில் நடைபெறும் 11வது பிரிக்ஸ் (BRICS) உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள பிரதமர் நரேந்திர மோடி இந்த மாதம் 13 ஆம் தேதி முதல் 2 நாள் பிரேசில் பயணம் மேற்கொள்வார். இந்த ஆண்டு **உச்சி மாநாட்டின் கருப்பொருள் "ஒரு புதுமையான எதிர்காலத்திற்கான பொருளாதார வளர்ச்சி".** "Economic Growth for an Innovative Future".
    - பிரதமர் மோடி அவர்கள் பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்பது இது ஆறாவது முறையாகும்.
    - **செய்தி துளிகள் :**
        - **'**பிரிக்ஸ்' என்பது வளர்ந்து வரும் ஐந்து முக்கிய தேசிய பொருளாதாரங்களின் சங்கத்தின் சுருக்கமாகும். பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா. முதலில் முதல் நான்கு பேர் 2010 இல் தென்னாப்பிரிக்காவைத் தொடங்குவதற்கு முன்பு "பிரிக்" என்று தொகுக்கப்பட்டனர்.

19. அமெரிக்காவில் வெளிநாட்டவர் தற்காலிகமாகத் தங்கிப் பணிபுரிவதற்கான H1 நுழைவு இசைவுக்கான விண்ணப்பக் கட்டணம் எவ்வளவு?

**விடை :** ரூ.700

**விளக்கம்**

- **அமெரிக்காவில் வெளிநாட்டவர் தற்காலிகமாகத் தங்கிப் பணிபுரிவதற்கான ஹெச்1பி நுழைவு இசைவுக்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.700** வரை உயர்த்தப்பட்டுள்ளது. ஹெச்1பி நுழைவு இசைவு வழங்கும் நடைமுறைகள் அனைத்தையும் இணைய வழியில் கையாள அமெரிக்கா முடிவெடுத்துள்ளது.
    - 2021 ஆம் ஆண்டில் புதிய நடைமுறையை செயல்பாட்டுக்குக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

20. 2019ஆம் ஆண்டின் இணையச் சுதந்திரம் குறித்த ஒரு அறிக்கையை எந்த அமைப்பு வெளியிட்டுள்ளது?

**விடை :** தி பிரீடம் ஹவுஸ்

**விளக்கம்**

- **"சமூக ஊடகத்தின் நெருக்கடி நிலை"** என்ற தலைப்பைக் கொண்ட 2019ஆம் ஆண்டின் இணையச் சுதந்திரம் குறித்த ஒரு அறிக்கையானது சர்வதேச இணையக் கண்காணிப்புக் குழுவான **"தி பிரீடம் ஹவுஸ்"** என்ற அமைப்பால் வெளியிடப்பட்டது.
    - தொடர்ந்து நான்காவது ஆண்டாக இணையச் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் உலகின் மிக மோசமான நாடாக சீனா தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
    - **செய்தி துளிகள்**
        - இணையச் சுதந்திரத்தில் உலகின் சிறந்த பாதுகாவலராக ஐஸ்லாந்து நாடு விளங்குகின்றது.
        - இது உலகெங்கிலும் உள்ள 65 நாடுகளில் நடத்தப்பட்ட இணையச் சுதந்திரம் குறித்த ஒரு விரிவான ஆய்வு ஆகும்.

21. எந்த ஆண்டு இந்தியாவும் பாகிஸ்தானும் SCO-வின் முழு உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டன?

**விடை :** 2017

**விளக்கம்**

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு 2020 இன் 19வது அரசாங்கத் தலைவர்கள் குழுவை இந்தியா நடத்துகிறது. 2017 ஆம் ஆண்டில் குழுவில் அனுமதிக்கப்பட்ட பின்னர் புது தில்லி ஏற்பாடு செய்யவுள்ள 8 பேர் கொண்ட குழுவின் முதல் உயர்மட்டக் கூட்டம்.
    - எஸ்சிஓ என்பது சீனா தலைமையிலான எட்டு உறுப்பினர்களின் பொருளாதார மற்றும் பாதுகாப்பு முகாமை ஆகும், இதில் **இந்தியாவும் பாகிஸ்தானும் முழு உறுப்பினர்களாக 2017 இல் அனுமதிக்கப்பட்டன.**



We Shine Academy™

- **செய்தி துளிகள் :**
  - அதன் நிறுவன உறுப்பினர்களில் சீனா, ரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகியன அடங்கும்.
  - அரசாங்க தலைவர்களின் சமீபத்திய உச்சி மாநாடு 2019 நவம்பரில் தாஷ்கண்டில் நடைபெற்றது.
  - எஸ்சிஓ பொதுச்செயலாளர் : விளாடிமிர் நோரோவ்.

22. எந்த நாடானது 'சுழியக் கார்பன்' என்ற ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றியுள்ளது?

**விடை :** நியூசிலாந்து

**விளக்கம்**

- **நியூசிலாந்து** பாராளுமன்றமானது **"சுழியக் கார்பன்" என்ற ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.** இது 2050 ஆம் ஆண்டிற்குள் கிட்டத்தட்ட அனைத்துப் பசுமை இல்ல வாயு உமிழ்வுகளுக்கும் "நிகர சுழிய இலக்கை" நிர்ணயிப்பதன் மூலம் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
  - **செய்தி துளிகள் :**
    - 2030க்குள் 10% உயிரியல் மீத்தேன் மற்றும் 2050க்குள் 47% வரை குறைக்கப்படுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

23. உணவு மற்றும் வேளாண்மைக்கான தாவர மரபணு வளங்களின் சர்வதேச ஒப்பந்தத்தின் (International Treaty of Plant Genetic Resources for Food and Agriculture – ITPGRFA) 8வது அமர்வு எங்கு நடைபெற்றது?

**விடை :** ரோம்

**விளக்கம்**

- இத்தாலியின் **ரோம் நகரில்** நடைபெற்ற **உணவு மற்றும் வேளாண்மைக்கான தாவர மரபணு வளங்களின் சர்வதேச ஒப்பந்தத்தின்**

(International Treaty of Plant Genetic Resources for Food and Agriculture – ITPGRFA) **8வது அமர்வில்** மத்திய வேளாண் துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் உரையாற்றினார்.

- ITPGRFA ஆனது விதை ஒப்பந்தம் என்றும் அழைக்கப்படுகின்றது.
- **செய்தி துளிகள் :**
  - இந்தியாவில் 2001 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 'தாவர வகைகளின் பாதுகாப்பு மற்றும் விவசாயிகளின் உரிமைகள் (Protection of Plant Varieties and Farmer's Rights – PPV & FR) சட்டமானது' விவசாயிகளின் உரிமைகளையும் பயிர்களை வளர்ப்பவர்களின் உரிமைகளையும் பாதுகாக்கின்றது.
  - இந்தியச் சட்டமானது இந்த உடன்படிக்கையின் 9வது பிரிவுடன் முழுமையாக இணங்குகின்றது.

24. "பழுப்பு நிறத்திலிருந்துப் பச்சை நிறம் - 2019" என்ற தலைப்பைக் கொண்ட ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?

**விடை :** "க்ளைமேட் டிரான்ஸ்பரன்சி"

**விளக்கம்**

- ஒரு உலகளாவிய அரசு சாரா நிறுவனமான **"க்ளைமேட் டிரான்ஸ்பரன்சி"** என்ற அமைப்பானது **'பழுப்பு நிறத்திலிருந்து பச்சை நிறம் - 2019'** என்ற தலைப்பைக் கொண்ட ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
  - உலகின் சராசரி வெப்பநிலையானது $1.5^0$ செல்சியஸீக்கு மேல் உயராது என்பதை உறுதி செய்யும் ஒரே ஜி20 நாடு (ஜி20 அமைப்பில் உள்ள) இந்தியா என்று அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது. புவி வெப்பமயமாதலுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட பாரிஸ் ஒப்பந்தத்தால் இந்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
  - **செய்தி துளிகள் :**
    - ஜி20 அமைப்பில் உள்ள நாடுகள் உலகின் மொத்த உள்நாட்டு

உற்பத்தியில் ஐந்தில் நான்கு பங்கைக் கொண்டுள்ளன இந்த அமைப்பில் உள்ள நாடுகள் பெரிய அளவிலான கார்பன் உமிழ்வுகளைக் கொண்டுள்ளன.

- புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் இந்தியா முதலீடு செய்ததற்கான இந்த அறிக்கையானது இந்தியாவைப் பாராட்டியுள்ளது.

25. விளையாட்டு தொடர்பான ஊழல்களை சட்டபடி குற்றம் என்று அறிவிக்கும் மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய முதல் தெற்காசிய நாடு எது?

**விடை :** இலங்கை

**விளக்கம்**

- **'விளையாட்டு தொடர்பான குற்றங்களைத் தடுப்பது'** ('Prevention of Offences Related to Sports') தொடர்பான மசோதாவை அதன் நாடாளுமன்றம் நிறைவேற்றியதால், போட்டிகளை நிர்ணயிக்கும் வழக்குகளை குற்ற வகைக்கு கொண்டு வந்த **முதல் தெற்காசிய நாடாக இலங்கை** திகழ்கிறது. மேட்ச் பிக்ஸிங் மற்றும் ஊழல் தொடர்பான இந்த புதிய சட்டம் அனைத்து விளையாட்டுகளுக்கும் பொருந்தும் & ஒரு நபர் விளையாட்டில் ஊழல் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், அவருக்கு 10 ஆண்டுகள் வரை தண்டனை வழங்கப்படலாம், மேலும் பிற அபராதங்களையும் செலுத்த வேண்டும்.
  - **செய்தி துளிகள்**
    - இலங்கையின் தலைநகரம் : ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டை
    - நாணயம் : இலங்கை ரூபாய்
    - பிரதமர் : ரனில் விக்கிரமசிங்
    - ஜனாதிபதி : மைத்ரிபால சிறிசேன

26. எஸ்-400 ரக வான் பாதுகாப்பு ஏவுகணைகள், இந்தியாவிடம் திட்டமிட்டபடி ஒப்படைக்க உள்ள நாடு எது?

**விடை :** ரஷியா

**விளக்கம்**

- **எஸ்-400 ரக வான் பாதுகாப்பு ஏவுகணைகள், இந்தியாவிடம் திட்டமிட்டபடி ஒப்படைக்கப்படும் என்று ரஷிய அதிபர் விளாதிமீர் புதின்** தெரிவித்தார்.
    - ரஷியாவிடமிருந்து 5.43 பில்லியன் டாலர் மதிப்பில் (ரூ.39,000 கோடி) எஸ்-400 வான் பாதுகாப்பு ஏவுகணைகளை கொள்முதல் செய்வது தொடர்பாக, இரு நாடுகளுக்கும் இடையே கடந்த ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தானது.
    - **செய்தி துளிகள்:**
        - ரஷியா, ஈரான் மற்றும் வடகொரியா ஆகிய நாடுகளிடமிருந்து ஆயுதங்கள் கொள்முதல் செய்யும் நாடுகள் மீது தடைகள் விதிக்கப்படும் என்று அமெரிக்கா ஏற்கெனவே அறிவித்துள்ளது.
        - அந்த வகையில், இந்தியாவையும் அமெரிக்கா எச்சரித்தது. எனினும், ரஷியாவிடமிருந்து எஸ்-400 வான் பாதுகாப்பு ஏவுகணைகளை வாங்கும் ஒப்பந்தத்தை கைவிடப் போவதில்லை என்றும் அமெரிக்காவிடம் இந்தியா தெரிவித்துவிட்டது. எஸ்-400 வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பானது, எதிரிகளின் போர் விமானம், அதிவேக ஏவுகணைகள் ஆகியவற்றை தாக்கி அழிக்க கூடியதாகும். தரையிலுள்ள இலக்குகளை தாக்கவும் இந்த அமைப்பை பயன்படுத்த முடியும்.

27. வரும் 2020-ஆம் ஆண்டில் ஐ.நா. மேற்கொள்ளவுள்ள பல்வேறு மேம்பாட்டு பணிகளுக்கு இந்தியாவின் பங்களிப்பாக எவ்வளவு வழங்க உறுதியளிக்கப்பட்டுள்ளது?

**விடை :** 1.35 கோடி டாலர்

**விளக்கம்**

- **ஐ.நாவின் பல்வேறு மேம்பாட்டு பணிகளுக்கு 1.35 கோடி டாலர்** (சுமார்

ரூ.95 கோடி) **நிதி உதவியை வழங்குவதாக இந்தியா உறுதியளித்துள்ளது.**

- **செய்தி துளிகள்:**
  - வரும் 2020-ஆம் ஆண்டில் ஐ.நா. மேற்கொள்ளவுள்ள பல்வேறு மேம்பாட்டு பணிகளுக்கு இந்தியாவின் பங்களிப்பாக 1.35 கோடி டாலரை வழங்க உறுதியளிக்கப்பட்டுள்ளது. ஐ.நா.வின் வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து ஆதரவு கரம் நீட்டி வருவதன் ஒரு பகுதியாகவே இந்தியா இந்த நிதி உதவியை வழங்குகிறது.
  - மேலும், பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா.வின் நிவாரணப் பணிகளுக்கு 50 லட்சம் டாலரையும், ஐ.நா. மேம்பாட்டு திட்டங்களுக்கு 45 லட்சம் டாலரையும் இந்தியா தனது பங்களிப்பாக வழங்கவுள்ளது.

28. கார்டோசாட்-3 செயற்கைகோள் எங்கிருந்து ஏவப்படவுள்ளது?

**விடை :** ஸ்ரீ ஹரிகோட்டா

**விளக்கம்**

- எல்லை பாதுகாப்பு கண்காணிப்புக்கு உதவக்கூடிய **கார்டோசாட்-3 செயற்கைக்கோளை** இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) வருகிற 25-ஆம் தேதி விண்ணில் ஏவ உள்ளது.
  - ஆந்திர மாநிலம், **ஸ்ரீ ஹரிகோட்டாவில்** உள்ள சதீஷ் தவண் விண்வெளி மையத்தின் இரண்டாவது ஏவுதளத்திலிருந்து, பி.எஸ்.எல்.வி.சி-47 ராக்கெட் மூலம் திங்கள்கிழமை (நவ.25) **விண்ணில் ஏவப்பட உள்ளது**.
  - **செய்தி துளிகள்:**
    - அமெரிக்காவின் 13 செயற்கைக்கோள்கள் : இந்த கார்டோசாட்-3 செயற்கைக்கோளுடன் அமெரிக்காவுக்குச் சொந்தமான 13 சிறிய ரக செயற்கைக் கோள்களும்

விண்ணில் ஏவப்பட உள்ளன.

- 21-ஆவது எக்ஸெல் ரக ராக்கெட்: இந்த 14 செயற்கைக் கோள்களும் பி.எஸ்.எல்.வி.சி-47 ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட உள்ளன.

29. இலங்கையின் பிரதமராக பொறுப்பேற்க உள்ளவர் யார்?

**விடை** : மகிந்த ராஜபட்ச

**விளக்கம்**

- **இலங்கையின் புதிய பிரதமராக முன்னாள் அதிபர் மகிந்த ராஜபட்ச நவ.21 பொறுப்பேற்கிறார்.**
    - இலங்கையில் கடந்த சனிக்கிழமை (16.11.2019) நடைபெற்ற அதிபர் தேர்தலில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளரான கோத்தபய ராஜபட்ச வெற்றி பெற்றார்.
    - அதையடுத்து, நாட்டின் 8-ஆவது அதிபராக கோத்தபய ராஜபட்ச கடந்த திங்கள்கிழமை (18.11.2019) பொறுப்பேற்றார்.
    - **செய்தி துளிகள்:**
        - கடந்த 2005-ஆம் ஆண்டு முதல் 2015-ஆம் ஆண்டு வரை அதிபராகப் பொறுப்பு வகித்த மகிந்த ராஜபட்ச, தெற்காசியாவில் மிக நீண்ட காலம் அதிபர் பொறுப்பை வகித்தவர் ஆவார். அத்துடன், தனது 24-ஆவது வயதில் (1970-ஆம் ஆண்டு) நாடாளுமன்ற உறுப்பினரான அவர்தான், இலங்கையில் அந்தப் பொறுப்பை ஏற்ற மிக இளைய வயதினர் ஆவார்.

30. சந்திப்பூரில் பரிசோதனை தளத்தில் முதல் முறையாக சோதனை நடத்தவுள்ள நாடு எது?

**விடை** : சிங்கப்பூர்

**விளக்கம்**

- சிங்கப்பூரின் ஏவுகணைகளை ஒடிஸா மாநிலம் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த ஏவுகணை சோதனை தளத்தில் பரிசோதித்துப் பார்ப்பதற்கு அனுமதி அளிக்கும் வகையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்தியா-சிங்கப்பூர் இடையே கையெழுத்தானது.
    - **சந்திப்பூர் பரிசோதனை தளத்தில் பிற நாடுகளுக்கு இந்தியா அனுமதி அளிப்பது** இதுவே **முதல்முறையாகும்**.
    - **செய்தி துளிகள்:**
        - இந்தியா-சிங்கப்பூர்-தாய்லாந்து நாடுகளின் கடற்படைகள் பங்கேற்கும் முத்தரப்பு கடற்படை பயிற்சி 2020-ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடத்துவதென இந்தியா-சிங்கப்பூர் முடிவு செய்துள்ளது.
        - இந்தோ-பசிபிக் கடற்பகுதியின் பாதுகாப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, இந்தியா-சிங்கப்பூர்-தாய்லாந்து நாடுகள் பங்கேற்ற முதல் முத்தரப்பு கடற்படை பயிற்சி (சிட்மெக்ஸ்) கடந்த செப்டம்பர் மாதம் அந்தமான் கடற்பகுதியில் நடைபெற்றது.

31. கனடாவின் பிரதமர் யார்?

**விடை :** ஜஸ்டின் ட்ரூடோ

**விளக்கம்**

- **கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ,** 36 உறுப்பினர்கள் கொண்ட தனது புதிய அமைச்சரவையில் 4 இந்திய வம்சாவளியினருக்கு இடமளித்துள்ளார்.
    - எம்.பி.க்களான நவ்தீப் சிங் பெய்ன்ஸ், ஹர்ஜித் சிங் சஜின், பர்திஷ் சாக்கர், அனிதா ஆனந்த் ஆகியோர் ட்ரூடோ அமைச்சரவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.
    - **செய்தி துளிகள்**
        - தேசிய பாதுகாப்புத் துறை அமைச்சராக ஹர்ஜித் சிங்

சஜ்ஜனும், பொதுச் சேவைகள் துறை அமைச்சராக அனிதா ஆனந்தும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் அனிதா ஆனந்த், கனடா அமைச்சரவையில் முதல் முதலாக இணைந்திருக்கும் ஹிந்து பெண் அமைச்சராவார்.

32. உலகளாவிய விரிவான வலிமை குறியீட்டில் இடம்பெற்றுள்ள இந்திய நகரம் எது?

**விடை :** பெங்களூர்

**விளக்கம்**

- **பொருளாதார மற்றும் சமூக உள்ளடக்கம்** ஆகியவற்றின் அடிப்படையில், உலகில் உள்ள 113 நகரங்களில் இந்தியாவில் உள்ள **பெங்களூரு** நகரமானது நாட்டின் மிகவும் **முன்னணியில் உள்ள ஒரு தரவரிசைப்படுத்தப்பட்ட நகரமாக** (அந்நகரின் தரவரிசை 83) உருவெடுத்துள்ளது.
    - வளமை மற்றும் உள்ளடக்கல் நகர முத்திரை மற்றும் விருதுகள் (Prosperity & Inclusion City Seal and Awards – PICSA) குறியீடானது முதன்முறையாக பாஸ்க் நிறுவனங்கள் மற்றும் டி & எல் பங்காளர்கள் ஆகியவற்றால் ஏற்படுத்தப்பட்டது.
    - **செய்தி துளிகள்:**
        - இந்தப் பட்டியலில் ஜுரிச் (சுவிட்சர்லாந்து) முதலிடத்திலும் வியன்னா (ஆஸ்திரியா) இரண்டாவது இடத்திலும் கோபன்ஹேகன் (டென்மார்க்) மூன்றாவது இடத்திலும் உள்ளன.
        - இந்தப் பட்டியலில் தில்லி 101வது இடத்திலும் மும்பை 107 இடத்திலும் உள்ள மற்ற இந்திய நகரங்களாகும்.

33. உலகளாவிய வலையமைப்பின் கண்டுபிடிப்பாளர் பெயர் என்ன?

**விடை :** டிம் பெர்னர்ஸ் லீ

We Shine Academy™

**விளக்கம்**

- **உலகளாவிய வலையமைப்பின் கண்டுபிடிப்பாளரான டிம் பெர்னர்ஸ் லீ** என்பவர் உலகெங்கிலும் உள்ள 80 நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்கள் ஆகியவற்றுடன் இணைந்து இணையத்திற்கான ஒரு புதிய ஒப்பந்தத்தை அறிவித்துள்ளார்.
    - அனைத்து பங்குதாரர்களுக்கும் ஒரு "சிறந்த" வலையமைப்பை உருவாக்குவதற்கு ஒரு உலகளாவிய செயல் திட்டத்தை உருவாக்குவதே இந்தக் கருத்தின் நோக்கமாகும்.
    - இந்த ஒப்பந்தமானது அரசாங்கங்கள், குடிமக்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு தலா மூன்று கொள்கைகள் என்று, மொத்தம் 9 கொள்கைகளைக் கொண்டுள்ளது.

34. ஃபோர்ப்ஸ் பத்திரிக்கை வெளியிட்டுள்ள உலக முதல் 10 கோடீஸ்வரர்கள் பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த முகேஷ் அம்பானி எத்தனாவது இடத்தில் உள்ளார்?

**விடை :** 9-ஆவது

**விளக்கம்**

- ஃபோர்ப்ஸ் பத்திரிக்கை வெளியிட்டுள்ள **உலக முதல் 10 கோடீஸ்வரர்கள் பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த முகேஷ் அம்பானிக்கு 9-ஆவது இடம் கிடைத்துள்ளது.**
    - சர்வதேச அளவில் பிரபலமாக திகழும் ஃபோர்ப்ஸ் பத்திரிக்கை ஆண்டுதோறும் கோடீஸ்வரர்களின் பட்டியலை வெளியிட்டு வருகிறது.
    - அந்தவகையில், 2019-ஆம் ஆண்டுக்கான உலகின் முதல் 10 கோடீஸ்வரர்களின் பட்டியலை அந்த பத்திரிக்கை தற்போது வெளியிட்டுள்ளது. இதில், இந்தியாவைச் சேர்ந்த ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி 6,000 கோடி டாலர் (ரூ.4.20 லட்சம் கோடி) சொத்து மதிப்புடன் 9-ஆவது இடத்தைப்

பிடித்துள்ளார். அவருடைய நிறுவனப் பங்குகளின் சந்தை மதிப்பு வியாழக்கிழமை வர்த்தகத்தில் ரூ.10 லட்சம் கோடிக்கும் மேல் அதிகரித்து சாதனை படைத்தது.

- **செய்தி துளிகள்:**
  - இப்பட்டியலில், அமேசான் நிறுவனரும், தலைமைச் செயல் அதிகாரியுமான (சிஇஓ) ஜெ.ஃப் பெஸோஸ் முதலிடத்தில் உள்ளார். இவருடைய நிகர சொத்து மதிப்பு 11,300 கோடி டாலராகும் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.7.91 லட்சம் கோடி).
  - இவருக்கு அடுத்தபடியாக 10,740 கோடி டாலர் சொத்து மதிப்புடன் மைக்ரோசா.ஃப்ட் இணை நிறுவனர் பில் கேட்ஸ் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

35. பொதுத் துறையைச் சேர்ந்த இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் (ஐஓபி) புதிய தலைமை நிதி அதிகாரியாக நியமிக்கபட்டவர் யார்?

**விடை :** புவன் சந்திரா

**விளக்கம்**

- பொதுத் துறையைச் சேர்ந்த **இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் (ஐஓபி) புதிய தலைமை நிதி அதிகாரியாக (சிஎ.ஃப்ஓ) புவன் சந்திரா** நியமிக்கப்பட்டுள்ளார்.
  - **செய்தி துளிகள்:**
    - இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் தற்போதைய தலைமை நிதி அதிகாரியான ராதா வெங்கடகிருஷ்ணன் நவம்பர் 30-ஆம் தேதி பணியிலிருந்து ஓய்வுபெறுகிறார். இதையடுத்து, தற்போது வங்கியின் பொது மேலாளராகப் பணியாற்றி வரும் புவன் சந்திரா சிஎ.ஃப்ஓ-வாக பதவி உயர்வு பெறவுள்ளார். அவரின் இந்த புதிய பொறுப்பு டிசம்பர் 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வரவுள்ளதாக இந்தியன் ஓவர்சீஸ் வங்கி அந்த செய்திக் குறிப்பில் கூறியுள்ளது.

36. இடம்பெயர்வோர் அதிகம் உள்ள நாடு எது?

**விடை :** இந்தியா

**விளக்கம்**

- ஐ.நா. சபையின் இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு ஆனது 2020 ஆம் ஆண்டுக்கான உலக இடம்பெயர்வு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
    - இந்த அறிக்கையானது சர்வதேச அளவில் இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை 270 மில்லியனாக இருப்பதாக மதிப்பிடுகின்றது.
    - சுமார் **51 மில்லியன் இடம்பெயர்ந்தோர்களைக் கொண்டு அமெரிக்காவனாது இடம்பெயருபவர்கள் தேர்ந்தெடுக்கும் நாடுகளில் முதலிடம் வகிக்கின்றது.**
    - **செய்தி துளிகள்:**
        - இந்தியாவிலிருந்து 17.5 மில்லியன் மக்கள் சர்வதேச அளவில் இடம்பெயர்ந்துள்ளனர். இடம்பெயர்வோர் அதிகம் உள்ள நாடுகளில் இந்தியா முதலிடம் வகிக்கின்றது.
        - பணம் அனுப்பும் நாடுகளில் அமெரிக்கா (68.0 பில்லியன் டாலர்), ஐக்கிய அரபு அமீரகம் (44.4 பில்லியன் டாலர்) மற்றும் சவுதி அரேபியா (36.1 பில்லியன் டாலர்) ஆகிய நாடுகள் முன்னிலையில் உள்ளன.
        - அகதிகளை உருவாக்கும் நாடுகளில் சிரியா (6 மில்லியன்) முதலிடத்திலும் அதனையடுத்து ஆப்கானிஸ்தானும் உள்ளன.

37. 40வது யுனெஸ்கோ பொது மாநாடு எங்கு நடைபெற்றது?

**விடை :** பாரிஸ்

**விளக்கம்**

- நவம்பர் 12-27, 2019 முதல் பாரிஸில் நடைபெற்ற **40வது யுனெஸ்கோ பொது மாநாட்டில் மத்திய மனிதவள மற்றும் மேம்பாட்டு அமைச்சர்**

**(எம்.எச்.ஆர்.டி) ஸ்ரீ ரமேஷ் போக்ரியால் 'நிஷாங்க்'** உரையாற்றினார்.

- ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (யுனெஸ்கோ) பொது மாநாடு வேகமாக மாறிவரும் உலகில் பன்முகத்தன்மையின் எதிர்காலம் குறித்து விவாதித்தது.
- **செய்தி துளிகள்:**
  - ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (யுனெஸ்கோ) பற்றி:
  - தலைமை பொது இயக்குனர் : ஆட்ரி அஸ்வுலே
  - உருவாக்கம் : 4 நவம்பர் 1946
  - தலைமையகம் : பாரிஸ், பிரான்ஸ்

## பொருளாதார நிகழ்வுகள்

1. எப்பொழுது முதல், வங்கிகள் இனி NEFT அமைப்பில் ஆன்லைன் பரிவர்த்தனைகளுக்கு சேமிப்பு வங்கி கணக்கு வைத்திருப்பவர்களிடம் கட்டணம் வசூலிக்க முடியாது என்று இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது?

**விடை :** ஜனவரி 2020

**விளக்கம்**

- இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள "டிஜிட்டல் கொடுப்பனவுகளை மேலும் அதிகரித்தல்" என்ற தலைப்பில் பணமதிப்பிழப்பு நடவடிக்கையின் 3 ஆண்டு நிறைவில் டிஜிட்டல் பரிவர்த்தனைகளை ஊக்குவிக்கும் நோக்கில், ரிசர்வ் வங்கி இது தொடர்பாக ஒரு முன்மொழிவை வழங்கியுள்ளது.
  - **ஜனவரி 2020 முதல், வங்கிகள் இனி NEFT அமைப்பில் ஆன்லைன் பரிவர்த்தனைகளுக்கு சேமிப்பு வங்கி கணக்கு வைத்திருப்பவர்களிடம் கட்டணம் வசூலிக்க முடியாது.**

- **செய்தி துளிகள்**
    - ஆர்பிஐ 25வது ஆளுநர்: சக்தி காந்த் தாஸ்
    - தலைமையகம்: மும்பை
    - நிறுவப்பட்டது: 1 ஏப்ரல் 1935, கொல்கத்தா

2. மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகமானது காதிக்காக ஒதுக்கியுள்ள குறியீடு எது?

**விடை:** HS குறியீடு

**விளக்கம்**

- **மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகமானது காதிக்காக** ஒரு தனிப்பட்ட **HS குறியீட்டை** ஒதுக்கியுள்ளது.
    - இது காதியின் ஏற்றுமதியை அதிகரிக்க உதவும்.
    - **செய்தி துளிகள்**
        - HS (Harmonized System) என்பது ஒரு ஒத்திசைந்த அமைப்பு என்பதைக் குறிக்கின்றது. இது ஒரு ஆறு இலக்க அடையாளக் குறியீடாகும்.
        - இது உலகச் சுங்க அமைப்பால் (WCO – World Customs Organization) மேம்படுத்தப்பட்டது.

3. முக்கியமான முதலீட்டு நிறுவனங்களுக்கு (Core investment companies – CICs) பொருந்தக் கூடிய ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பை மறுஆய்வு செய்ய இந்திய ரிசர்வ் வங்கி அமைத்துள்ள குழு எது?

**விடை :** தபன் ரே குழு

**விளக்கம்**

- முக்கியமான முதலீட்டு நிறுவனங்களுக்கு (Core investment companies – CICs) பொருந்தக் கூடிய **ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் மற்றும்**

**மேற்பார்வைக் கட்டமைப்பை மறு ஆய்வு செய்ய இந்திய ரிசர்வ் வங்கி தபன் ரே தலைமையில் குழு** ஒன்றை அமைத்துள்ளது.

- சமீபத்தில் இந்த குழுவானது தனது பரிந்துரைகளை ரிசர்வ் வங்கியிடம் சமர்ப்பித்துள்ளது
- தற்போது, பெருநிறுவன நிர்வாக வழிகாட்டுதல்கள் CICsகளுக்கு வெளிப்படையாகப் பொருந்தாது
- **செய்தி துளிகள்**
  - முக்கியமான முதலீட்டு நிறுவனங்கள் என்பவை வங்கிசாரா நிதியியல் நிறுவனங்களாகும் (NBFC – non- banking financial companies)
  - இது பங்குகள் மற்றும் பத்திரங்களை கையகப்படுத்தும் வணிகத்தை மேற்கொள்கின்றது.

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உறுப்பு நாடுகள் எண்ணிக்கை என்ன?

**விடை :** 68 நாடுகள்

**விளக்கம்**

- சர்வதேச அபிவிருத்தி நிதி நிறுவனமான ஆசிய அபிவிருத்தி வங்கி (Asian Development Bank (ADB)), மாநிலத்தில் மூலதன முதலீடு மற்றும் உள்கட்டமைப்பை உயர்த்துவதற்காக மேற்கு வங்கத்திற்கு கொள்கை அடிப்படையிலான திட்டக் கடனான 150 மில்லியன் டாலர் (சுமார் 1,065 கோடி ரூபாய்) வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.
  - **செய்தி துளிகள்:**
    - **ஆசிய அபிவிருத்தி வங்கி**
    - குறிக்கோள் : ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளில் வறுமையை எதிர்த்துப் போராடுவது
    - **உருவாக்கம் - 19 டிசம்பர் 1966**
    - தலைமையகம் - மணிலா, பிலிப்பைன்ஸ்

- **உறுப்பினர் - 68 நாடுகள்**
- முன்னதாக 2019 செப்டம்பரில், ஏடிபி தலைவர் டேகிகோ நகாவோ தனது ராஜினாமாவை அறிவித்துள்ளார். இது 2020 ஜனவரி 16 முதல் அமலுக்கு வரும்.

## விருதுகள்

1. தேசிய ஒருமைப்பாட்டு விருது 2019 ம் ஆண்டு யாருக்கு வழங்கப்பட்டது?

**விடை :** சண்டி பிரசாத் பட்

**விளக்கம்**

- **தேசிய ஒருமைப்பாட்டுக்கான இந்திரா காந்தி விருது சுற்றுச்சூழல் ஆர்வலர் சண்டி பிரசாத் பட்டுக்கு** வழங்கப்பட்டுள்ளது.
  - இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியால் வழங்கப்படும் மிக உயரிய விருதாகும்.
  - இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் இவ்விருதினை வழங்கினார்.
  - **செய்தி துளிகள்:**
    1. இந்திய முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் நினைவாக 1985-ம் ஆண்டு முதல் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது.
    2. சுற்றுச்சூழல் ஆர்வலர் சண்டி பிரசாத் பட் உத்தரகாண்ட் மாநிலத்தை சேர்ந்தவர்.

2. 'கோல்டன் மணல் சிற்பக்கலை' விருதைப் பெற்ற முதல் இந்தியர் யார்?

**விடை :** சுதர்சன் பட்நாயக்

**விளக்கம்**

- இந்திய மணல் சிற்பக் கலைஞர்கள் **சுதர்சன் பட்நாயக்கருக்கு** இத்தாலியின் உயரிய விருதான **'கோல்டன் மணல் சிற்பக்கலை' விருது**

வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதைப் பெற்ற முதல் இந்தியர் இவர் என்பது கூடுதல் பெருமைக்குரிய விஷயமாக உள்ளது.

- ரஷிய கலைஞருடன் இணைந்து மகாத்மா காந்தியின் 10 அடி உயர மணல் சிற்பத்தை பட்நாயக் உருவாக்கினார்.
- **செய்தி துளிகள் :**
    - 60க்கும் மேற்பட்ட சர்வதேச மணல் சிற்பக்கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ள பட்நாயக், இந்தியாவுக்கு பல பரிசுகளை பெற்று தந்துள்ளார்.
    - மணல் சிற்பக்கலையில் அவரது பங்களிப்பை பாராட்டி மத்திய அரசு ‘பத்மஸ்ரீ’ விருது வழங்கி கௌரவித்தது.

3. ஸ்வச் சர்வேஷன் கிராமீன் 2019 விருது பெற்ற மாநிலம் எது?

**விடை :** தமிழ்நாடு

**விளக்கம்**

- புதுடெல்லியின் பிரவாசி பாரதிய கேந்திராவில் உலக கழிவறை தினத்தை முன்னிட்டு பல்வேறு பிரிவுகளில் முதலிடம் வகிக்கும் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு **ஸ்வச் சர்வேஷன் கிராமீன் 2019** விருதுகளை இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் மத்திய அமைச்சர் வழங்கினார்.
    - **செய்தி துளிகள்**
        - முதலிடத்தில் உள்ள மாநிலம்: தமிழ்நாடு,
        - முதலிடத்தில் உள்ள மாவட்டம்: பெடப்பள்ளி (தெலுங்கானா),
        - அதிகபட்ச குடிமக்கள் பங்கேற்கும் மாநிலம்: உத்தரபிரதேசம்.

4. “2023 விஷன்” எனும் திட்டம் யாரால் உருவாக்கப்பட்டது?

**விடை :** ஜெயலலிதா

**விளக்கம்**

- **சிறந்த செயல்பாட்டுக்காக தமிழக அரசுக்கு 3 விருதுகள் தனியார் பத்திரிக்கை நிறுவனம் "இந்தியா டுடே" வழங்கியுள்ளது.**
    - இந்திய மாநிலங்களில் சட்டம் ஒழுங்கில் சிறந்த பராமரிப்பு மற்றும் முன்னேற்றம் அடைந்த மாநிலத்திற்கான விருது தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டது.
    - மத்திய சுற்றுச்சூழல் மற்றும் தகவல் ஒலிப்பரப்பு துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் வழங்கினார்.
    - **செய்தி துளிகள்**
        - மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தொலைநோக்கு பார்வையுடன் "2023 விஷன்" எனும் ஆவணத்தை தயாரித்தார்.
        - சட்டம் ஒழுங்கு பராமரிப்பு அதன் முக்கிய அம்சமாகும்.

## நியமனங்கள்

1. சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி யார்?

**விடை :** ஏ.பி.சாஹி

**விளக்கம்**

- **சென்னை உயர்நீதிமன்ற புதிய தலைமை நீதிபதியாக ஏ.பி.சாஹி** நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இந்திய அரசியலமைப்பு சட்ட ஷரத்து 124A ன் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையில் கொலிஜியம் பரிந்துரையில் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இந்திய அரசியலமைப்பு சட்ட ஷரத்து 217ன் படி குடியரசு தலைவர், நியமனம் செய்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.
    - **செய்தி துளிகள்:**

    1. மாநில உயர்நீதிமன்றங்கள் குறித்து ஷரத்து 214

குறிப்பிடுகிறது.

2. இண்டஸ்இண்ட் வங்கியின் புதிய நிர்வாக இயக்குநராக (எம்.டி) மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி யார்?

**விடை :** சுமன் கத்பாலியா

**விளக்கம்**

- ஒரு தனியார் துறை கடன் வழங்குநரான **இண்டஸ்இண்ட் வங்கி** அதன் நுகர்வோர் வங்கித் தலைவர் **சுமன் கத்பாலியாவை அதன் புதிய நிர்வாக இயக்குநராக (எம்.டி) மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாக** நியமித்துள்ளது. அவர் மார்ச் 2020 இல் ஓய்வு பெறும் ரோமேஷ் சோப்டியை மாற்றுவார்.
    - **செய்தி துளிகள்**
        - இண்டஸ்இண்ட் வங்கியின் தலைமையகம்: மும்பை; நிறுவப்பட்டது: 1994; கோஷம்: நாங்கள் உங்களை பணக்காரர்களாக உணரவைக்கிறோம்.

3. இந்திய விமான நிலைய ஆணையத்தின் தென் மண்டலத்தின், முதலாவது பெண் தீயணைப்பு வீரராக யார் நியமிக்கப்பட்டுள்ளார்?

**விடை :** ரம்யா ஸ்ரீ கண்டன்

**விளக்கம்**

- இந்திய விமான நிலைய ஆணையத்தின் **தென் மண்டலத்தில், முதலாவது பெண் தீயணைப்பு வீரராக ரம்யா ஸ்ரீ கண்டன்** நியமிக்கப்பட்டுள்ளார்.
    - **செய்தி துளிகள்**
        - தென்னிந்தியாவில் உள்ள, இந்திய விமான நிலைய ஆணைய விமான நிலையங்களில் முதலாவதாகவும், இந்திய விமான நிலையங்கள் ஆணையத்தின் மூன்றாவது பெண் தீயணைப்பு பணியாளராகவும், ரம்யா ஸ்ரீ கண்டன் என்பவர் சென்னை விமான

நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (நவம்பர் 1) விமான நிலைய தீயணைப்பு நிலையத்தில் பணியில் சேர்ந்துள்ளார்.

4. மாலி குடியரசின் இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை :** அஞ்சனி குமார்

**விளக்கம்**

- **மாலி குடியரசின் இந்தியாவின் அடுத்த தூதராக அஞ்சனி குமார் இருப்பார்** என்று வெளிவிவகார அமைச்சகம் (எம்.இ.ஏ) அறிவித்தது.
  - **செய்தி துளிகள்**
    - அவர் 2003 ஆம் ஆண்டு இந்திய வெளியுறவு சேவை (ஐஎ.ஃ.ப்எஸ்) அதிகாரியாக உள்ளார். அவருக்கு பதிலாக பிரதீப் குமார் குப்தா நியமிக்கப்படுவார்.

5. சமீபத்தில் நிதித்துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை :** மன்மோகன்சிங்

**விளக்கம்**

- முன்னாள் பிரதமரும் தற்போது மாநிலங்களவை உறுப்பினருமாக உள்ள **மன்மோகன்சிங், நிதித்துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.**
  - மாநிலங்களவை தலைவர் வெங்கய்யநாயுடு, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் மன்மோகன்சிங்கை நிதித்துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினராக நியமித்துள்ளார்.
  - **செய்தி துளிகள் :**
    - அதே போன்று நகர்ப்புற மேம்பாட்டு நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினராக காங்கிரஸ் மூத்ததலைவர் திக் விஜய் சிங்கை நியமித்து உத்தரவிட்டுள்ளார்.

6. சென்னை உயர்நீதிமன்ற தலைமைநீதிபதியாக பதவியேற்றவர் யார்?

**விடை :** ஏ.பி.சாஹி

**விளக்கம்**

- **சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக ஏ.பி.சாஹி** திங்கள்கிழமை(11.11.19) பதவியேற்றார். அவருக்கு தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
  - சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த வி.கே.தஹிலரா மாணீமேகாலயா மாநில உயர்நீதிமன்றத்துக்கு பணியிடமாற்றம் செய்ததால், அவர் தனது பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து, பாட்னா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அம்ரேஷ்வர் பிரதாப் சாஹியை சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமித்து குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் கடந்த அக்டோபர் 30 ஆம் தேதி உத்தரவு பிறப்பித்தார்.
  - **செய்திதுளிகள் :**
    - கடந்த 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அலகாபாத் நீதிமன்றத்தின் நிரந்தர நீதிபதியாகப் பதவியேற்றார். கடந்த 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் பாட்னா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

7. பீகார் மாநிலம், பாட்னா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பதவியேற்றவர் யார்?

**விடை :** சஞ்சய் கரோல்.

**விளக்கம்**

- **பீகார் மாநிலம், பாட்னா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக சஞ்சய் கரோல்** பதவியேற்றார்.
  - **செய்தி துளிகள் :**

- பாட்னா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த அமரேஷ்வர் பிரதாப் சாஹி சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பணியிடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து, அந்தப் பதவிக்கு திரிபுரா உயர்நீதிமன்ற தலைமைநீதிபதியாக இருந்த சஞ்சய் கரோல் கடந்த மாதம் 30 – ஆம் தேதி நியமிக்கப்பட்டார்.

8. திரிபுரா உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக பதவியேற்றவர் யார்?

**விடை :** அகில் அப்துல்ஹமீத் குரேஷி

**விளக்கம்**

- **திரிபுரா உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக நீதிபதி அகில் அப்துல்ஹமீத் குரேஷி** நவம்பர் 16, 2019 அன்று பதவியேற்றார்.
  - அகர்தலாவில் உள்ள ஆளுநர் மாளிகையில் மாநில ஆளுநர் ரமேஷ் பயஸ், அகில் அப்துல்ஹமீத் குரேஷிக்கு பதவிப் பிரமாணம் மற்றும் ரகசிய காப்புப் பிரமாணம் செய்து வைத்தார்.
  - **செய்தி துளிகள் :**
    - மும்பை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த நீதிபதி குரேஷி திரிபுரா உயர்நீதிமன்றத்தின் ஐந்தாவது தலைமை நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டார்.

9. உச்சநீதிமன்ற கொலீஜியத்தில் தமிழகத்தைச் சேர்ந்த பெண் நீதிபதி யார்?

**விடை :** ஆர். பானுமதி

**விளக்கம்**

- **உச்சநீதிமன்ற கொலீஜியத்தில் தமிழகத்தைச் சேர்ந்த பெண் நீதிபதி ஆர்.பானுமதி இடம் பிடித்துள்ளார்.**
  - கொலீஜியத்தில் 13 ஆண்டுகளுக்குப் பிறகு பெண் நீதிபதி இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. இவருக்கு முன்பு, நீதபதி ரூமா பால்

கொலீஜியத்தில் இடம்பெற்றிருந்தார்.

- **செய்தி துளிகள்:**
  - தமிழகத்தைச் சேர்ந்த நீதிபதி ஆர்.பானுமதி கடந்த 2014-ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

10. உச்சநீதிமன்றத்தின் 47-ஆவது தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை** : எஸ்.ஏ. போப்டே

**விளக்கம்**

- **உச்சநீதிமன்றத்தின் 47-ஆவது தலைமை நீதிபதியாக எஸ்.ஏ.போப்டே** 18.11.2019 பதவியேற்கவுள்ளார். இவர், அயோத்தி நில விவகாரம், ஆதார் உள்ளிட்ட முக்கிய வழக்குகளில் தீர்ப்பளித்த அமர்வில் இடம்பெற்றிருந்தவர்.
  - **செய்தி துளிகள்:**
    - அயோத்தி நில வழக்கில் அண்மையில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கிய அரசியல் சாசன அமர்வில் எஸ்.ஏ.போப்டே இடம்பெற்றிருந்தார்.
    - தற்போது 47-ஆவது தலைமை நீதிபதியாக பதவியேற்கும் எஸ்.ஏ.போப்டே, 2021, ஏப்ரல் 23-ஆம் தேதி வரை அப்பதவியை வகிப்பார்.

11. தமிழக ஆளுநரின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை** : ஆனந்த்ராவ் விஷ்ணு பாட்டீல்

**விளக்கம்**

- **தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோ ஹித்தின் செயலாளராக, ஆனந்த்ராவ் விஷ்ணு பாட்டீல்** நியமிக்கப்பட்டுள்ளார்.
  - இதற்கான உத்தரவை தலைமை செயலாளர் கே.சண்முகம் பிறப்பித்துள்ளார்.


We Shine Academy™

- ○ **செய்தி துளிகள்:**
    - ▪ இதற்கு முன் அப்பணியில் இருந்த ஆர்.ராஜகோபால், இப்போது தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் தலைமை ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

12. தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையத்தின் தலைமை தகவல் ஆணையர் யார்?

**விடை :** ஆர்.ராஜகோபால்

**விளக்கம்**

- **தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையத்தின் தலைமை தகவல் ஆணையராக ஆர்.ராஜகோபால் வியாழக்கிழமை (21.11.2019) பொறுப்பேற்றார்.** முன்னதாக, ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் முன்னிலையில் அவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்
    - ○ **செய்தி துளிகள்:**
        - ▪ தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையத்தின் தலைமை ஆணையராக இருந்த ஷீலா ப்ரியா, கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஓய்வு பெற்றார்.

13. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைகழகத்தின் துணைவேந்தர் யார்?

**விடை :** என். பஞ்சநாதம்

**விளக்கம்**

- **தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகப் புதிய துணைவேந்தராக பேராசிரியர் என்.பஞ்சநாதம்** நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை பல்கலைக்கழக வேந்தரும், தமிழக ஆளுநருமான பன்வாரிலால் புரோஹித் செவ்வாய்க்கிழமை பிறப்பித்தார்.
    - ○ **செய்தி துளிகள்:**
        - ▪ 2017-ஆம் ஆண்டில் மும்பை ஐஐடி - இந்திய கணினி சமூகத்தின் தலைசிறந்த பேராசிரியர் விருதையும் பஞ்சநாதம்

பெற்றுள்ளார். 2018-ஆம் ஆண்டில் இந்திய சர்வதேச மேலாண்மை ஆராய்ச்சியாளர் சங்கத்தின் தலைசிறந்த மேலாண்மை ஆராய்ச்சி வழிகாட்டுநருக்கான விருதையும் இவர் பெற்றுள்ளார்.

- இப்போது தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத் துணைவேந்தராக நியமிக்கப்பட்டிருக்கும் இவர், தொடர்ந்து மூன்று ஆண்டுகள் அந்தப் பொறுப்பில் இருப்பார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் நிகழ்வுகள்

1. நிலவில் எந்த வாயு மூலக்கூறுகள் இருப்பதை சந்திராயன்-2 விண்கலம் உறுதிப்படுத்தியிருப்பதாக இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) அறிவித்துள்ளது.

**விடை :** ஆர்கான் - 40

**விளக்கம்**

- **நிலவில் ஆர்கான் - 40 வாயு மூலக்கூறுகள்** இருப்பதை **சந்திராயன்-2 விண்கலம் உறுதிப்படுத்தியிருப்பதாக** இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) அறிவித்துள்ளது.
  - நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்ய சந்திராயன் - 2 விண்கலத்தை இஸ்ரோ கடந்த ஜீலை 22-ஆம் தேதி விண்ணில் அனுப்பியது.
  - **செய்தி துளிகள் :**
    - விண்கலத்திலிருந்து பிரிந்த ஆர்பிட்டர் கருவி, நிலவிலிருந்து 100 கி.மீ தொலைவில் இருந்தபடி சுற்றிவந்து தொடர்ந்து வெற்றிகரமாக ஆய்வை மேற்கொண்டு வருகிறது.
    - இந்த நிலையில், நிலவின் புறக்காற்று மண்டலத்தில் ஆர்கான்-40 வாயு மூலக்கூறுகள் இருப்பதை ஆர்பிட்டரில் சேஸ் - 2 என்ற கருவி உறுதிப்படுத்தியிருக்கிறது.

2. விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தின் பெயர் என்ன?

**விடை :** 'ககன்யான்'

**விளக்கம்**

- சந்திராயன் - 2 திட்டத்தின் மூலம் நிலவின் தென் துருவத்தில் விக்ரம் லேண்டர் நிச்சயம் தரையிறக்கப்படும் என்று இஸ்ரோ தலைவர் கே.சிவன் தெரிவித்துள்ளார். ஐஐடி தில்லியின் 50வது பட்டமளிப்பு விழாவில் இஸ்ரோ தலைவர் கே.சிவன் பங்கேற்றார்.
  - விக்ரம் லேண்டரை தரையிறக்குவதற்கான தொழில்நுட்பத்தை செயல்முறையில் செய்து பார்க்க வேண்டும். நாங்கள் விக்ரம் லேண்டரை தரையிறக்குவது தொடர்பான திட்டத்தில் பணியாற்றி வருகிறோம்" என்றார்.
  - **செய்தி துளிகள் :**
    - சூரியனை ஆய்வு செய்வதற்காக 'ஆதித்யா எல் - 1' செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தும் திட்டம் **விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் 'ககன்யான்' திட்டம்** ஆகியவை அடுத்தக்கட்டமாக செயல்படுத்தப்படும்.
    - சந்திராயன்-2 ஜீலை 22, 2019 அன்று ஏவப்பட்டது.

3. சமீபத்தில் சச்சினின் பெயர் சூட்டப்பட்ட சிலந்தி வகை எங்கு காணப்படுகிறது?

**விடை :** கேரளா, தமிழ்நாடு மற்றும் குஜராத்

**விளக்கம்**

- குஜராத் சுற்றுச்சூழல் கல்வி மற்றும் ஆராய்ச்சி (Gujarat Ecological Education & Research (GEER) ) அறக்கட்டளையின் ஆராய்ச்சி அறிஞர் துருவ் பிரஜாபதி, கேரளா, தமிழ்நாடு மற்றும் குஜராத்தில் காணப்படும் இரண்டு புதிய சிலந்தி இனங்களை கண்டுபிடித்துள்ளார்.

- ஒரு சிலந்தி இனத்திற்கு இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரின் பெயரை "மரேங்கோசச்சின் டெண்டுல்கர்"("Marengo Sachin Tendulkar")என்றும், மற்றொன்று புனித குரியகோஸ் எலியாஸ் சவராவின் பெயரால் "இந்தோமரெங்கோ சவரபட்டர்" (IndomarengoChavarapater") என்றும் பெயரிடப்பட்டது.
- **செய்தி துளிகள் :**
  - **கேரள மாநிலத்தில் கல்வி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் முக்கியபங்கு வகித்தவர் புனித குரியகோஸ் எலியாஸ் சவரா** ஆவார்.

4. X– 57 "மேக்ஸ்வெல்" (X – 57 "Maxwell") ஐ அறிமுகப்படுத்தியது யார்?

**விடை :** MASA (National Aeronautics and Space Administration)

**விளக்கம்**

- நாசா (**NASA (National Aeronautics and Space Administration)**) தனது முதல் அனைத்து மின்சார சோதனை விமானங்களையும் X– 57 **"மேக்ஸ்வெல்"** (X – 57 "Maxwell") என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்தாலியடெக்னம் P2006 T (Italian Tecnam P2006T) விமானத்திலிருந்து தழுவி கிட்டத்தட்ட 2 தசாப்தங்களில் இது நாசாவின் முதல் குழு X விமானம் (சோதனை விமானம்) ஆகும்.
  - **செய்தி துளிகள் :**
    - நாசா நிர்வாகி : ஜிம் பிரிடென்ஸ்டைன்
    - நாசா நிறுவப்பட்டது : 29 ஜீலை 1958

5. ஹாயாபுஸா – 2 விண்கலம் யாரால் எந்த ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்டது?

**விடை :** ஜப்பான்

**விளக்கம்**

- சூரியனைச் சுற்றி வரும் தொலைதூர நுண்கோளில் வெற்றிகரமாக ஆய்வு செய்த **ஜப்பானின் ஹாயாபுஸா – 2 விண்கலம்**, பூமிக்குத் திரும்புவதற்காக தனது பயணத்தைத் தொடங்கியுள்ளது.
  - **செய்தி துளிகள் :**
    - கடந்த **2014 ஆம் ஆண்டு** விண்ணில் செலுத்தப்பட்ட இந்த விண்கலம், ரியூகு நுண்கோளில் இரு முறை தரையிறங்கி அங்குள்ள மணல் மாதிரிகளை சேகரித்துள்ளது.
    - அடுத்த ஆண்டு இறுதியில் பூமியை வந்தடையும் என்று ஜப்பானிய விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்தது.

6. நிலவின் புறக்காற்று மண்டலத்தில் கண்டறியப்பட்ட வாயு எது?

**விடை :** ஆர்கான் - 40

**விளக்கம்**

- சந்திராயன் - 2 விண்கலம் எடுத்த நிலவின் நிலப்பரப்பின் முப்பரிமாண புகைப்படத்தை இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) வெளியிட்டுள்ளது.
  - நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்ய இஸ்ரோ அனுப்பிய 'சந்திராயன் - 2' விண்கலத்தின் விக்ரம் லேண்டர் தொடர்பை இழந்து செயல்படாமல் போனாலும், அதிலிருந்து பிரிந்த ஆர்பிட்டர் தொடர்ந்து நிலவைச் சுற்றிவந்து சிறப்பான முறையில் ஆய்வை மேற்கொண்டு வருகிறது.
  - சந்திராயன் - 2 ல் 8 கருவிகள் இடம்பெற்றுள்ளன.
  - இந்த 8 கருவிகளும், நிலவு குறித்த பல்வேறு தகவல்களை பூமிக்கு அனுப்பி வருகின்றன.
  - **செய்தி துளிகள் :**
    - ஏற்கனவே, ஆர்பிட்டர் விண்கலத்தில் உள்ள சேஸ் - 2 கருவி, **நிலவின் புறக்காற்று மண்டலத்தில் 'ஆர்கான் 40' என்ற வாயு இருப்பதைக் கண்டறிந்தது.**

7. சந்திராயன்-3 விண்கலம் எந்த ஆண்டில் விண்ணில் செலுத்தப்படவுள்ளது?

**விடை** : 2020

**விளக்கம்**

- **சந்திராயன்-3** விண்கலத்தை **2020-ஆம் ஆண்டு விண்ணில் ஏவ இந்திய விண்வெளி ஆய்வு மையம்** (ISRO) திட்டமிட்டுள்ளது.
    - **செய்தி துளிகள்:**
        - ஜூலை 22 விண்ணில் செலுத்தப்பட்ட சந்திராயன்-2 விண்கலம், ஆர்பிட்டர், விக்ரம் லேண்டர் (4) பிரக்யான் ரோவர் ஆகியவற்றை கொண்டதாகும்.
        - சந்திராயன்-3 இல் லேண்டர் (4) ரோவர் ஆகிய இரு அமைப்புகளை மட்டும் கொண்டிருக்கும் என்று அறிவித்துள்ளனர்.

8. இந்தியாவின் கார்போசாட் செயற்கைகோளுடன் அமெரிக்காவின் எத்தனை சிறிய ரக செயற்கைகோள் விண்ணில் செலுத்தப்பட்டது?

**விடை** : 13

**விளக்கம்**

- **இந்தியாவின் கார்டோசாட் செயற்கைக்கோள் மற்றும் அமெரிக்காவின் 13 சிறிய ரக செயற்கைக்கோள்களைச் சுமந்தபடி பி.எஸ்.எல்.வி-சி47 ராக்கெட் புதன்கிழமை விண்ணில் பாய்கிறது.**
    - ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் விண்வெளி மையத்தின் இரண்டாவது ஏவுதளத்திலிருந்து ராக்கெட் விண்ணில் ஏவப்பட உள்ளது. இதற்கான 26 மணி நேர கவுன்ட்-டவுண் தொடங்கப்பட்டது.
    - **செய்தி துளிகள்:**
        - 1,625 கிலோ எடை கொண்ட இந்த மூன்றாம் தலைமுறை அதிநவீன கார்டோசாட்-3 செயற்கைக்கோள், புவியிலிருந்து

509 கி.மீ. தொலைவிலான சுற்றுவட்டப் பாதையில் 97.5 கோணத்தில் நிலைநிறுத்தப்பட உள்ளது. அங்கிருந்தபடி, புவியைக் கண்காணிப்பதுடன் உயர் தரத்திலான புகைப்படத்தை எடுத்தனுப்பும் திறன் கொண்டது.

- இந்த கார்டோசாட்-3 செயற்கைக்கோளுடன் அமெரிக்காவுக்கு சொந்தமான 13 சிறிய ரக செயற்கைக்கோள்களையும் பி.எஸ்.எல்.வி. சி-47 ராக்கெட் சுமந்து செல்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

9. கார்டோசாட்-3 எந்த ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்டது?

**விடை :** பி.எஸ்.எல்.வி- சி 47

**விளக்கம்**

- இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) சார்பில் ஏவப்பட்ட **பி.எஸ்.எல்.வி. –சி47 ராக்கெட் வெற்றிகரமாக** விண்ணில் பாய்ந்தது.
  - ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் விண்வெளி ஆய்வு மையத்தின் இரண்டாவது ஏவுதளத்திலிருந்து, திட்டமிட்டப்படி ராக்கெட் விண்ணில் ஏவப்பட்டது. ராணுவ கண்காணிப்புக்கு உதவும் இந்தியாவின் **'கார்டோசாட்-3' உள்பட 14 செயற்கைக்கோள்களும் திட்டமிடப்பட்ட சுற்றுவட்டப் பாதைகளில் செலுத்தப்பட்டன.**
  - **செய்தி துளிகள்:**
    - முதலில் தகவல்தொடர்புக்கு உதவும் (மெஷ்பெட்) செயற்கைக்கோள் பிரித்துவிடப்பட்டது.
    - இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து, 2020 மார்ச் வரை 13 ராக்கெட் திட்டங்களை இஸ்ரோ செயல்படுத்த உள்ளது. இதில் 6 ராக்கெட் திட்டங்களும், செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்பும் 7 திட்டங்களும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

- இதுவரை கடந்த 2005-ஆம் ஆண்டு முதல் 8 கார்டோசாட் செயற்கைக்கோள்கள் அனுப்பப்பட்டுள்ளன.
- இதன் மூலம், இஸ்ரோ விண்ணுக்கு அனுப்பிய வெளிநாட்டு செயற்கைக்கோள்களின் எண்ணிக்கை 310-ஆக அதிகரித்துள்ளது.

## விளையாட்டு செய்திகள

1. இந்திய விளையாட்டு வீராங்கனை பூஜா ராணி எந்த விளையாட்டு துறையைச் சார்ந்தவர்?

**விடை :** குத்துச்சண்டை

**விளக்கம்**

- **ஒலிம்பிக் குத்துச்சண்டை தகுதிச் சுற்று - ஷிவ தாபா மற்றும் பூஜா ராணி தங்கம்** வென்றனர்.
    - 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெறுவதற்கான ஆட்டங்கள் டோக்கியோவில் நடைபெற்றன.
        1. 2020 ம் ஆண்டு 32வது ஒலிம்பிக் போட்டி டோக்கியோ நகரில் நடைபெற உள்ளது.
        2. 2024 ம் ஆண்டு பாரிசில் நடைபெற உள்ளது.

2. 2019 ஆண்டுக்கான டபிள்யுடிஏ பைனல்ஸ் போட்டியில் பட்டம் வென்ற வீராங்கனை யார்?

**விடை :** ஆஷ்லி பார்டி

**விளக்கம்**

- **டபிள்யுடிஏ பைனல்ஸ் டென்னிஸ் போட்டியில்** உலகின் நம்பர் ஒன் வீராங்கனை **ஆஸி.யின் ஆஷ்லி பர்டி சாம்பியன் பட்டம்** வென்றார்.
    - உலகின் தலைசிறந்த 8 வீராங்கனைகள் ஆண்டு இறுதியில் பங்கேற்று ஆடும் முக்கியமான போட்டி டபிள்யுடிஏ பைனல்ஸ் ஆகும். இதன்

நடப்பு சாம்பியன் எலினா விட்டோலினோ, ஆஷ்லி பர்டி, சிமோனா ஹலேப், பெலின்டா பென்கிக், கிகி பெர் டென்ஸ், கரோலினா பிளிஸ் கோவா, பெட்ரா குவிட்டோவா, பியான்கா ஆன்ட்ரீஸ்கு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

- ஆஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த ஆஷ்லி பார்டி முதன்முறையாக டபிள்யுடிஏ போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
- டபிள்டிஏ பைனல்ஸ் போட்டி 1972 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது.

3. பாரீஸ் மாஸ்டர் ஏடிபி டென்னிஸ் போட்டியில் பட்டம் வென்றவர் யார்?

**விடை** : நோவக் ஜோகோவிச்

**விளக்கம்**

- **பாரிஸ் மாஸ்டர்ஸ் ஏடிபி டென்னிஸ் போட்டியில்** முன்னணி வீரர் **நோவக் ஜோகோவிச் சாம்பியன் பட்டம்** வென்றார்.
  - ஞாயிற்றுக்கிழமை மாலை பாரிஸ் நகரில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் செர்பியாவின் ஜோகோவிச்சுடன், கனடா வீரர் டெனிஸ் ஷபவலோவ் மோதினார்.
  - செர்பியாவின் நோவக் ஜோகோவிச் டென்னிஸ் தரவரிசையில் முதல் நிலையில் உள்ளார்.

4. 23 வயதுக்குட்பட்ட உலக சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய வீரர் யார்?

**விடை** : ரவீந்தர்

**விளக்கம்**

- புடாபெஸ்டில் நடந்த UWW **23 வயதுக்குட்பட்ட உலக சாம்பியன்ஷிப்** போட்டியின் **இறுதிப் போட்டியில்** மல்யுத்தத்தில் பூஜா கெஹ்லாட் (53 கி.கி) ஜப்பானில் ஹருணா ஒகுனோவால் வீழ்த்தப்பட்டு இந்தியாவிற்கான இரண்டாவது வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார்.

- செய்தி துளிகள்
    - ரவீந்தர் (61 கிலோ), இந்தியாவின் முதல் வெள்ளி பதக்கத்தினை வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

5. டபிள்யுடிஏ தரவரிசையில் முதலிடத்தில் உள்ளவர் யார்?

**விடை :** ஆஷ்லி பார்டி

**விளக்கம்**

- **டபிள்யுடிஏ தரவரிசையில்** ஆஸ்திரேலிய வீராங்கனை **ஆஷ்லி பார்டி** தனது **முதலிடத்தை தக்க வைத்துக் கொண்டார்**
    - சீனாவின் ஷென்ஸென் நகரில் ஞாயிற்றுக்கிழமை டபிள்யுடிஏ பைனல்ஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றார் பார்டி.
    - இந்நிலையில் திங்கள் கிழமை வெளியிடப்பட்ட தரவரிசைப் பட்டியலில் பார்டி 7851 புள்ளிகளுடன் முதலிடத்தை தக்கவைத்துள்ளார்.
    - **செய்தி துளிகள்**
        - 2. கரோலினா பிளிஸ் கோவா (செக்.) 5940, 3, நவோமி ஒஸாகா (ஜப்பான்) 5496, 4. சிமோனாஹலேப் (ருமேனியா) 5462, 5. பியான்கா ஆன்ட்ரிஸ்கு (கனடா) 5192, 6. எலினா விட்டோலினா (உக்ரைன்) 5075, 7. பெட்ராகுவிட்டோவா (செக்.) 4776, 8. பெலிண்டா பென்கிக் (ஸ்விஸ்) 4745, 9. கி.கி பெர்டேன்ஸ் (நெதர்லாந்து) 4245, 10. செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 3935 புள்ளிகளுடன் முதல் 10 இடங்களில் உள்ளனர்.

6. ஆசிய துப்பாக்கி சுடுதல் போட்டியில் வெண்கல பதக்கம் வென்றவர் யார்?

**விடை :** தீபக் குமார்.

**விளக்கம்**

- **ஆசிய துப்பாக்கி சுடுதல் போட்டியில் வெண்கல பதக்கத்துடன்**



We Shine Academy™

**டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கும் தகுதி** பெற்றுள்ளார் **இந்திய வீரர் தீபக் குமார்.**

- கத்தார் தலைநகர் தோஹாவில் நடைபெறும் இப்போட்டியில் ஆடவர் 10மீ ஏர் ரைபிள் பிரிவில் இறுதிச் சுற்றில் 145 புள்ளிகளுடன் வெண்கலம் வென்றார் தீபக்குமார். இதன் மூலம் 2020 ஒலிம்பிக் போட்டி துப்பாக்கி சுடுதலில் இந்தியாவின் 10 இட ஒதுக்கீட்டை வென்றார் தீபக் குமார்.
- **செய்தி துளிகள் :**
    - ஏற்கனவே இந்தியா 9 கோட்டா இடங்களை பெற்றுள்ளது. சீனா 25, கொரியா 12, ஜப்பான் 12 கோட்டா இடங்களைப் பெற்றுள்ளன.
    - மகளிர் பிரிவில் இளவேனில், அஞ்சும் மொட்கில், அபூர்வி சந்தேலா ஆகியோர் அடங்கிய இந்திய அணி 10மீ ஏர் ரைபிள் பிரிவில் 1883,2 புள்ளிகளுடன் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

7. மானு பாக்கர் எந்த விளையாட்டை சார்ந்தவர்?

**விடை :** ஏர் பிஸ்டல்

**விளக்கம்**

- சீனாவின் புஷௌவில் நடைபெற்று வரும் ஆசிய துப்பாக்கி சுடுதல் போட்டியில் மகளிர் 10மீ. **ஏர் பிஸ்டல் பிரிவில்** 244.3 புள்ளிகள் குவித்து **தங்கப்பதக்கம் வென்றார் இளம் வீராங்கனை மானுபாக்கர்.**
    - **செய்தி துளிகள் :**
        - விவான் கபூர், மனிஷா கீர் ஆகியோர் அடங்கிய இந்திய ஜீனியர் டிராப் கலப்பு அணி தங்கப்பதக்கத்தை வென்றது.
        - முதல் நாள் போட்டி முடிவில் 2 தங்கம் உள்பட 5 பதக்கங்களை வென்றது இந்தியா.

8. எந்த ஆண்டிற்கான ஆடவர் உலகக்கோப்பை போட்டியை நடத்த


We Shine Academy™

இந்தியாவுக்கு சர்வதேச ஹாக்கி சம்மேளனம் (எப்ஐஎச்) அனுமதி அளித்துள்ளது.

**விடை :** 2023

**விளக்கம்**

- **2023 ஆடவர் உலகக் கோப்பை போட்டியை நடத்த இந்தியாவுக்கு சர்வதேச ஹாக்கி சம்மேளனம் (எப்ஐஎச்) அனுமதி** அளித்துள்ளது.
    - தொடர்ந்து 2-ஆவது முறையாக மற்றும் ஒட்டுமொத்தமாக இந்தியா நடத்தவுள்ள நான்காவது உலகக் கோப்பை போட்டி இதுவாகும்.
    - சர்வதேச தரவரிசையில் 5-ஆவது இடத்தில் உள்ளது இந்திய அணி.
    - **செய்தி துளிகள் :**
        - ஏற்கனவே மும்பை 1982, புதுதில்லி 2010, 2018 புவனேசுவரத்தில் நடத்தப்பட்டது. தற்போது நான்காவது முறையாக உலகக்கோப்பை நடத்தும் முதல் நாடாக இந்தியா திகழ்கிறது. மேலும் 2023 இந்தியா சுதந்திரம் பெற்ற 75ஆவது ஆண்டாகும்.
        - அதே நேரம் 2022 மகளிர் உலகக் கோப்பை போட்டியை நடத்த ஸ்பெயின் - நெதர்லாந்து நாடுகளுக்கு அனுமதி தரப்பட்டது.

9. தோஹாவில் நடைபெற்று வரும் 14ஆவது ஆசிய சாம்பியன் போட்டியில் இந்தியா எத்தனையாவது இடத்தைப் பெற்றுள்ளது?

**விடை :** 4

**விளக்கம்**

- **தோஹாவில் நடைபெற்று வரும் 14ஆவது ஆசிய சாம்பியன் போட்டியில்** சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் 435.8 புள்ளிகளை குவித்து **நான்காவது இடத்தைப்** பெற்றார். இந்தியாவை சேர்ந்த தேஜஸ்வினி இதன் மூலம் துப்பாக்கி சுடுதலில் 12ஆவது ஒலிம்பிக் தகுதி இடத்தைப் பெற்றார் அவர்.

- 39 வயதான தேஜஸ்வினி கடந்த 2008, 2012, 2016 ஒலிம்பிக்குக்கு தகுதி பெறவில்லை. இது அவரது முதல் ஒலிம்பிக் போட்டியாகும்.
  - **செய்தி துளிகள் :**
    - 2010 - இல் முனிக் உலகக் கோப்பையில் 50 மீ ரை.ஃபிள் புரோன் பிரிவில் தங்கப்பதக்கத்துடன் முதல் சாம்பியன் பட்டம் வென்றார்.

10. பெடரேஷன் கோப்பை மகளிர் டென்னிஸ் போட்டியில் பட்டம் வென்ற நாடு எது?

**விடை :** பிரான்ஸ்

**விளக்கம்**

- **பெடரேஷன் கோப்பை மகளிர் டென்னிஸ் போட்டியில்** ஆஸ்திரேலியாவை வீழ்த்தி 16 ஆண்டுகள் கழித்து **பட்டம் வென்றது பிரான்ஸ்.**
  - **செய்தி துளிகள்**
    - மகளிர் டென்னிஸ் உலகப் போட்டியாக பெடரேஷன் கோப்பை நடத்தப்படுகிறது.

11. டி20 ஆட்டத்தில் முதல் ஹாட்ரிக் பெற்ற இந்திய வீரர் யார்?

**விடை :** தீபக் சாஹர்

**விளக்கம்**

- வேகப்பந்து வீச்சாளர் **தீபக் சாஹர்** ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்தினார். **டி20** ஆட்டத்தில் **முதல் ஹாட்ரிக் விக்கெட் பெற்ற இந்திய வீரர்** என்ற சிறப்பையும் பெற்றார் அவர்.
  - **செய்தி துளிகள்**
    - டெஸ்ட்டில் ஹர்பஜன் சிங், இர்பான் பதானும், ஒருநாள் ஆட்டங்களில் சேதன் சர்மா, கபில்தேவ், குல்தீப் யாதவ், முகமது ஷமியும், டி20-இல் தீபக் சாஹரும் ஹாட்ரிக் விக்கெட் எடுத்த இந்திய வீரர்கள் ஆவர்.



We Shine Academy ™

12. துபாயில் நடைபெற்று வரும் உலக பாரா தடகள சாம்பியன் போட்டி ஈட்டி எறிதலில் தங்கம் வென்றவர் யார்?

**விடை :** சுந்தர் குர்ஜார்

**விளக்கம்**

- துபாயில் நடைபெற்று வரும் **உலக பாரா தடகள சாம்பியன் போட்டி ஈட்டி எறிதலில் இந்தியாவின் சுந்தர் குர்ஜார் தங்கமும், அஜித்சிங் வெண்கலமும் வென்றனர்.**
  - ஆடவர் எப் 46 பிரிவு ஈட்டி எறிதலில் தங்கம் வென்றார் சுந்தர்.
  - **செய்தி துளிகள் :**
    - மேலும் அஜித் சிங் வெண்கலம் வென்றார் மற்றும் ரிங்கு நான்காவது இடம் பெற்றார். இதையடுத்து சுந்தர், அஜித் சிங், ரிங்கு உள்ளிட்டோர் பாரா ஒலிம்பிக் போட்டிக்கு தகுதிபெற்றனர்.

13. லண்டனில் நடைபெற்று வரும் ஏடிபி பைனல்ஸ் போட்டியில் வெற்றி பெற்றவர் யார்?

**விடை :** ஜோகோவிச்

**விளக்கம்**

- **லண்டனில் நடைபெற்று வரும் ஏடிபி பைனல்ஸ் போட்டியில் ஜோகோவிச் அபார வெற்றி** பெற்றார்.
  - **செய்தி துளிகள் :**
    - உலகின் தலைசிறந்த 8 வீரர்கள் மோதும் ஏடிபிபைனல்ஸ் டென்னிஸ் போட்டி லண்டனில் தொடங்கியது.
    - நோவக் ஜோகோவிச் ஒரு செர்பிய தொழில்முறை டென்னிஸ் வீரர் ஆவார். இவர் தற்போது டென்னிஸ் நிபுணர்களின் சங்கத்தால் கொடுக்கப்பட்ட ஆண்கள் ஒற்றையர் டென்னிஸில் பிரிவில் உலக அளவில் 2வது இடத்தில் உள்ளார்.

We Shine Academy™

14. 2020 பாரா ஒலிம்பிக்கில் தகுதி பெற்ற நிஷாத் குமார் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

**விடை :** உயரம் தாண்டுதல்

**விளக்கம்**

- **2020 டோக்கியோ பாரா ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்** இந்தியாவின் **நிஷாத் குமார்.**
    - **செய்தி துளிகள்:**
        - துபாயில் நடைபெற்று வரும் உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் உயரம் தாண்டுதல் டி47 இல் வெண்கல பதக்கம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

15. 2019 உலக கபடி கோப்பையை எந்த நாடு நடத்தவுள்ளது?

**விடை :** இந்தியா

**விளக்கம்**

- **2019** ஆம் ஆண்டு **உலக கபடி கோப்பையை** டிசம்பர் 1 முதல் 9 வரை **இந்தியா நடத்தவுள்ளது.**
    - இது பஞ்சாபில் நடைபெறவுள்ளது.
    - இந்த ஆண்டின் போட்டி சீக்கிய குருவான குருநானக் தேவ் ஜியின் 550வது பிறந்தநாளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
    - **செய்தி துளிகள்:**
        - 9 அணிகள் பங்கு பெறவுள்ளன : இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இலங்கை, கென்யா, நியூசிலாந்து, பாகிஸ்தான் (ம) கனடா
        - பஞ்சாப் முதல்வர் : அமரீந்தர் சிங்
        - ஆளுநர் : வி.பி. சிங்

16. அதிக இன்னிங்ஸ் வெற்றி பெற்ற கேப்டன்களில் விராட் கோலி தற்போது

எந்த இடத்தில் உள்ளார்?

**விடை :** 7

**விளக்கம்**

- வங்கதேசத்துக்கு எதிரான இந்தூர் டெஸ்டில் வெற்றி பெற்றதின் மூலம் **அதிக இன்னிங்ஸ் வெற்றி பெற்ற இந்திய கேப்டன் என்ற புதிய சாதனையை நிகழ்த்தி உள்ளார் விராட் கோலி.**
    - 10 இன்னிங்ஸ்களில் வெற்றி பெற்ற இந்திய கேப்டன் கோலி.
    - **செய்தி துளிகள் :**
        - அதிக இன்னிங்ஸ் வெற்றி பெற்ற கேப்டன்களில் விராட் கோலி தற்போது 7-ஆவது இடத்தில் உள்ளார்.
        - தென்னாப்பிரிக்க முன்னாள் கேப்டன் கிரேம் ஸ்மித் 22 இன்னிங்ஸ் வெற்றியுடன் முதலிடத்தில் உள்ளார்.

17. தடகள கூட்டமைப்புகளின் சர்வதேச சங்கம் (International Association of Athletics Federations (IAAF)) -இன் மாற்றப்பட்ட பெயர் என்ன?

**விடை :** "உலக தடகளம்" ("World Athletics")

**விளக்கம்**

- **தடகள கூட்டமைப்புகளின் சர்வதேச சங்கம்** (International Association of Athletics Federations (IAAF)) அதன் பெயரை அதிகாரப்பூர்வமாக மாற்றிவிட்டது. இப்போது அது **"உலக தடகளம்"** ("World Athletics") என்று அறியப்படும்.
    - **செய்தி துளிகள்:**
        - IAAF 1912 ஆம் ஆண்டில் சர்வதேச அமெச்சூர் தடகள கூட்டமைப்பு (International Amateur Athletic Federation) என நிறுவப்பட்டது மற்றும் அதன் பெயரை 2001 இல் "தடகள கூட்டமைப்புகளின் சர்வதேச சங்கம்" என்று மாற்றியது.

18. ஏடிபி டூர் பைனல்ஸ் போட்டி-2019 இன் சாம்பியன் யார்?

**விடை :** ஸ்டெபனோஸ் சிட்ஸிபாஸ்

**விளக்கம்**

- **ஏடிபி டூர் பைனல்ஸ் போட்டியின்** இறுதி சுற்றில் முதன்முறையாக டொமினிக் தீமை வீழ்த்தி **சாம்பியன் பட்டம் வென்றார் இளம் வீரர் ஸ்டெபனோஸ் சிட்ஸிபாஸ்**
    - **செய்தி துளிகள்:**
        - உலகின் தலைசிறந்த 8 டென்னிஸ் வீரர்கள் மோதும் ஏடிபி பைனல்ஸ் போட்டி லண்டனில் நடைபெற்றது.
        - கடந்த 2001-ஆம் ஆண்டு லெய்ட்டன் ஹெவிட் இளம் வயதில் பட்டம் வென்றதற்கு பின் 21 வயதில் பட்டம் வென்ற இளம் வீரர் என்ற சிறப்பை சிட்ஸிபாஸ் பெற்றுள்ளார்.

19. புரோ வாலிபால் லீக்-யின் மாற்றப்பட்ட பெயர் என்ன?

**விடை :** இந்தியன் வாலிபால் லீக்

**விளக்கம்**

- **புரோ வாலிபால் லீக் பெயரை இந்தியன் வாலிபால் லீக் என மாற்றியது விஎ்.பஐ** (VFI)
    - இந்த முடிவு VFI யின் பொது கூட்டம் ஜெய்ப்பூரில் நடைபெற்ற போது மேற்கொள்ளப்பட்டது.
    - **செய்தி துளிகள்:**
        - VFI – Volleyball Federation of India (இந்திய வாலிபால் சம்மேளனம்)
        - VFI யின் தலைவர் - எஸ்.வாசுதேவன்

20. இந்தியா-பாகிஸ்தான் இடையிலான டேவிஸ் கோப்பை போட்டி எங்கு நடைபெறவுள்ளது?

**விடை :** நுர்-சுல்தான்

**விளக்கம்**

- **இந்தியா-பாகிஸ்தான் அணிகள் இடையிலான டேவிஸ் கோப்பை போட்டி** கஜகஸ்தான் தலைநகர் **நுர்-சுல்தானில் நடைபெறும்** என சர்வதேச டென்னிஸ் சம்மேளனம் (ஐடிஎப்) அறிவித்துள்ளது.
    - இந்தியா-பாகிஸ்தான் அணிகள் இடையிலான டேவிஸ் கோப்பை ஆட்டம் இஸ்லாமாபாதில் நடைபெறும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.
    - இதனால் இரு நாடுகளின் டேவிஸ் கோப்பை போட்டி வரும் 29, 30 தேதிகளில் கஜகஸ்தான் தலைநகர் நுர்சுல்தான் நகரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

We Shine Academy TM

21. இளவேனில் வாலறிவன் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர் ஆவார்?

**விடை :** ஏர் ரைபிள்

**விளக்கம்**

- உலகக் கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் **இந்தியாவின் இளம் நட்சத்திரங்கள் மானு பாக்கர், இளவேனில் வாலறிவன், திவ்யான்ஷ் சிங் பன்வார் ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர்.** இதன் மூலம் பதக்கப் பட்டியலில் இந்தியா முதலிடத்தை பெற்றுள்ளது.
    - சீனாவின் புட்டியன் நகரில் ஐஎஸ்எஸ்எப் உலகக் கோப்பை துப்பாக்கி சுடும் போட்டி நடைபெற்று வருகிறது.

22. இந்திய அணி விளையாடிய முதல் பகலிரவு டெஸ்ட் போட்டியை தொடங்கி வைத்தவர் யார்?

**விடை :** ஷேக் ஹசீனா

**விளக்கம்**

- **இந்தியா டெஸ்ட் அணி விளையாடும் வரலாற்று சிறப்பு மிக்க பகலிரவு – டெஸ்ட் போட்டி கொல்கத்தாவில்** தொடங்கியது.
    - போட்டியை வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா மற்றும் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.
    - **செய்தி துளிகள்:**
        - பிசிசிஐ-யின் புதிய தலைவராக கடந்த மாதம் கங்குலி பொறுப்பேற்று கொண்டார்.
        - இந்திய அணி விளையாடும் முதல் பகலிரவு டெஸ்ட் போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்றது.

23. 20 ஆண்டுகள் கழித்து குதிரையேற்ற ஒலிம்பிக் போட்டியில் தகுதி பெற்ற இந்திய வீரர் யார்?

**விடை** : பவாத் மிஸ்ரா

**விளக்கம்**

- **2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டி குதிரையேற்ற பந்தயப் பிரிவுக்கு தகுதி பெற்றுள்ளார் இந்தியாவின் பவாத் மிஸ்ரா**
    - 20 ஆண்டுகள் கழித்து ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்ற இந்திய வீரர் என்ற சிறப்பை பெற்றார் பவாத்
    - **செய்தி துளிகள்**
        - 32-வது ஒலிம்பிக் போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற உள்ளது.
        - 2000-ம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக் போட்டியில் குதிரையேற்ற போட்டியில் இந்தியாவின் இம்தியாஸ் அனிஸ் தகுதி பெற்றிருந்தார்.

24. ஐசிசி டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதி போட்டி எங்கு நடைபெற உள்ளது?

**விடை** : இலண்டன் லார்ட்ஸ்

**விளக்கம்**

- **வங்கதேசத்துக்கு எதிரான முதல் பகலிரவு டெஸ்ட் ஆட்டத்தில்** இன்னிங்ஸ் மற்றும் **46 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றுள்ளது**.
    - இந்த வெற்றியின் மூலம் தொடர்ச்சியாக 12-வது தொடரை வென்றது இந்திய அணி
    - இந்த வெற்றியின் மூலம் ஐசிசி டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியில் 360 புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்தில் இந்திய அணி உள்ளது.
    - **செய்தி துளிகள்**
        - ஐசிசி டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியில் மொத்தம் 9 நாடுகளைச் சேர்ந்த அணிகள் மோதுகின்றன.
        - புள்ளிபட்டியலில் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற உள்ளது.

25. 2019-ஆண்டு டேவிஸ் கோப்பை எங்கு நடைபெற்றது?

**விடை :** ஸ்பெயின்

**விளக்கம்**

- **டேவிஸ் கோப்பை இறுதி ஆட்டத்தில் கனடாவை வீழ்த்தி 6-ஆவது முறையாக ஸ்பெயின் சாம்பியன்** பட்டம் வென்றது.
    - **செய்தி துளிகள்:**
        - இப்போட்டி புதிய முறையில் ஸ்பெயின் தலைநகர் மாட்ரில் நடைபெற்று வருகிறது.
        - ஸ்பெயின் ஏற்கெனவே கடந்த 2000, 2004, 2008, 2009, 2011-இல் டேவிஸ் கோப்பை பட்டத்தை வென்றுள்ளது.
        - ஒரே நகரில், ஒரே வாரத்தில் 18 நாடுகளின் அணிகள் மோதிக் கொண்டது இதுவே முதல்முறை என்பது

குறிப்பிடத்தக்கது.

26. 21-ஆவது ஆசிய வில்வித்தை போட்டி எங்கு நடைபெற்றது?

**விடை :** பாங்காங் நகர், தாய்லாந்து

**விளக்கம்**

- ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டி காம்பவுண்ட் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் வர்மா-ஜோதி சுரேகா இணை தங்கம் வென்றது.
  - **தாய்லாந்தின் பாங்காக் நகரில் நடைபெறும் 21-ஆவது ஆசிய வில்வித்தை போட்டியில்** காம்பவுண்ட் கலப்பு அணிபிரிவு இறுதிச் சுற்று நடைபெற்றது. இதில் அபிஷேக்-ஜோதி சுரேகா வென்னாம் இணை சீன தைபே இணையை வீழ்த்தி தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார். இப்போட்டியில் இந்திய வீரர்கள் வென்ற ஒரே தங்கம் இதுவாகும்.
  - **செய்தி துளிகள்:**
    - மகளிர் காம்பவுண்ட் அணிகள் பிரிவிலும் ஜோதி, முஸ்கான் கிரார், பிரியா இணை கொரியாவிடம் வீழ்ந்து வெள்ளி வென்றது. ஏற்கெனவே இப்போட்டியில் இந்திய 4 வெண்கலப் பதக்கங்களை வென்றது. ஏற்கெனவே ஆடவர் அணி ஒலிம்பிக் தகுதியை பெற்றுள்ளது.

## முக்கிய தினங்கள்

1. உலக சுனாமி விழிப்புணர்வு நாள் என்று அனுசரிக்கப்படுகிறது?

**விடை :** நவம்பர் 5

**விளக்கம்**

- **உலக சுனாமி விழிப்புணர்வு நாள் நவம்பர் 5** அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது.

○ சுனாமியின் ஆபத்துகள் தொடர்பான விஷயங்களில் உலகம் முழுவதும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை பரப்புவதற்காக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. டிசம்பர் 2015 இல், ஐ.நா பொதுச்சபை நவம்பர் 5ஐ உலக சுனாமி விழிப்புணர்வு தினமாக நியமித்தது.

2. சர்வதேச நாள் அனுசரிக்கப்படுவதன் நோக்கம் என்ன?

**விடை :** யுத்தம் மற்றும் ஆயுத மோதலில் சுற்றுச்சூழலை சுரண்டுவதைத் தடுப்பது

**விளக்கம்**

- **யுத்தம் மற்றும் ஆயுத மோதலில் சுற்றுச்சூழலை சுரண்டுவதைத் தடுப்பதற்கான சர்வதேச நாள்** ஆண்டு தோறும் **நவம்பர் 6** ஆம் தேதி அனுசரிக்கப்படும் ஒரு சர்வதேச நாளாகும்.

3. 2019 உலக புற்றுநோய் தினத்திற்கான கருத்துரு என்ன?

**விடை :** "I am and I will"

**விளக்கம்**

- புற்றுநோய், அதன் அறிகுறிகள் மற்றும் சிகிச்சை குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்காக **தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு** தினம் இந்தியாவில் ஆண்டுதோறும் **நவம்பர் 7ஆம்** தேதி அனுசரிக்கப்படுகிறது. மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர்.ஹர்ஷ் வர்தன் அறிவித்தபோது, 2014ஆம் ஆண்டில் இந்த நாள் முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது.
    ○ 1903 இயற்பியலுக்கான நோபல் பரிசு வென்ற விஞ்ஞானி மேரி கியூரியின் பிறந்த நாளோடு இந்த நாள் ஒத்துப்போகிறது. 2019 உலக புற்றுநோய் தினத்திற்கான கருத்துரு: "நான் மற்றும் நான் செய்வேன்"("I am and I will")

4. சட்ட சேவைகள் தினம் எந்த ஆண்டு முதல் அனுசரிக்கப்படுகிறது?

**விடை :** 1995

**விளக்கம்**

- சட்ட கல்வியறிவு இல்லாத மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த இந்தியாவில் **நவம்பர் 9 ஆம் தேதி சட்ட சேவைகள் தினம்** அனுசரிக்கப்படுகிறது. இந்த நாளில், 1995 இல், சட்ட சேவைகள் அதிகாரிகள் சட்டம் அமல்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

5. தேசிய கல்வி தினம் யாரின் பிறந்தநாளில் அனுசரிக்கப்படுகிறது?

**விடை :** மவுலானா அபுல் கலாம் ஆசாத்

**விளக்கம்**

- **தேசிய கல்வி தினம் நவம்பர் 11** அன்று சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர், சுதந்திர போராட்ட வீரர், அறிஞர் மற்றும் பிரபல கல்வியாளர் மவுலானா அபுல் கலாம் ஆசாத்தின் பிறந்த நாளில் கொண்டாடப்படுகிறது.

6. அமைதி மற்றும் மேம்பாட்டுக்கான உலக அறிவியல் தினம் 2019இன் கருத்துரு என்ன?

**விடை :** "திறந்த அறிவியல், யாரையும் பின்னால் விடவில்லை

"Open science, leaving no one behind"

**விளக்கம்**

- **அமைதி மற்றும் மேம்பாட்டுக்கான உலக அறிவியல் தினம்** ஒவ்வொரு ஆண்டும் **நவம்பர் 10** அன்று கொண்டாடப்படுகிறது. 2019ஆம் ஆண்டிற்கான கருத்துரு: "திறந்த அறிவியல், யாரையும் பின்னால் விடவில்லை". "Open science, leaving no one behind"

7. 1947 ஆம் ஆண்டில் டெல்லியின் அகில இந்திய வானொலியின் ஸ்டுடியோவுக்கு தேசத்தின் தந்தை மகாத்மாகாந்தியின் முதல் மற்றும் கடைசி வருகையை நினைவுகூரும் வகையில் கொண்டாடப்படும் தினம் எது?

**விடை :** பொது சேவை ஒளிபரப்பு தினம்


We Shine Academy™

**விளக்கம்**

- **பொது சேவை ஒளிபரப்பு தினம்** ஒவ்வொரு ஆண்டும் **நவம்பர் 12** அன்று கொண்டாடப்படுகிறது.
    - 1947 ஆம் ஆண்டில் டெல்லியின் அகில இந்திய வானொலியின் ஸ்டுடியோவுக்கு தேசத்தின் தந்தை மகாத்மா காந்தியின் முதல் மற்றும் கடைசி வருகையை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
    - இந்திய துணைக்கண்டம் பிரிந்த பின்னர் ஹரியானாவின் குருஷேத்ராவில் தற்காலிகமாக குடியேறிய பாகிஸ்தானில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை தேசத்தின் தந்தை உரையாற்றினார்.

8. 2019 ஆம் ஆண்டிற்கான உலக நிமோனியா தினத்தின் கருத்துரு என்ன?

**விடை :** அனைவருக்கும் ஆரோக்கியமான நுரையீரல் (Healthy Lungs for all) ஆகும்.

**விளக்கம்**

- **உலக நிமோனியா தினம் நவம்பர் 12** அன்று அனுசரிக்கப்படுகிறது. நிமோனியாவுக்கு எதிராக போராடுவதே இதன் நோக்கம். இது நிமோனியா நோய், அதன் அறிகுறிகள், காரணங்கள் மற்றும் சிகிச்சை பற்றிய விழிப்புணர்வையும் உருவாக்குகிறது.

9. உலக நீரிழிவு தினம் எந்த ஆண்டு அதிகாரப்பூர்வமாக ஐக்கிய நாடுகள் தினமாக மாறியது?

**விடை :** 2006

**விளக்கம்**

- **உலக நீரிழிவு தினம் (WDD) நவம்பர் 14** அன்று உலகளவில் அனுசரிக்கப்பட்டது. நீரிழிவு விழிப்புணர்வு மாதம் மற்றும் உலக நீரிழிவு தினம் 2019 இன் கருத்துரு "குடும்பம் மற்றும் நீரிழிவு"
    - Theme 2019 : Family and Diabetes

**விளக்கம்**

- **நவம்பர் 16 தேசிய பத்திரிக்கையாளர் தினம்**
    - பிரஸ் கவுன்சில் ஆ.்.ப் இந்தியா தொடங்கப்பட்ட தினமான நாள் இந்தியா முழுவதும் தேசிய பத்திரிக்கையாளர் தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 1996 ஆம் ஆண்டு முதல் நவம்பர் 16 ஆம் நாள் இந்தியாவெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

13. உலக மரபு வாரம் என்று அனுசரிக்கப்படுகிறது?

**விடை :** நவம்பர் 19-ஆம் தேதி முதல் நவம்பர் 25

**விளக்கம்**

- **உலக மரபு வாரம் நவம்பர் 19-ஆம் தேதி முதல் 25-**ஆம் தேதி வரை நடைபெறவுள்ளதை முன்னிட்டு தமிழகத்திலுள்ள முக்கிய புராதனச் சின்னங்களைப் பார்வையிட பொது மக்களுக்கு இலவச அனுமதி அளிக்கப்பட உள்ளது.

14. "சாலை போக்குவரத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உலக நினைவு நாள்" என்று அனுசரிக்கப்படுகிறது?

**விடை :** நவம்பர் 17

**விளக்கம்**

- ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வொரு ஆண்டும் **நவம்பர் 17** அன்று **"சாலை போக்குவரத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உலக நினைவு நாள்"** அனுசரிக்கிறது.
    - சாலை விபத்துக்களைக் குறைப்பதற்கான உலகளாவிய முயற்சிகளில் இந்த நாள் ஒரு முக்கியமான கருவியாக மாறியுள்ளது.

15. உலக கழிவறை தினம் என்று கொண்டாடப்படுகிறது?

**விடை :** நவம்பர் 19

**விளக்கம்**

- **உலக கழிவறை தினம்** (World Toilet Day ) ஒவ்வொரு ஆண்டும் **நவம்பர் 19** அன்று கொண்டாடப்படுகிறது.
    - உலகளாவிய துப்புரவு நெருக்கடியைச் சமாளிப்பதற்கும், நிலையான அபிவிருத்தி இலக்கை அடைய உதவுவதற்கும் இது ஊக்கமளிக்கும் நடவடிக்கை பற்றியது, இது 2030க்குள் அனைவருக்கும் சுகாதாரத்தை உறுதியளிக்கிறது.
    - உலக கழிவறை தினம் 2019 அந்த மக்கள் துப்புரவு இல்லாமல் விடப்படுவதை கவனத்தில் கொண்டு வருகிறது. இருப்பினும் இது 2013 வரை ஐ.நா.வின் அதிகாரப்பூர்வ நாளாக முறையாக அங்கீகரிக்கப்படவில்லை.
    - 2019 யின் கருப்பொருள் : யாரையும் விட்டு விலகாமல்

16. தேசிய ஒருமைபாட்டு தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

**விடை :** நவம்பர் 19

**விளக்கம்**

- **நவம்பர் 19, தேசிய ஒருமைபாட்டு தினமாக** அனுசரிக்கப்படுகிறது. (National Integration day)
    - **செய்தி துளிகள்:**
        - இந்நாள் இந்தியாவின் முதல் பெண் பிரதமரான இந்திரா காந்தி அவர்களின் பிறந்த நாள் என்பது குறிப்பிடத்தக்கது.
        - இந்தியா முழுவதும் உள்ள மக்களிடையே அன்பையும் ஒற்றுமையையும் மேம்படுத்த இந்நாள் கொண்டாடப்படுகிறது.

17. 2019 ஆண்டின் சர்வதேச ஆண்கள் தினத்திற்கான கருப்பொருள் என்ன?

**விடை :** "ஆண்கள் (ம) சிறுவர்களுக்காக ஒரு வித்தியாசத்தை உருவாக்குதல்" (Making a difference for men & boys)

**விளக்கம்**

- **சர்வதேச ஆண்கள் தினம் நவம்பர் 19** அன்று அனுசரிக்கப்படுகிறது.
    - இந்நாள் ஆண்கள் (ம) சிறுவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல், பாலின உறவுகளை மேம்படுத்துதல் (ம) பாலின சமத்துவத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.
    - **செய்தி துளிகள்:**
        - இந்நாள் முதன் முதலில் 1999 ஆம் ஆண்டு டாக்டர் ஜெ.ரோம் டீலுக்சிங் (Dr. Jerome Teelucksingh) அவர்களால் அறிமுகப்படுத்தபட்டது.
        - 2019 கருப்பொருள் : "ஆண்கள் (ம) சிறுவர்களுக்காக ஒரு வித்தியாசத்தை உருவாக்குதல்"
        - Theme for 2019 : Making a difference for men & boys

18. ஆப்பிரிக்கா தொழில்மயமாக்கல் தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

**விடை :** நவம்பர் 20

**விளக்கம்**

- **ஆப்பிரிக்கா தொழில்மயமாக்கல் தினம்** ஒவ்வொரு ஆண்டும் **நவம்பர் 20** அன்று கொண்டாடப்படுகிறது.
    - பல ஆப்பிரிக்க நாடுகளில் உள்ள அரசாங்கங்களும் பிற அமைப்புகளும் ஆப்பிரிக்காவின் தொழில்மயமாக்கல் செயல்முறையைத் தூண்டுவதற்கான வழிகளை ஆராயும் காலம் இது.
    - 2019 கருப்பொருள்: "ஆப்பிரிக்க தொழில்துறையை ஆப்கிஃப்டிஏ சந்தைக்கு வழங்குவது"

19. உலக குழந்தைகள் தினம் என்று கொண்டாடப்படுகிறது?

**விடை :** நவம்பர் 20

**விளக்கம்**



We Shine Academy™

- **உலக குழந்தைகள் தினம்** முதன்முதலில் 1954 ஆம் ஆண்டில் **நவம்பர் 20** ஆம் தேதியை யுனிவர்சல் குழந்தைகள் தினமாக நிறுவப்பட்டது மற்றும் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 20 ஆம் தேதி சர்வதேச ஒற்றுமை, உலகளாவிய குழந்தைகளிடையே விழிப்புணர்வு மற்றும் குழந்தைகளின் நலனை மேம்படுத்துவதற்காக கொண்டாடப்படுகிறது.

20. உலக தத்துவ தினத்தை யுனெஸ்கோ எந்த ஆண்டில் அறிமுகப்படுத்தியது?

**விடை** : 2002

**விளக்கம்**

- **உலக தத்துவ தினம்** ஒவ்வொரு ஆண்டும் **நவம்பர் மூன்றாவது வியாழக்கிழமை** உலகளவில் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு இது நவம்பர் 21 அனுசரிக்கப்பட்டது.
    - இந்த நாளில், யுனெஸ்கோ மனித சிந்தனையின் வளர்ச்சிக்கான தத்துவத்தின் மதிப்பை, ஒவ்வொரு கலாச்சாரத்திற்கும் தனிநபருக்கும் எடுத்துரைத்தது.

21. தேசிய மாணவர் படை தினம் எப்போது கடைபிடிக்கப்படுகிறது?

**விடை** : நவம்பர் 24

**விளக்கம்**

- **தேசிய மாணவர் படை தினம் - நவம்பர் 24**
    - "ஒற்றுமை மற்றும் ஒழுக்கம்" என்பதை குறிக்கோளாக கொண்டு தேசிய மாணவர் படை 1948-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
        - இந்திய தேசிய மாணவர் படைச் சட்டம் 1948 இதன் தோற்றத்திற்கு காரணமாக அமைந்தது.
        - தேசிய மாணவர் படையின் கீழ் 3 பெரும் பிரிவுகள் உள்ளன.

        1. தரைப்படை அணி
        2. வான்படை அணி

We Shine Academy™

3. கடற்படை அணி

- ○ **செய்தி துளிகள்**
    - ▪ 1965 மற்றும் 1971-ம் ஆண்டு இந்தியா – பாகிஸ்தான் போரில் இரண்டாம் வரிசை அணியாக தேசிய மாணவர் படை அணி செயல்பட்டது.

22. இந்திய அரசியலமைப்பு தினம் எந்த ஆண்டு நிறுவப்பட்டது?

**விடை :** 2015

**விளக்கம்**

- ஒவ்வொரு ஆண்டும் **நவம்பர் 26 ஆம் தேதி இந்திய அரசியலமைப்பு தினம்** (அ) சம்விதன் திவாஸ் அனுசரிக்கப்படுகிறது.
    - ○ **செய்தி துளிகள்:**
        - ▪ 1949 ஆம் ஆண்டில் இந்த நாளில், இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு 1950 ஜனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்தது. மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் (எம்.எஸ்.ஜே.இ) அரசியலமைப்பு தின கொண்டாட்டத்தை அறிமுகப்படுத்தியது.
        - ▪ நவம்பர் 26-அரசியலமைப்பு தினத்தின் நான்காவது பதிப்பாகும் (அரசியலமைப்பை ஏற்றுக்கொண்ட 70வது ஆண்டுவிழா) இது 2015 அக்டோபரில் நிறுவப்பட்டது, இது சட்டமன்றத்தின் வரைவுக் குழுவின் தலைவர் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் 125 வது பிறந்த ஆண்டு விழாவின் நாடு தழுவிய கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக நிறுவப்பட்டது.

23. தேசிய பால் தினமாக யாருடைய பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது?

**விடை :** வர்கீஸ் குரியன்

**விளக்கம்**

- ஒவ்வொரு ஆண்டும் **நவம்பர் 26 ஆம் தேதி டாக்டர் வெர்கீஸ் குரியனின் பிறந்த நாளில் தேசிய பால் தினம்** நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் இந்தியாவில் வெள்ளை புரட்சியின் தந்தை வர்கீஸ் குரியனின் பிறந்த நாளைக் குறிக்கிறது. இந்த ஆண்டு டாக்டர் குரியனின் 98 வது பிறந்த நாளை இந்தியா கொண்டாடப்படுகிறது.

24. எந்த ஆண்டு ஐ.நா. பொதுச் சபை பாலஸ்தீனத்தை ஒரு அரபு அரசு மற்றும் யூத அரசாகப் (Jewish State) பிரிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது?

**விடை :** 1947

**விளக்கம்**

- **பாலஸ்தீனிய மக்களுடனான சர்வதேச ஒற்றுமை தினத்தை நினைவுகூரும் வகையில் 27 நவம்பர்** அன்று நியூயார்க்கில் உள்ள சர்வதேச சமூகத்தின் தூதர்கள் மற்றும் பிற பிரதிநிதிகளுடன் மூத்த அதிகாரிகள் இணைந்தனர், ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 29 அன்று அதிகாரப்பூர்வமாக அனுசரிக்கப்பட்டது.
    - **செய்தி துளிகள்:**
        - 1977 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இது 1947 ஆம் ஆண்டில் ஐ.நா. பொதுச் சபை பாலஸ்தீனத்தை ஒரு அரபு அரசு மற்றும் யூத அரசாகப் (Jewish State) பிரிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றிய நாளைக் குறிக்கிறது.

## பாதுகாப்பு செய்திகள்

1. இந்திய கடற்படையின் முதல் பெண் விமானி யார்?

**விடை :** ஷிவாங்கி

**விளக்கம்**



We Shine Academy™

- **இந்திய கடற்படையின் முதல் பெண் விமானி என்ற பெருமையை ஷிவாங்கி பெற்றுள்ளார்.**
  - பிஹார் மாநிலம் முசாபர்பூரை சேர்ந்த இவர் கடந்த ஜூன் மாதம் இந்திய கடற்படையில் சேர்ந்தார்.
  - டிசம்பர் மாதம் 2-ம் தேதி முதல் கடற்கடையின் டோர்னியர் விமானத்தை இயக்க உள்ளார்.
    - **செய்தி துளிகள்:**
      - இந்தியாவின் 5-வது கடற்படை டோர்னியர் விமானப்படை தளம் கடந்த ஜூலை மாதம் சென்னையில் அமைக்கப்பட்டது.
      - இந்தியாவின் தற்போதைய கடற்படை தளபதி அட்மிரல் கரம்பீர் சிங் ஆவார்.

We Shine Academy™

**Useful Links**

Recent Exam Notifications :https://weshineacademy.com/updated-exam-notification/

Daily Current Affairs :http://weshineacademy.com/tnpsc-current-affairs/

Recent Update on Telegram :https://t.me/weshinedailyupdate

Useful YouTube Video :https://www.youtube.com/user/weshineacademy

Apply for South Central Railway Apprentice Exam : https://weshineacademy.com/south-central-railway-apprentice-recruitment-notification-2019/